நெடுங்காலமாக என்னைப் பிடித்து அல்லல் படுத்துகின்றாய். ஆனால் உன் கொட்டம் நாளை அடங்கிவிடும். நாளை நான் திருநின்றையூரில் செல்வச் சீமானாக வாழும் வள்ளல் காளத்தி முதலியாரிடம் போனால் வறுமையே! நீ என்னை விட்டுப்பிரிந்து போய்விடுவாய்; பிறகு என்னிடம் ஒருகணம் இருக்க முடியாது. எனக்கு அவர் ஆயிரம் ஆயிரம் பொன் தருவார்; பட்டாடை தருவார்; ஆபரணங்கள் தருவார்; மாடுகள் நிலபுலங்கள் எல்லாம் தருவார். நான் லட்சாதிபதியாக ஆவேன். அப்போது தரித்திரமே நீ எங்கே? நான் எங்கே? இன்று ஒரு இரவு தானே. என்னுடன் இருந்துவிட்டுப் போ" என்ற கருத்துக்களையுடைய இந்த வெண்பாவைத் திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டிருந்தார்.

> நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழல்போலே
> நாளைக் கிருப்பையோ நல்குரவே—காளத்தி
> நின்றையூர் சென்றக்கால் நீயெங்கே நானெங்கே?
> இன்றைக்குச் சற்றே யிரு.

புலவர் பாடிய வெண்பாவை மற்றொருபுறம் இருந்த காளத்தி முதலியார் கேட்டார். அப்போது அவர் மனம் என்ன பாடு பட்டிருக்கும்? "பெண்ணே! இப்புலவர் பாவம்! வறுமையால் வாடுகின்றார் போலும்! நம்மை நாடி வருகின்றார். நாளை நம்மிடம் வந்தவுடன் வறுமை யகன்றுவிடும் என்று முழு நம்பிக்கையுடன் வறுமையை முன்னிலைப் படுத்தி இவ்வெண்பாவைப் பாடுகின்றார். இத்தகைய இவர் நமது ஊருக்குப் போனால் ஏமாந்து போவார். அங்கு ஆள் இல்லை யென்று சொல்லக் கூட ஆள் இல்லை. ஆகவே நாம் நமது வீட்டிற்கே போவோம். இவர் வந்தவுடன் இவரைப் பார்த்து இவருடைய துன்பத்தில் நாமும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறினார். விடியற்காலை புறப்பட்டார். கடு நடையாக நடந்து புலவருக்கு முன் திருநின்றையூர் வந்து தங்கள் மாளிகையைச் சேர்ந்தார்கள். சேர்ந்து புலவர் வந்தால் என்ன சொல்வது? புலவர் பொருள் கேட்பாரே? இல்லை என்றால் அவர் மனம் உடைந்து போகுமே? என்று பெருங் கவலையுடன் இருக்கின்றார்கள்.

அங்கே புலவர் காலையில் எழுந்தார். "என்னை வாட்டி வதக்கிய வறுமையே! இன்னும் சிலமணி நேரத்தில் நீ என்னை விட்டுக் கம்பி நீட்டப் போகின்றாய். உனக்கு ஆயுள் முடிந்தது. இதோ போகின்றேன் திருநின்றையூருக்கு. வள்ளல் பெருமானைக் காண்பேன். வாரிவழங்குவார். குபேரனாகப்போகின்றேன்" என்று கூறிக்கொண்டே வந்தார். காளத்தி முதலியாரைக் கண்டார். "அண்ணலே! அடியேன் அருந் தமிழ்ப் புலவன்,

மிக்க வறுமையால் துக்கமுற்று வந்தேன். தக்க தருமசீலராகிய தங்களை யடைந்தேன். இனி எனக்கு ஒரு குறையுமில்லை" என்றார்.

முதலியார் அவரை அன்புடன் இன்முகங்காட்டி வரவேற்றார். "வாருங்கள்; இருங்கள்" என்றார். அவர் மனம் அப்போது என்ன பாடுபட்டிருக்கும்; அதனை ஆரால் அளக்கமுடியும்?

> "சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
> ஈதல் இயையாக் கடை"

என்கின்றார் தெய்வப்புலவர்.

மனிதனுக்கு மரணத்தைக் காட்டிலும் கொடியது யாதொன்றுமில்லை. ஆனால் வள்ளல்களுக்கு வழங்க முடியாத போது மரணந் தித்திக்குமாம். ஆதலால் காளத்தி முதலியார் உயிரை மாய்த்துக்கொள்ள நினைத்தார். வீட்டிற்குப் பின்புறத்தையடைந்தார். அங்கு ஒரு புற்று; அதில் ஒரு நல்ல நாகம் வாழ்கின்றதென்பதை அவர் அறிவார். அரவந் தீண்டி ஆருயிர் பிரியட்டும் என்று எண்ணினார். புற்றில் கையை விடுத்தார். அரவம் சீறி வந்தது. அள்ளிக்கொடுத்த வள்ளல் கைக்கு நஞ்சையா நல்குவது என்று எண்ணியது. தன் தலையில் உள்ள நாகரத்தினத்தை நல்கியது. வள்ளல் வீட்டுப் பாம்புக்கும் இந்த நற்குணம் அமைந்திருந்தது.

நாகரத்தினத்தைக் கொணர்ந்து புலவர்பால் நீட்டினார் முதலியார். புலவர் அளவற்ற மகிழ்ச்சியுடன் பெற்றார். "ஆ! ஆ! என்ன அன்பு? என்ன கருணை? பொன்னையும் பொருளையும் நிரம்பத் தந்தால் சுமந்து போவது கடினம் என்று கருதி கருணையுடன் உலகத்தை விலைமதிக்கும் இந்த நாக மாணிக்கத்தை நல்கினார். வள்ளலே வாழி; நீடூழி வாழி" என்று வாழ்த்தினார். நாகரத்தினத்தை எடுத்துக்கொண்டு மீண்டார்.

அம் மாணிக்கத்தைச் சாமானியமானவர் விலைக்கு வாங்க முடியாதல்லவா? காஞ்சிமா நகரை யாளுகின்ற பல்லவ மன்னவன்பால் சென்றார். நாகரத்தினத்தை அவன் முன் வைத்தார். "மன்னர் பெருமானே! உலகிலே எத்தனைச் சீமான்கள் இருக்கின்றார்கள். இருந்து என்ன பயன். எட்டி பழுத்து யாருக்கு என்ன பயன்? ஆ! ஆ! திருநின்றையூர் காளத்தி முதலியாரைப் போலே ஒரு புண்ணியமூர்த்தி யுண்டா? கொடை வள்ளல். காலையிலே சென்றேன். இந்த மாணிக்கத்தை அம் மனித மாணிக்கம் தந்தார். மதிப்பிட்டு விலையைத் தாரும்" என்றார்.

பல்லவன்கேட்டு அதிசயமுற்றான். நாணமும் அடைந்தான். "மந்திரிமார்களே! நீங்கள் முதலியாரிடம் பரிமுதல் சரிவரச் செய்யவில்லை போலும். இதோ பாருங்கள் இவருக்கு அவர் இம் மாணிக்கத்தைத் தந்தனர். இன்னும் எத்தனை மாணிக்கம்

[illegible] என்னைப் பிடித்து அல்லல் படுத்துகின்றாய். ஆனால் உன் கொட்டம் நாளை அடங்கிவிடும். நாளை நான் திருவின்றையூரில் செல்வச் சீமானாக வாழும் வள்ளல் காளத்தி முதலியாரிடம் போனால் வறுமையே! நீ என்னை விட்டுப்பிரிந்து போய்விடுவாய்; பிறகு என்னிடம் ஒருகணம் இருக்க முடியாது. எனக்கு அவர் ஆயிரம் ஆயிரம் பொன் தருவார்; பட்டாடை தருவார்; ஆபரணங்கள் தருவார்; மாடுகள் நிலபுலங்கள் எல்லாம் தருவார். நான் லட்சாதிபதியாக ஆவேன். அப்போது தரித்திரமே நீ எங்கே? நான் எங்கே? இன்று ஒரு இரவு தானே. என்னுடன் இருந்துவிட்டுப் போ" என்ற கருத்துக்களையுடைய இந்த வெண்பாவைத் திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டிருந்தார்.

நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழல்போலே
நாளைக் கிருப்பையோ நல்குரவே—காளத்தி
நின்றையூர் சென்றக்கால் நீயெங்கே நானெங்கே?
இன்றைக்குச் சற்றே யிரு.

புலவர் பாடிய வெண்பாவை மற்றொருபுறம் இருந்த காளத்தி முதலியார் கேட்டார். அப்போது அவர் மனம் என்ன பாடு பட்டிருக்கும்? "பெண்ணே! இப்புலவர் பாவம்! வறுமையால் வாடுகின்றார் போலும்! நம்மை நாடி வருகின்றார். நாளை நம்மிடம் வந்தவுடன் வறுமை யகன்றுவிடும் என்று முழு நம்பிக்கையுடன் வறுமையை முன்னிலைப் படுத்தி இவ்வெண்பாவைப் பாடுகின்றார். இத்தகைய இவர் நமது ஊருக்குப் போனால் ஏமாந்து போவார். அங்கு ஆள் இல்லை யென்று சொல்லக் கூட ஆள் இல்லை. ஆகவே நாம் நமது வீட்டிற்கே போவோம். இவர் வந்தவுடன் இவரைப் பார்த்து இவருடைய துன்பத்தில் நாமும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறினர். விடியற்காலை புறப்பட்டார். கடு நடையாக நடந்து புலவருக்கு முன் திருவின்றையூர் வந்து தங்கள் மாளிகையைச் சேர்ந்தார்கள். சேர்ந்து புலவர் வந்தால் என்ன சொல்வது? புலவர் பொருள் கேட்பாரே? இல்லை என்றால் அவர் மனம் உடைந்து போகுமே? என்று பெருங் கவலையுடன் இருக்கின்றார்கள்.

அங்கே புலவர் காலையில் எழுந்தார். "என்னை வாட்டி வதக்கிய வறுமையே! இன்னும் சிலமணி நேரத்தில் நீ என்னை விட்டுக் கம்பி நீட்டப் போகின்றாய். உனக்கு ஆயுள் முடிந்தது. இதோ போகின்றேன் திருவின்றையூருக்கு. வள்ளல் பெருமானைக் காண்பேன். வாரிவழங்குவார். குபேரனாகப்போகின்றேன்" என்று கூறிக்கொண்டே வந்தார். காளத்தி முதலியாரைக் கண்டார். "அண்ணலே! அடியேன் அருந் தமிழ்ப் புலவன்,

மிக்க வறுமையால் துக்கமுற்று வந்தேன். தக்க தருமசீலராகிய தங்களை யடைந்தேன். இனி எனக்கு ஒரு குறையுமில்லை" என்றார்.

முதலியார் அவரை அன்புடன் இன்முகங் காட்டி வரவேற்றார். "வாருங்கள்; இருங்கள்" என்றார். அவர் மனம் அப்போது என்ன பாடுபட்டிருக்கும்; அதனை ஆரால் அளக்கமுடியும்?

"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை"

என்கின்றார் தெய்வப்புலவர்.

மனிதனுக்கு மரணத்தைக் காட்டிலும் கொடியது யாதொன்றுமில்லை. ஆனால் வள்ளல்களுக்கு வழங்க முடியாத போது மரணம் தித்திக்குமாம். ஆதலால் காளத்தி முதலியார் உயிரை மாய்த்துக்கொள்ள நினைத்தார். வீட்டிற்குப் பின் புறத்தையடைந்தார். அங்கு ஒரு புற்று; அதில் ஒரு நல்ல நாகம் வாழ்கின்றதென்பதை அவர் அறிவார். அரவந் தீண்டி ஆருயிர் பிரியட்டும் என்று எண்ணினர். புற்றில் கையை விடுத்தார். அரவம் சீறி வந்தது. அள்ளிக்கொடுத்த வள்ளல் கைக்கு நஞ்சையா நல்குவது என்று எண்ணியது. தன் தலையில் உள்ள நாகரத்தினத்தை நல்கியது. வள்ளல் வீட்டுப் பாம்புக்கும் இந்த நற்குணம் அமைந்திருந்தது.

நாகரத்தினத்தைக் கொணர்ந்து புலவர்பால் நீட்டினர் முதலியார். புலவர் அளவற்ற மகிழ்ச்சியுடன் பெற்றார். "ஆ! ஆ! என்ன அன்பு? என்ன கருணை? பொன்னையும் பொருளையும் நிரம்பத் தந்தால் சுமந்து போவது கடினம் என்று கருதி கருணையுடன் உலகத்தை விலைமதிக்கும் இந்த நாக மாணிக்கத்தை நல்கினர். வள்ளலே வாழி; நீடூழி வாழி" என்று வாழ்த்தினர். நாகரத்தினத்தை எடுத்துக்கொண்டு மீண்டார்.

அம் மாணிக்கத்தைச் சாமானியமானவர் விலைக்கு வாங்க முடியாதல்லவா? காஞ்சிமா நகரை யாளுகின்ற பல்லவ மன்னவன்பால் சென்றார். நாகரத்தினத்தை அவன் முன் வைத்தார். "மன்னர் பெருமானே! உலகிலே எத்துணைச் சீமான்கள் இருக்கின்றார்கள். இருந்து என்ன பயன். எட்டி பழுத்து யாருக்கு என்ன பயன்? ஆ! ஆ! திருவின்றையூர் காளத்தி முதலியாரைப் போலே ஒரு புண்ணியமூர்த்தி யுண்டா? கொடை வள்ளல். காலையிலே சென்றேன். இந்த மாணிக்கத்தை அம் மனித மாணிக்கம் தந்தார். மதிப்பிட்டு விலையைத் தாரும்" என்றார்.

பல்லவன்கேட்டு அதிசயமுற்றான். நாணமும் அடைந்தான். "மந்திரிமார்களே! நீங்கள் முதலியாரிடம் பறிமுதல் சரிவரச் செய்யவில்லை போலும். இதோ பாருங்கள் இவருக்கு அவர் இம் மாணிக்கத்தைத் தந்தனர். இன்னும் எத்தனை மாணிக்கம்

...வைத்திருக்கின்றனரோ? நானே சென்று பறிமுதல் புரிந்து ...றேன்" என்றான். புலவர் அமைச்சர் சூழத் திருவேற்றை ...ச் சென்றான். முதலியாரைக் கண்டான். "இதுபோன்ற மாணிக்கம் இன்னும் எத்தனை யுள்ளன?" என்று வினவினான்.

முதலியார் முறுவல் புரிந்தார். "பல்லவனே! என்னிடம் பல் ...த்தும் சிறு துரும்பும் இடைமார்து. எல்லாவற்றையும் உனது ஏவலர் அறமின்றி மறத்துடன் பறித்துக்கொண்டார் ...ன். இன்று இப்புலவர் வந்தார். இல்லையென்று கூற என் மனம் இடந்தரவில்லை. இதோ இருக்கின்ற புற்றிலே கையை விட்டேன். என்விட்டு நாகம் தந்தது இம்மாணிக்கத்தை" என்றார்.

மன்னனுக்கு நம்பிக்கையில்லை. "உண்மையாகவா? உமது வீட்டுப் பாம்பு தந்ததா! நல்ல நாகத்தினிடம் இரண்டு ரத்தினங்கள் உண்டு. ஒன்று நாகரத்தினம், ஒன்று ஜீவரத்தினம். அந் நாகத்தினிடம் உள்ள ஜீவரத்தினத்தைக் கேட்டு எனக்கு வாங்கிக் கொடும்" என்றான்.

காளத்தி முதலியார் புற்றினிடம் போனார். எல்லோரும் இமையாது நோக்கி நின்றார்கள். "ஏ நாகமே! நான் உன்னைக் கேட்கின்றேன். இம்மன்னனுக்கு ஜீவரத்தினம் வேண்டுமாம். கொடு" என்றார். நாகம் வெளிவந்து அவர் பாதத்தில் ஜீவரத்தினத்தை வைத்து மாண்டுவிட்டது. இந்த அதிசயத்தைக் கண்ட அனைவரும் கண்ணீர் வடித்தார்கள். மன்னவன் நாணினான். அவர் அடிமலர்மீது வீழ்ந்து வணங்கினான். பறிமுதல் செய்தவைகளை நல்கினான். அவர் முன்போல் இரந்தவர்க்கீந்து கடமையை யாற்றிப் புகழுடம்பு தாங்கினார்.

அந்திப்போ தழகுறவே நடித்தருளும்
வழித்துணைவ ரருளுங் கோவை
வந்திப்போர் நினைத்தபடி மயிலேறி
யயிலெடுத்து வருஞ்செவ் வேளைச்
சந்திப்போம் மலர்சொரிவோம் புகழ்ந்திடுவோம்
அவன்கமலத் தாளுந் தோளுஞ்
சிந்திப்போம் ஆதலினல் நமதுபழ
வினைகளெல்லாஞ் சிந்திப் போமே.

— திருவிரிஞ்சைப் புராணம்.

உ
ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

"திருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்பேற்ற...
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 21 } துன்முகி ஆண்டு ஆவணித் திங்க...
ஆகஸ்டு-1956

திருப்புகழ்

திருச்செந்தூர்...

சத்தமிகு மேழுகட லைத்தேனை ...
உற்றமது தோடுகனை ...
சத்திதனை மாவின்வடு...

தக்கமணம் வீசுகம ல...
மிக்கவினை வால...
தத்துகளும் ...

மத்தகிரி போலுமெ...
முத்துவட ...
வச்சிரகி ...

வைத்தகொ...
பத்...
வ...

சித்ரவ...

நெடுங்காலமாக என்னைப் பிடித்து அல்லல் படுத்துகின்றாய். ஆனால் உன் கொட்டம் நாளை அடங்கிவிடும். நாளை நான் திருநின்றையூரில் செல்வச் சீமானாக வாழும் வள்ளல் காளத்தி முதலியாரிடம் போனால் வறுமையே! நீ என்னை விட்டுப்பிரிந்து போய்விடுவாய்; பிறகு என்னிடம் ஒருகணம் இருக்க முடியாது. எனக்கு அவர் ஆயிரம் ஆயிரம் பொன் தருவார்; பட்டாடை தருவார்; ஆபரணங்கள் தருவார்; மாடுகள் நிலபுலங்கள் எல்லாம் தருவார். நான் லட்சாதிபதியாக ஆவேன். அப்போது தரித்திரமே நீ எங்கே? நான் எங்கே? இன்று ஒரு இரவு தானே. என்னுடன் இருந்துவிட்டுப் போ" என்ற கருத்துக்களையுடைய இந்த வெண்பாவைத் திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டிருந்தார்.

நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழல்போலே
நாளைக் கிருப்பையோ நல்குரவே—காளத்தி
நின்றையூர் சென்றக்கால் நீயெங்கே நானெங்கே?
இன்றைக்குச் சற்றே யிரு.

புலவர் பாடிய வெண்பாவை மற்றொருபுறம் இருந்த காளத்தி முதலியார் கேட்டார். அப்போது அவர் மனம் என்ன பாடு பட்டிருக்கும்? "பெண்ணே! இப்புலவர் பாவம்! வறுமையால் வாடுகின்றார் போலும்! நம்மை நாடி வருகின்றார். நாளை நம்மிடம் வந்தவுடன் வறுமை யகன்றுவிடும் என்று முழு நம்பிக்கையுடன் வறுமையை முன்னிலைப் படுத்தி இவ்வெண்பாவைப் பாடுகின்றார். இத்தகைய இவர் நமது ஊருக்குப் போனால் ஏமாந்து போவார். அங்கு ஆள் இல்லை யென்று சொல்லக் கூட ஆள் இல்லை. ஆகவே நாம் நமது வீட்டிற்கே போவோம். இவர் வந்தவுடன் இவரைப் பார்த்து இவருடைய துன்பத்தில் நாமும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறினார். விடியற்காலை புறப்பட்டார். கடு நடையாக நடந்து புலவருக்கு முன் திருநின்றையூர் வந்து தங்கள் மாளிகையைச் சேர்ந்தார்கள். சேர்ந்து புலவர் வந்தால் என்ன சொல்வது? புலவர் பொருள் கேட்பாரே? இல்லை என்றால் அவர் மனம் உடைந்து போகுமே? என்று பெருங் கவலையுடன் இருக்கின்றார்கள்.

அங்கே புலவர் காலையில் எழுந்தார். "என்னை வாட்டி வதக்கிய வறுமையே! இன்னும் சிலமணி நேரத்தில் நீ என்னை விட்டுக் கம்பி நீட்டப் போகின்றாய். உனக்கு ஆயுள் முடிந்தது. இதோ போகின்றேன் திருநின்றையூருக்கு. வள்ளல் பெருமானைக் காண்பேன். வாரிவழங்குவார். குபேரனாகப்போகின்றேன்" என்று கூறிக்கொண்டே வந்தார். காளத்தி முதலியாரைக் கண்டார். "அண்ணலே! அடியேன் அருந் தமிழ்ப் புலவன்,

மிக்க வறுமையால் துக்கமுற்று வந்தேன். தக்க தருமசீலராகிய தங்களை யடைந்தேன். இனி எனக்கு ஒரு குறையுமில்லை" என்றார்.

முதலியார் அவரை அன்புடன் இன்முகங் காட்டி வரவேற்றார். "வாருங்கள்; இருங்கள்" என்றார். அவர் மனம் அப்போது என்ன பாடுபட்டிருக்கும்; அதனை ஆரால் அளக்கமுடியும்?

"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை"

என்கின்றார் தெய்வப்புலவர்.

மனிதனுக்கு மரணத்தைக் காட்டிலும் கொடியது யாதொன்றுமில்லை. ஆனால் வள்ளல்களுக்கு வழங்க முடியாத போது மரணம் தித்திக்குமாம். ஆதலால் காளத்தி முதலியார் உயிரை மாய்த்துக்கொள்ள நினைத்தார். வீட்டிற்குப் பின் புறத்தையடைந்தார். அங்கு ஒரு புற்று; அதில் ஒரு நல்ல நாகம் வாழ்கின்றதென்பதை அவர் அறிவார். அரவந் தீண்டி ஆருயிர் பிரியட்டும் என்று எண்ணினார். புற்றில் கையை விடுத்தார். அரவம் சீறி வந்தது. அள்ளிக்கொடுத்த வள்ளல் கைக்கு நஞ்சையா நல்குவது என்று எண்ணியது. தன் தலையில் உள்ள நாகரத்தினத்தை நல்கியது. வள்ளல் வீட்டுப் பாம்புக்கும் இந்த நற்குணம் அமைந்திருந்தது.

நாகரத்தினத்தைக் கொணர்ந்து புலவர்பால் நீட்டினார் முதலியார். புலவர் அளவற்ற மகிழ்ச்சியுடன் பெற்றார். "ஆ! ஆ! என்ன அன்பு? என்ன கருணை? பொன்னையும் பொருளையும் நிரம்பத் தந்தால் சுமந்து போவது கடினம் என்று கருதி கருணையுடன் உலகத்தை விலைமதிக்கும் இந்த நாக மாணிக்கத்தை நல்கினார். வள்ளலே வாழி; நீடூழி வாழி" என்று வாழ்த்தினார். நாகரத்தினத்தை எடுத்துக்கொண்டு மீண்டார்.

அம் மாணிக்கத்தைச் சாமானியமானவர் விலைக்கு வாங்க முடியாதல்லவா? காஞ்சிமா நகரை யாளுகின்ற பல்லவ மன்னவன்பால் சென்றார். நாகரத்தினத்தை அவன் முன் வைத்தார். "மன்னர் பெருமானே! உலகிலே எத்தனைச் சீமான்கள் இருக்கின்றார்கள். இருந்து என்ன பயன். எட்டி பழுத்து யாருக்கு என்ன பயன்? ஆ! ஆ! திருநின்றையூர் காளத்தி முதலியாரைப் போலே ஒரு புண்ணியமூர்த்தி யுண்டா? கொடை வள்ளல். காலையிலே சென்றேன். இந்த மாணிக்கத்தை அம் மனித மாணிக்கம் தந்தார். மதிப்பிட்டு விலையைத் தாரும்" என்றார்.

பல்லவன்கேட்டு அதிசயமுற்றான். நாணமும் அடைந்தான். "மந்திரிமார்களே! நீங்கள் முதலியாரிடம் பறிமுதல் சரிவரச் செய்யவில்லை போலும். இதோ பாருங்கள் இவருக்கு அவர் இம் மாணிக்கத்தைத் தந்தனர். இன்னும் எத்தனை மாணிக்கம்

வைத்திருக்கின்றனரோ? நானே சென்று பறிமுதல் புரிந்து வருவேன்" என்றான். புலவர் அமைச்சர் சூழத் திருவின்றையூர் சென்றான். முதலியாரைக் கண்டான். "இதுபோன்ற மாணிக்கம் இன்னும் எத்தனை யுள்ளன?" என்று வினவினான்.

முதலியார் முறுவல் புரிந்தார். "பல்லவனே! என்னிடம் பல் குத்தும் சிறு துரும்பும் இடையாது. எல்லாவற்றையும் உனது ஏவலர் அறமின்றி மறத்துடன் பறித்துக்கொண்டார்கள். இன்று இப்புலவர் வந்தார். இல்லையென்று கூற என் மனம் இடம் தரவில்லை. இதோ இருக்கின்ற புற்றிலே கையை விட்டேன். என் வீட்டு நாகம் தந்தது இம் மாணிக்கத்தை" என்றார்.

மன்னனுக்கு நம்பிக்கையில்லை. "உண்மையாகவா? உமது வீட்டுப் பாம்பு தந்ததா! நல்ல நாகத்தினிடம் இரண்டு ரத்தினங்கள் உண்டு. ஒன்று நாகரத்தினம். ஒன்று ஜீவரத்தினம். அந் நாகத்தினிடம் உள்ள ஜீவரத்தினத்தைக் கேட்டு எனக்கு வாங்கிக் கொடும்" என்றான்.

காளத்தி முதலியார் புற்றினிடம் போனார். எல்லோரும் இமையாது நோக்கி நின்றார்கள். "ஏ நாகமே! நான் உன்னைக் கேட்கின்றேன். இம்மன்னனுக்கு ஜீவரத்தினம் வேண்டுமாம். கொடு" என்றார். நாகம் வெளிவந்து அவர் பாதத்தில் ஜீவ ரத்தினத்தை வைத்து மாண்டுவிட்டது. இந்த அதிசயத்தைக் கண்ட அனைவரும் கண்ணீர் வடித்தார்கள். மன்னவன் நாணினான். அவர் அடிமலர்மீது வீழ்ந்து வணங்கினான். பறிமுதல் செய்தவைகளை நல்கினான். அவர் முன்போல் இரந்தவர்க்கீந்து கடமையை யாற்றிப் புகழுடம்பு தாங்கினார்.

அந்திப்போ தழகுறவே நடித்தருளும்
　　வழித்துணைவ ரருளுங் கோவை
வந்திப்போர் நினைத்தபடி மயிலேறி
　　யயிலெடுத்து வருஞ்செவ் வேளைச்
சந்திப்போம் மலர்சொரிவோம் புகழ்ந்திடுவோம்
　　அவன்கமலத் தாளுந் தோளுஞ்
சிந்திப்போம் ஆதலினால் நமதுபழ
　　வினைகளெல்லாஞ் சிந்திப் போமே.

— திருவிரிஞ்சைப் புராணம்.

உ
ஓம் குஹாய நம:



திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் முன்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 21 | துன்முகி ஆண்டு ஆவணித் திங்கள் ஆகஸ்டு-1956 | இதழ் 5

திருப்புகழ்

திருச்செந்தூர்

சத்தமிகு மேழுகட லைத்தேனை
　　உற்றமது தோடுகனை யைப்போர்கொள்
　　சத்திதனை மாவின்வடு வைக்காவி　　தனைமீறு

தக்கமணம் வீசுகம லப்பூவை
　　மிக்கவிளை வானகடு வைச்சீறு
　　தத்துகளும் வாளையடு மைப்பாவு விழிமாதர்

மத்தகிரி போலுமொளிர் வித்தார
　　முத்துவட மேவுமெழில் மிக்கான
　　வச்சிரகி ரீடநிகர் செப்பான　　தனமீதே

வைத்தகொடி தானமயல் விட்டான
　　பத்திசெய ஏழையடி மைக்காக
　　வஜ்ரமயில் மீதிலினி யெப்போது வருவாயே

சித்ரவடி வேல்பனிரு கைக்கார
　　பத்திபுரி வோர்கள்பணு வற்கார
　　திக்கினு நடாவுபுர விக்கார　　குறமாது

வைத்திருக்கின்றனரோ? நானே சென்று பறிமுதல் புரிந்து வருவேன்'' என்றான். புலவர் அமைச்சர் சூழத் திருநின்றையூர் சென்றான். முதலியாரைக் கண்டான். "இதுபோன்ற மாணிக்கம் இன்னும் எத்தனை யுள்ளன?'' என்று வினவினான்.

முதலியார் முறுவல் புரிந்தார். "பல்லவனே! என்னிடம் பல் குத்தும் சிறு துரும்பும் இடையர்து. எல்லாவற்றையும் உனது ஏவலர் அறமின்றி மறத்துடன் பறித்துக்கொண்டார்கள். இன்று இப்புலவர் வந்தார். இல்லையென்று கூற என் மனம் இடம் தரவில்லை. இதோ இருக்கின்ற புற்றிலே கையை விட்டேன். என் வீட்டு நாகம் தந்தது இம் மாணிக்கத்தை'' என்றார்.

மன்னனுக்கு நம்பிக்கையில்லை. "உண்மையாகவா? உமது வீட்டுப் பாம்பு தந்ததா! நல்ல நாகத்தினிடம் இரண்டு ரத்தினங்கள் உண்டு. ஒன்று நர்கரத்தினம், ஒன்று ஜீவரத்தினம். அந் நாகத்தினிடம் உள்ள ஜீவரத்தினத்தைக் கேட்டு எனக்கு வாங்கிக் கொடும்'' என்றான்.

காளத்தி முதலியார் புற்றினிடம் போனார். எல்லோரும் இமையாது நோக்கி நின்றார்கள். "ஏ நாகமே! நான் உன்னைக் கேட்கின்றேன். இம்மன்னனுக்கு ஜீவரத்தினம் வேண்டுமாம். கொடு'' என்றார். நாகம் வெளிவந்து அவர் பாதத்தில் ஜீவரத்தினத்தை வைத்து மாண்டுவிட்டது. இந்த அதிசயத்தைக் கண்ட அனைவரும் கண்ணீர் வடித்தார்கள். மன்னவன் நாணினான். அவர் அடிமலர்மீது வீழ்ந்து வணங்கினான். பறிமுதல் செய்தவைகளை நல்கினான். அவர் முன்போல் இரந்தவர்க்கீந்து கடமையை யாற்றிப் புகழுடம்பு தாங்கினார்.

அந்திப்போ தழகுறவே நடித்தருளும்
வழித்துணைவ ரருளுங் கோவை
…

உ
ஓம் குஹாய நம :



திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் குன்போற்றுநந் திருப்புகழைக் கேளீர் தினம்''

மலர் 21 | துன்முகி ஆண்டு ஆவணித் திங்கள் ஆகஸ்டு-1956

திருப்புகழ்

திருச்செந்தூர்

சத்தமிகு மேழுகட லைத்தேனை
உற்றமது தோடுகனை யைப்போர்கொ…
சத்திதனை மாவின்வடு வைக்காவி
தக்கமணம் வீசுகம லப்பூவை
மிக்கவிளை வானகடு வைச்சீறு
தத்துகளும் வானையடு மைப்பாவு…
மத்தகிரி போலு…
மூத்துவ…
வச்சிர…
வைத்த…
சித்ர…

...கார
...ல கக்கார
...ரி தக்கார; அடியார்கள்
...ணக்கார
...ரி தைக்கார
...க்கார இனிதான
...சைக்கார
...புரி சைக்கார
...கர்முத்தேவர்பெருமாளே.

...ரை

... - அழகிய கூர்மையான வேலா
...ரங்களை யுடையவரே! பக்தி புரி
...ப்வோர்களுடைய நூலில் விளங்கு
...திசைகள் தோறும் நடாத்துகின்ற
...ர! குறமாது சித்த அநுராக கலவி
...போடு மருவுகின்ற மணவாளரே!
...ய அசுரர் தலைவர்களுடன் போர்
...கார - உத்தமர்களைக் காத்தலையே
... அடியார்கள் முத்திபெற சொல்
...த்திபெறுமாறு உபதேசிக்கின்ற
...கர் தூய வநிதைகார - கிளியைப்
...வயானையின் கணவரே! முச்சகர்
...களும் துதிக்கின்ற திருவடியை
...ம மயமான, முத்தமிழை ஆயும்
...ஆராய்கின்ற சிறப்புடையவரே!
...சை நிறமான மேகங்கள் தவழு
...திருக்கோயில்களை யுடையவரே!
... கரையில் உருளுகின்ற
...ல் எழுந்தருளியுள்ள, மூதேவர் -
...ற, பெருமாளே - பெருமையிற்
... - ஓசை மிகுந்த எழு சமுத்திரங்
...து உற்ற தோடு - தேன் நிறைத்த
... போர் கொள் சக்திதனை - போர்
... - மாவடுவையும், காவி தனை -
...ம் வீசு கமலப்பூவை - மிகுந்த
... மலரையும், மிக்க விளைவான

கடுவை - நன்கு முதிர்ந்த நஞ்சையும், சேறு உதத்து உகளும் வாளை - சினத்துடன் நீரில் பாய்ந்து விளையாடும் வாளை மீனையும் நிகர்த்து, அடு - கொல்லும் தொழிலைக் கொண்டு, மை பாவும் விழிமாதர் - மைதீட்டிய கண்களையுடைய பொதுமகளிரினது, மத்தகிரி போலும் - மதம் பொழிகின்ற மலை போல பருத்து, ஒளிர் வித்தார - ஆபரணங்களுடன் கூடி ஒளி செய்து விசாலமுள்ளதாய்! முத்து வடமேவும் - முத்துமாலையுடையதாய், எழில் மிக்கான வச்சிரகிரீட நிகர் - அழகு மிகுந்த வஜ்ரமணி மகுடத்திற்குச் சமான முள்ளதாய், செப்பு ஆன சிமிழ் போன்றதாய் விளங்கும், தனமீதே - தனங்களின் மீது, வைத்த கொடிது ஆன மயல் விட்டு - மனம் வைத்துள்ள தீய மயக்கத்தை விடுத்து, ஆனபக்தி செய - ஆன்மாவுக்கே உரியதான அன்பு செய்யுமாறு, ஏழை அடிமைக்காக - அறிவில்லாத இந்த அடியேன் பொருட்டு, இனி வஜ்ரமயில் மீதில் - இனியாவது வஜ்ரம் போல் ஒளி செய்கின்ற மயிலின் மீது, எப்போது வருவாயே-எந்தக் காலம் வந்து ஆட்கொள்வீர்?

பொழிப்புரை

அழகிய கூரிய வேலை யேந்திய பன்னிருகைப் பரமனே...
அன்பு புரிவோர்கள் பாடிய நூல்களை யுடையவரே! திசைக...
தோறும் நடாத்துகின்ற மயிலாகிய குதிரையை யுடையவரே...
வள்ளிநாயகி உள்ளம் உவந்து மருவும் மணவாளரே! தீய அ...
வேந்தருடன் போர் புரிந்தவரே! நல்லவர்களைக் காத்து அவ...
ளுடன் ஆடல் புரிபவரே! அடியவர்கள் முத்திபெறுமா...
உபதேசிக்கின்ற சொற்களை யுடையவரே! கிளிபோன்ற தே...
தெய்வயானை யம்மையின் கணவரே! மூன்று உலகங்களும் து...
செய்கின்ற திருவடியை யுடையவரே! இனிமை நிறைந்த ...
தமிழை ஆராய்கின்ற மேன்மையினரே! பசிய மேகந் தவழ்கி...
மதிலையுடைய கோயிலில் விளங்குபவரே! முத்துக்கள் உ...
இன்ற கடற்கரையுடன் கூடிய செந்திலம்பதியில் எழுந்த...
யுள்ள மும்மூர்த்திகள் போற்றும் பெருமிதமுடைய...
ஓசை மிகுந்த எழுகடல், வண்டு தேன் மிகுந்த மலர்...
போர்புரிகின்ற வாள், மாவடு, கருங்குவளை, சிறந்த மண...
கின்ற தாமரை மலர், நன்கு முதிர்ந்த நஞ்சு, சேறி நீரில்...
யாடுகின்ற வாளை மீன், இவைகளை நிகர்த்து, கொ...
தன்மையுடன் மை தீட்டிய கண்களையுடைய பொது மக...
மதம்பொழிகின்ற மலைபோல் பருத்து ஆபரணங்களுடன்...
ஒளிசெய்து, விரிந்து, முத்துமாலை புனைந்து, அழகிய...
முடி போலவும் சிமிழ் போலவும் திகழ்கின்ற தனபார...
மீது மனம் வைத்து அதனால் வந்த கொடிய மயக்...
விடுத்து உமது திருவடியில் அன்பு செய்யுமாறு அ...
பொருட்டு வஜ்ரம்போல் ஒளி செய்யும் மயில் வாக...
மீது வந்து எந்நாள் காட்சி தருவீரோ?

விரிவுரை

உலகிலே மனிதர்கள் நந்தவனக் காட்சி, படக் காட்சி, மலைக் காட்சி, பொருட் காட்சி, நகரக் காட்சி இன்னும் பல காட்சிகளைக் காண வேண்டும் என்று ஓடுகின்றார்கள். பணம் செலவழிக்கின்றார்கள். நேரத்தைச் செல விடுகின்றார்கள். ஆவல் கொண்டு செல்வத்தையும் செலவழிக்கின்றார்கள். அந்தோ! இறைவனுடைய அருட்காட்சியைக் காண வேண்டு மென்ற ஒரு பெருந் துடிதுடிப்பு ஏற்படுகின்றதா! அதில் ஒரு வேகம் – தாகம் உண்டாகியிருக்கின்றதா? என்று உங்களை நீங்களே சோதித்துக் கொள்ளுங்கள். இல்லையானால் நாம் எத்துணை மதியீனமாக இருக்கின்றோம் என்று சிந்தியுங்கள். நல்ல படம் வந்துவிட்டதானால் வந்த அன்றைக்கே காண வேண்டும் என்று ஓடுகின்றார்கள். நுழைவுச் சீட்டுக்காகப் பல மணி நேரம் நடுவீதியில் நடுத்தெரு நாராயணா! என்று ஒருவர் ஒருவராக ஒட்டி நிற்கின்றார்கள். இறைவனுடைய திருவடிக் காட்சி பலகோடி வெண்மதி போல் திகழுமே! ஒவற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி அல்லவா அது? உறுநர்த்தாங்கிய மதன் (அறியாமையை) உடைக்கின்ற திருவடி யல்லவா அது?

உததியிடை கடவு மரகத வருண குலதுரக உபலளித கனகரத சத கோடி சூரியர்கள் உதயமென ஒரு சோதி வீசுவது அவன் திருவடி. ஆயிரங்கோடி மன்மதர்களுடைய அழகு அனைத்தும் ஒருங்கு கூடினாலும் செவ்வேட் பரம னுடைய தூய சேவடியின் ஒரு தூசுக்கு இணைவராதே? கண் ணாடிக் கல்லை மதித்து மாணிக்கத்தை எறிந்த மதியிலிபோல் அழகிய பொது மகளிரது புலால் உடம்பின் அழகைப் பெரிது என்று கருதி, அழியாத அழகிய ஆண்டவனுடைய அருட் காட்சியைப் பேணாது பேயாய் திரிகின்றார் மாந்தர். அவர்களைக் குறித்து எழுந்தது இத் திருப்புகழ்.

சத்தமிகு மேழுகடலை:—

மகளிரது கண்களுக்கு உவமை பல வுள. அவற்றில் சில இந்த பாடலில் வருகின்றன. கடல் அகலமும் ஆழமும் கருமையும் உள்ளது. அதுபோல் மகளிரது கண்களும் அகல மும் ஆழமும் கருமையும் பொருந்தியவை.

தேனை:—

தேன்-வண்டு; தேனை யுண்பதனால் வண்டு இப்பேர் பெற்றது. இது உயர்ந்த வண்டு; இது தேனை யன்றி பசித் தாலும் வேறு ஒன்றை யுண்ணாது. அதுபோல் ஆன்றோர் என்ன இடர் நேர்ந்தாலும் அறத்தை யன்றி மறத்தைச் செய்யார். தூய கேள்வி யன்றி தீய சொற்களைக் கேளார். நற்சிந்தனை யன்றி துர்ச்சிந்தனை எண்ணார்.

மற்றொரு கருவண்டுளது. அது மலத்தையன்றி வேறு ஒன்றையும் உண்ணாது. அதனையே உருட்டி உருட்டியுழலும். அதுபோல் சில கீழ்மக்கள் தீமையே நினைத்து தீமையே பேசி தீமையே செய்வர். இவர்களாலும் உலகிற்கு அதிக ஆபத் திராது.

இனி அதிகக்கேடு செய்கின்ற பிராணி மற்றொன்றுண்டு. அதுதான் ஈ. அது சந்தனத்திலும் அமரும்; சாணத்திலும் மற் றொன்றிலும் அமரும்; அதுதான் கேடுவிளைவிக்கும் பிராணி; அதுபோல் சிலர் நல்ல திருக்கூட்டங்களிலும் கலந்துகொள் வார். தெய்வசிந்தனை, குரு சிந்தனை, அடியவர் சிந்தனை புரிகின்ற தெருக் கூட்டத்திலும் கலந்து கொள்வார். அவரால் உலகுக்குத் தீமை விளையும். அவர்கள் மிகக்கேடு புரிகின்றவர் ஆவார்கள்.

ஆகவே, தேனை உண்ணுகின்ற வண்டு உயர்ந்தது. அதில் அரசவண்டும் உண்டு. "கோத்தும்பீ!" என்பார் மணிவாசகர்.

அந்த வண்டுக்கு நிகரானது மகளிரது கண்கள்.

உற்ற மது தோடு:—

தோடு—மலர். தேன் துளிக்கின்ற மலர். அம்மலர் போல் விரிந்த கண்கள்.

கணையை:—

கணை உடம்பைப் பிளக்கும் ஆற்றல் படைத்தது. அது போல் மகளிரது கண்களும் உயிரைப் பிளக்கும் ஆற்றல் படைத்தது.

"விழையு மனிதரையு முனிவரையு மவர் உயிர்துணிய
வெட்டிப் பிளந்துளம் பிட்டுப்பறிந்திடும் செங்கண்வேலும்"

போர்கோள் சக்தி:—

போருக்குரிய வேலைப் போலவும் அக்கண்கள் கூர்மையும் கொடுமையும் படைத்தவை.

'கூர்வேல் விழிமங்கையர் கொங்கையிலே
சேர்வேன் அருள்சேரவும் எண்ணுமதோ"

என்பது கந்தரநுபூதி.

மாவின் வடுவை:—

மாம்பிஞ்சைப் பிளந்தால் அதன் இடையில் உள்ள விதை யின் பிளப்பு கருமணிபோலவும், சூழ்ந்துள்ள பகுதி வெண்மை யான விழிபோலவும், காட்சிதரும். ஆகவே மாதர் விழிக்கு மாவடுவை உவமை கூறுவது மரபு.

களின் கண்கள் குவளை மலர்

பூவை :—

யது தாமரைப்பூ. அதுவே
ாணியும் வேதனும் எழுந்தருளி
ி வள்ளியம்மையாரது திருக் கரத்

ும் பொங்கு தாமரை"
—அப்பர் தேவாரம்.

ால் திகழும்.

நஞ்சு போல் தன்னை விரும்பின
அந் நஞ்சும் நன்ருக முதிர்ந்தது

ணீரில் புரளுகின்ற; வாளை —

ணீரில் எதிர்த்துப் போகும்

ற்கு யுத்தத்துக்கு என்று
போரில் புரளுகின்ற வாளா
ாருந்தும்.

ால்லும் தன்மையும், மைப்
கள்.

னை வர்ணனை செய்கின்ருர்

களின் தன்மையைக் கூறு
ுகின்ற மலை. மலையில் ஒரு
ருச் சிலா சந்து என்று பேர்.
ஊ" என்றும் கூறலாம்.

வைத்த கோடிதான மயல் விட்டேக :—

விலைமகளிரது புலால் உடம்பின் மீது வைத்த மயக்கம் மிகவும் கொடியது. அது சகல பாவங்களையும் செய்யத் தூண்டும். அறிவை மயக்குவது கள். அந்தக் கள்ளினும் கொடியது காமம். ஏன்? கள்ளை நினைத்தாலும் கரத்தால் தொட்டாலும் கண்ணால் கண்டாலும் மயக்கந் தராது. உண்டால் தான் அறிவை மயக்கும். காமம் உள்ளத்தால் நினைத்தாலும் அறிவை மயக்கும்; கண்ணால் கண்டாலும் கைகளால் தொட்டாலும் அறிவை மயக்கும்.

உள்ளக் களித்தலும் காண உவத்தலும்
கள்ளுக்கில் காமத்துக் குண்டு.

என்பார் திருவள்ளுவதேவர்.

இத்தகைய கொடிய காம மயக்கத்தை, காமனை எரித்த கனற் கண்ணினின்றும் அருட் பெருஞ் சோதியாய் வந்த அறுமுகப் பரமன் அருளால் அகற்றுதல் எளிது; பிறர்க்கு அரிது.

பத்தி செய :—

பக்தி — அன்பு. முருகனுடைய அன்பினால் எல்லா நலன்களும் உண்டாகும்.

"ஆன பயபக்தி வழிபாடு பெறு முக்தி அதுவாக நிகழ்
பக்தஜன வாரக் காரனும்" —திருவகுப்பு.

முருகன் திருவடியில் பக்தி ஏற்பட்டு விட்டால் அதுவே முத்தியாகும்.

ஏழை அடிமைக்காக :—

ஏழை — அறிவில்லாதவன். "அறிவிலியாகிய அடியேன் பொருட்டு தேவரீர் வஜ்ரமயில் மீதிலே வந்து ஆட் கொள்ள வேண்டும்" என்று சுவாமிகள் வேண்டுகின்றனர்.

வஜ்ரமயில் மீதிலே எப்போது வருவாயே :—

வஜ்ரம் போன்ற வலிமையுடையது மயில்.

சித்ர வடிவேல் பனிருகைக்கார :—

சித்ர — அழகு; வடி — கூர்மை.

அடியார்கட்கு எம் பெருமான் பன்னிரு கரங்களாலும் வாரி வழங்குவான். மேகம் போன்ற கொடையுடைய கரங்கள் என்று திருவகுப்பில் கூறுகின்ருர்.

"எழிலியை யனைய பனிருகையி லயின்முதல்
இலங்கு படையே துலங்க ஒருபால்"

[illegible] கல்வி கற்று அக்கல்வி யறிவால் செய்த நூல்களை [illegible] அருள் [illegible] மாட்டான். அன்பு நெறிநின்ற பக்தர்கள் [illegible] பரமன் ஏற்று மகிழ்வான். [illegible] குமரகுருபரர் முதலியோர் இந்த [illegible].

திக்கினு நடாவு புரவிக்கார:—

புரவி—குதிரை. வாகனத்தில் சிறந்தது குதிரை. அதனுல் அருணகிரிநாதர் பல இடங்களில் மயிலைக் குதிரை யென்றே உருவகம் புரிகின்றார்.

"பட்சியெனும் உக்ர துரகமும்"

" ஆடும்பரி "

கூற மாது சித்த அநுராக கலவிக்கார:—

இச்சா சக்தியை இறைவன் மருவுவதால் உலகின் உயிர்கள் உய்வுபெறுகின்றன.

துட்ட அசுரேசர் கலகக்கார:—

தீமைக்கு மூலகாரணமாகிய ஆணவமலம் முதலிய அசுரர் தலைவர்களை இறைவன் ஞானவேலால் அழித்தனர்.

சிட்டர் பரிபால லளிதக்கார:—

சிட்டர் — நல்லவர்கள். அடியார்களைக் காப்பாற்று வதையே திருவிளையாடலாகக் கொண்டவர் முருகர்.

முருகவேள் அடியார்களிடம் பல ஆடல்கள் புரிந்து ஆட்கொள்வர்.

அடியார்கள் முத்திபெறவேசொல் வசனக்கார:—

முருகன் அடியார்கட்குக் குருவாகத் தோன்றி உபதேசம் புரிவர். அருணகிரிநாதர்க்கு முருகன்தோன்றி உபதேசித்தனர்.

"செம்மான் மகளைத் திருடுந்திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மாவிரு சொல்லற என்றலுமே
அம்மாபொருள் ஒன்றும் அறிந்திலனே" —அநுபூதி.

ஒருபூதருமறியாத் தனிவீட்டில் உரை யுணர்வற்று
இருபூத வீட்டில் இராமல் என்றுன் இருகோட்டொருகைப்
பொருபூதர முரித்தேகாச மிட்ட புராந்தகர்க்குக்
குருபூதவேலவன் நிட்டூர சூர குலாந்தகனே. —அலங்காரம்.

தத்தை நிகர் தூய வனிதைக்கார:—

தத்தை—கிளி. தூய வனிதை—தெய்வயானை.
கிரியாசக்தி—முத்திமாது எனப்படும்.

முச்சகர் பராவு சரணக்கார:—

மூன்று உலகங்களும் முருகனுடைய திருவடியைத் துதி செய்கின்றன. அப்பரமனே பரம்பொருள். வேதாகமங்களால் விதந்து ஓதப்பெற்ற விமலன்.

இனிதான முத்தமிழை யாயும் வரிசைக்கார:—

தமிழ் மிகவும் இனிமையான மொழி. இயல் இசை நாடகம் என மூன்று பிரிவுகள் உடைய மொழி தமிழ் ஒன்றேயாகும். இயல்—சத்து; இசை—சித்து; நாடகம்—ஆனந்தம். சத்து சித்து ஆனந்தம் — சச்சிதானந்தம்—தமிழ்.

பச்சை முகில் தாவு புரிசைக்கார:—

இறைவன் எழுந்தருளியுள்ள திருக்கோயில்களின் திரு மதில்கள் உயர்ந்தவை. அதனுல் அதன்மீது மேகந் தவழ் கின்றது.

முத்துலவு வேலை நகர்:—

திருச்செந்தூர்: கீழ்க் கடற்கரையில் விளங்குகின்றது. தென் கடல்தான் முத்தங் கொழிப்பது; இன்றும் தூத்துக் குடிக் கடலில்தான் முத்துக்களை எடுக்கின்றனர்.

"..............................ஒருகோடி முத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற் செந்தில் மேவிய சேவகனே"

என்பது கந்தரலங்காரம்.

"திரளுமணி தரளமுயர் தெங்கிற்றங்கிப்
புரள எறி திரைமகர சங்கத்துங்கத்
திமிர சலநிதி தழுவு செந்திற் கந்தப் பெருமாளே"
— திருப்புகழ்.

முத்தேவர் பெருமாளே:—

ஆக்கல் அளித்தல் அழித்தல் என்ற முத்தொழிலைப் புரியும் அயன் அரி அரன் என்ற மும்மூர்த்திகட்கும் தலைவன் முருகன்.

"படைத்தளித் தழிக்குந் த்ரிமூர்த்திகள் தம்பிரானே"

கருத்துரை

செந்தில் மேவிய கந்த நாயகனே! மாதர் மயக்கத்தை விட்டு பக்தி செய்யுமாறு மயிலின் மீது வந்து அடியேனை ஆட்கொள்ள வேணும்.

தத்தை நிகர் தூய வனிதைக்கார:—

தத்தை—கிளி. தூய வனிதை—தெய்வயானை. கிரியாசக்தி—முத்திமாது எனப்படும்.

மூச்சகர் பரவு சரணக்கார:—

மூன்று உலகங்களும் முருகனுடைய திருவடியைத் துதி செய்கின்றன, அப்பரமனே பரம்பொருள். வேதாகமங்களால் விதந்து ஓதப்பெற்ற விமலன்.

இனிதான முத்தமிழை யாயும் வரிசைக்கார:—

தமிழ் மிகவும் இனிமையான மொழி. இயல் இசை நாடகம் என மூன்று பிரிவுகள் உடைய மொழி தமிழ் ஒன்றேயாகும். இயல்—சத்து; இசை—சித்து; நாடகம்—ஆனந்தம். சத்து சித்து ஆனந்தம் — சச்சிதானந்தம்—தமிழ்.

பச்சை முகில் தாவு புரிசைக்கார:—

இறைவன் எழுந்தருளியுள்ள திருக்கோயில்களின் திருமதில்கள் உயர்ந்தவை. அதனால் அதன்மீது மேகம் தவழ்கின்றது.

முத்தலவு வேலை நகர்:—

திருச்செந்தூர்: கீழ்க் கடற்கரையில் விளங்குகின்றது. தென் கடல்தான் முத்தங் கொழிப்பது; இன்றும் தூத்துக்குடிக் கடலில்தான் முத்துக்களை எடுக்கின்றனர்.

"...............................ஒருகோடி முத்தம்
தெள்ளிக் கொழிக்குங் கடற் செந்தில் மேவிய சேவகனே"

என்பது கந்தரலங்காரம்.

"திரளுமணி தரளமுயர் தெங்கிற்றங்கிப்
புரள எறி திரைமகர சங்கத்துங்கத்
திமிர சலநிதி தழுவு செந்திற் கந்தப் பெருமாளே"
— திருப்புகழ்.

முத்தேவர் பெருமாளே:—

ஆக்கல் அளித்தல் அழித்தல் என்ற முத்தொழிலைப் புரியும் அயன் அரி அரன் என்ற மும்மூர்த்திகட்கும் தலைவன் முருகன்.

"படைத்தளித் தழிக்குந் த்ரிமூர்த்திகள் தம்பிரானே"

கருத்துரை

செந்தில் மேவிய கந்த நாயகனே! மாதர் மயக்கத்தை விட்டு பக்தி செய்யுமாறு மயிலின் மீது வந்து அடியேனை ஆட்கொள்ள வேணும்.

தத்தை நிகர் தூய வனிதைக்கார:—

தத்தை—கிளி. தூய வனிதை—தெய்வயானை, கிரியாசக்தி—முத்திமாது எனப்படும்.

முச்சகர் பராவு சரணக்கார:—

மூன்று உலகங்களும் முருகனுடைய திருவடியைத் துதி செய்கின்றன, அப்பரமனே பரம்பொருள். வேதாகமங்களால் விதந்து ஓதப்பெற்ற விமலன்.

இனிதான முத்தமிழை யாயும் வரிசைக்கார:—

தமிழ் மிகவும் இனிமையான மொழி. இயல் இசை நாடகம் என மூன்று பிரிவுகள் உடைய மொழி தமிழ் ஒன்றேயாகும். இயல்—சத்து; இசை—சித்து; நாடகம்—ஆனந்தம். சத்து சித்து ஆனந்தம் — சச்சிதானந்தம்—தமிழ்.

பச்சை முகில் தாவு புரிசைக்கார:—

இறைவன் எழுந்தருளியுள்ள திருக்கோயில்களின் திருமதில்கள் உயர்ந்தவை. அதனால் அதன்மீது மேகந் தவழ்கின்றது.

முத்துலவு வேலை நகர்:—

திருச்செந்தூர்: கீழ்க் கடற்கரையில் விளங்குகின்றது. தென் கடல்தான் முத்தங் கொழிப்பது; இன்றும் தூத்துக்குடிக் கடலில்தான் முத்துக்களை எடுக்கின்றனர்.

"..........................ஒருகோடி முத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற் செந்தில் மேவிய சேவகனே"

என்பது கந்தரலங்காரம்.

"திரளுமணி தரளமுயர் தெங்கிற்றங்கிப்
புரள எறி திரைமகர சங்கத்துங்கத்
திமிர சலநிதி தழுவு செந்திற் கந்தப் பெருமாளே"
— திருப்புகழ்.

மூத்தேவர் பெருமாளே:—

ஆக்கல் அளித்தல் அழித்தல் என்ற முத்தொழிலைப் புரியும் அயன் அரி அரன் என்ற மும்மூர்த்திகட்கும் தலைவன் முருகன்.

"படைத்தளித் தழிக்குந் திரிமூர்த்திகள் தம்பிரானே"

கருத்துரை

செந்தில் மேவிய கந்த நாயகனே! மாதர் மயக்கத்தை விட்டு பக்தி செய்யுமாறு மயிலின் மீது வந்து அடியேனை ஆட்கொள்ள வேணும்.

உ

முருகா

...பூஷணி

...ல் கல்விபயின்றுகொண்டிருந்தாள். ...றுப்பும் சுருசுருப்பும் உடையவள். ... எறும்புபோல் சதா ஏதாவது ... உடைகளைத் தானே தோய்த்துச் ...க்கொள்ளுவாள். தலையை நன்கு ...வாள். தனது அறையையும் மற்ற ...வைத்துக் கொள்வாள். அவளைப் ...ள்வார்கள். ஆசிரியைக்கு அவள் ...ன் பழகுபவர்கட்கு அலாதியான ...வளுடைய பண்பு எல்லோருடைய

...கரைக்குப் போயிருந்தாள். மேற் ...ாண்டிருந்தான். அவள் இருந்த ...க் கடற்கரை அந்நகரம். ஆதலின் ...ழகில் அவள் ஈடுபட்டுக் கொண் ...ல் ஒரு இளைஞன் அங்கு வந்து ...த அவளை உற்று நோக்கினான். ...ன் வந்ததுபோல் காட்சிதந்தான் ... ஒரு ஒளி வீசிக்கொண்டிருந்தது. ...ா பேசுவது? யார் முதலில் பேசு ...சுவது?" என்பதனை யறியாமல்

...து என்ன நூல்?

...கண்ணகியின் கற்பு உயர்ந்ததா? ...ந்ததா?

...லைசிறந்ததுதான். ஆனால் அவள் ...ப்புடைய செந்நெறியில் நிற்பது ...சொத்து. மாதவி பரத்தையர் ... தனது குலப்பண்புக்கு மாறாகக் ...டிய வாழ்ந்தாள். பிழையில்லாத ...ரிப் பாடலால் ஐயுற்ற கோவலன் ...ன். பிரிவாற்றாமை கருதிப் பெருந் ...ன்ணமலும் உறங்காமலும்வருந்தி ...ண்டதை யறிந்த அவள் துறவு ...யின் மாண்பு மதிக்கமுடியாதது.

தாலி கட்டிய மனைவி தன் கணவனைப் பேணி நிற்பது கடமை. விலை மகளிர் மரபில் வந்த அவள் கோவலன் பிரிந்தபின் தன் வாழ்வையே துறந்துவிட்டாள் என்றால் அது போற்றுதற்கு உரியது.

அவன்: நீங்கள் கூறியது மிகவும் சரி. உங்கள் பேர்?

அவள்: சிவபூஷணி.

அவன்: நல்லது. நான் தங்களுக்குச் சிரமம் தந்துவிட்டேன். மன்னிக்கவேணும். முடியுமானால் நாளை இங்கு சந்திக்கலாந் தானே. வருகின்றேன்.

ஒருவரையொருவர் உள்ளன்புடன் பார்த்துக்கொண்டார்கள். சிவபூஷணியின் பேச்சில் இருந்த இனிமை; அதில் உதிர்ந்த கருத்துக்கள்; மான் போன்ற விழிகள்; குளிர்ந்த மொழிகள் இவைகள் யாவும் ஒன்று சேர்ந்து அவன் உள்ளத்தை உருக்கின. அடிக்கடி கடற்கரையில் சந்தித்து பலப் பலக் கருத்துக்களைப்பற்றிப் பேசி மகிழ்வார்கள்.

ஒருநாள் அந்த இளைஞன் அவளை நோக்கி "உன் தந்தையார் யார்? நீ எங்கிருக்கின்றாய்?" என்று வினவினான். சிவபூஷணி, "நான் பத்மநாபர் கோயிலுக்கு அருகில் இருக்கின்றேன். என் பிதா ராமவர்மா. அவருக்கு அரசாங்கத்தில் அலுவல். ஆயிரம் ரூபாய் சம்பளம். நான் அவருக்கு ஒரே பெண். அதனால் என்னை நன்றாகப் படிக்க வைக்கவேண்டும் என்ற ஆவலினால் படிக்கவைத்திருக்கின்றார்; ஆமாம், நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கின்றீர்கள்?"

பத்ம: "நான் பழக்கடை வைத்து வியாபாரம் புரிகின்றேன். என் பேர் "பத்மநாபன்". எனக்குத் தந்தை இளமையிலேயே இறந்துவிட்டார். தாயார்மட்டுந்தான் இருக்கின்றார். அவர்களுக்கு வயது ஆகிவிட்டது. என்னைத் திருமணம் புரிந்து கொள்ளுமாறு வற்புறுத்துகின்றார். எனக்கு விவாகத்தில் விருப்பமில்லை"

சிவ: "ஏன்?"

பத்ம: "அநேகம்பேர் கல்யாணம் புரிந்துகொண்டு கவலைப் படுகின்றார்கள். ஏதோ போதுமான வருவாய் வருகின்றது. ஆசாபாசம் அதிகம் இருந்தால் மனிதனுக்கு ஆறுதல் இராது. நன் மனைவியாக ஒருவனுக்கு அமையவில்லையானால் அவன் நரகவேதனையை அநுபவிக்கவேண்டியதுதான். ஆகவே நான் விவாகத்தை விரும்பவில்லை.

சிவ: "உலகிலே விவேகமுள்ள பெண்களே இல்லையா? விவேகமுள்ளபெண்களை மணந்துகொண்டவர்கள் மகிழ்ச்சியாக

தெரியாத ஆலோசனையா?' என்று சீறுவாரே? என் செய்வேன்? தெய்வமே! நீ தான் எனக்கு நல்ல வழி விடவேண்டும்'' என்று கடவுளை வேண்டினாள். வேண்டா வெறுப்புடன் நல்ல சேலையை யுடுத்துக்கொண்டாள். தலைவாரி பொட்டு இட்டுக் கொண்டாள். அகத்திலும் முகத்திலும் மலர்ச்சியில்லை. மன வேதனையுற்று வாடினாள்.

சிறந்த அலங்காரத்துடன் ஒரு இளைஞன் வந்தான். சிவ பூஷணியின் பிதா வரவேற்று நாற்காலியில் அமர்த்தினார். சிவ பூஷணியிடம் சென்று ஒரு வெள்ளிப் பாத்திரத்தில் பால் எடுத்துத் தந்து மணமகன் பிடிக்கின்றானா என்று பார்த்துக் கொள்ளுமாறு சொன்னார். சிவபூஷணி தந்தை சொல்லைத் தட்டமாட்டாதவளாகித் தளர்ந்த மனதுடன் பாலை ஏந்திய வண்ணம் கூடத்தில் வந்தாள். இனி மாப்பிள்ளையாகப் போகின்றவனைக் கண்டாள். பெரிய ஆச்சரிய மடைந்தாள். யார் அவன்? அவள் கடற்கரையில் பலமுறை சந்தித்த பத்மநாபன் தான். பாலைத் தந்து ஒருபுறம் ஒதுங்கி நின்றாள். பத்மநாபனும் அரைக்கண்ணால் பார்த்துக்கொண்டான். சிவபூஷணியும் உள்ளுக்குள் சிரித்துக்கொண்டாள்.

பெண்ணுக்கும் விருப்பம்; பிள்ளைக்கும் விருப்பம்; பெற்றோருக்கும் விருப்பம். சிறப்பாகத் திருமணம் நடந்தது. புதிய தம்பதிகள் இல்லற வாழ்வில் இனிது வாழ்ந்தார்கள். ஒரு குறையுமில்லை. இருவரும் ஒருவரை யொருவர் நேசித்து உள்ளன்புடன் மருவி தணியாத அன்புடையவர்களாகி இன்புற்றார்கள்.

ஒருநாள் இரவு தன் கணவனை ஒரு பெரிய பூதம் விழுங்குவதாகத் தீய கனவு கண்டாள். அலறி எழுந்தாள். மனம் பட பட என்று துடித்தது. முருகனை நினைந்து உருகினாள். ஏதோ ஒரு பெருங் கேடு கணவனுக்கு வரப்போகின்றது என்று ஏங்கித் தாள். சொல்ல முடியாத வேதனையடைந்தாள். கை கால்களை யலம்பி வெண்ணீறு பூசிக்கொண்டு, முருகன் படத்திற்குமுன் னின்று, "முருகா! மூவர் முதல்வா! என் கணவனைக் காப்பாற்று. சசிதேவிக்கு மாங்கல்ய மீந்த சரவணபவா! உன் பாதமே கதி" என்று வேண்டினாள்.

பொழுது புலர்ந்தது. பத்மநாபன் மனைவியை நோக்கி, "பெண்ணமுதே! ஏன் முகம் வாடியுளது? என்ன உனக்குக் கவலை? என்னமோ ஒன்றைப் பறிகொடுத்தது போல் இருக்கின்றனையே?'' என்று பரிவுடன் கேட்டான். சிவபூஷணி, "ஒன்றுமில்லை. இரவு நிம்மதியாகத் தூக்கம் வரவில்லை. தங்கள் மேலான அன்பிருக்கும்போது என்ன கவலை வரப் போகின்றது?'' என்று கூறினாள். அப்படி கூறும்போது மிகுந்த துக்கத்தினால் தொண்டை யடைத்துக்கொண்டது.

போன்ற உடம்பும், பனைமரம்போன்றகால்களும், தொங்குகின்ற நாக்கும், அக்கினி போன்ற தலை மயிரும் உடையதாய் அது நின்றுகொண்டிருந்தது. "அடேய்! என் பசிக்கு இன்று உன்னை உணவாக விழுங்கப்போகின்றேன்" என்று கர்ஜித்தது. அதனைக் கண்டு பத்மநாபன் நடுங்கிவிட்டான்.

"பூதமே! நான் மரணத்திற்கு அஞ்சாதவன். ஆறிலும் மரணம்; நூறிலும் மரணம். நான்குபேர் சுமக்கக் கூடிய கனமான இந்த உடம்பை நான் எத்தனை நாளைக்குத்தான் தூக்கிக் கொண்டு அலைவேன்? ஆகவே நான் சாவைக் குறித்துப் பயப்படவில்லை. நடப்பதெல்லாம் ஈசன் செயல். வருவது வந்தே தீரும்; ஆனால் ஒரு விஷயத்தைக் குறித்துக் கவலைகின்றேன். என் மனைவி அன்பும், அறிவும் படைத்தவள். பரமபதிவிரதா சிரோன்மணி. என்னைத் தெய்வமாக எண்ணினவள். இதே கடற்கரையிலே கண்டெடுத்த புதையல் அவள். நீ என்னை விழுங்கு. நான் வேண்டாம் என்று கூறவில்லை. சிலகாலமிருந்து நான் மாண்டால் இந்த உடம்பை நாயும் நரியும், இன்னும்,

"மச்சமெச்சு சுத்ரம் ரத்தபித்த மூத்ரம்
வைச்சிறைச்ச பாத்ரம் அநுபோகம்
மட்கவிட்ட சேக்கை உட்புழுத்த வாழ்க்கை
மட்குலப் பதார்த்த மிடிபாறை
எய்ச்சிளைச்ச பேய்க்கும் எய்ச்சிளைச்ச நாய்க்கும்
எய்ச்சிளைச்ச ஈக்கும் இரையாகும்"

என்று அருணகிரிநாதர் பாடியிருக்கின்றார். ஆதலால் இந்த புலால் உடம்பை நீ தின்பதனால் எனக்கு ஒன்றும் வருத்தமில்லை. என் முடிவை யறியாது கற்பு நிறைந்த மனைவி கவல்வாள். அவளிடம் சென்று தகவல் சொல்லிவிட்டு வந்துவிடுவேன். சற்று நேரம் இங்கு இரு. பின்னர் நீ என்னை விழுங்கிப் பசியாறலாம்" என்றான்.

பூதம் கலகலவென்று சிரித்தது. அப்போது பூமியதிர்ந்தது. "ஏ மனிதனே! நீ மனைவியிடம் போனால் திரும்பிவரமாட்டாய். எனக்குக் கடும்பசி. உன்னை விடமாட்டேன். ஆதலால் விழுங்குவேன்" என்றது.

பத்மநாபன்: "பூதமே! நான் ஒருபோதும் சொன்ன சொல்லைத் தவறியதில்லை. "எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு" என்ற திருவள்ளுவரின் திருவாக்கை நான் அநுசரிப்பவன். ஒரு சொல்லுக்காக மனைவியையும் மகனையும் விற்று தானும் பறையனுக்கு அடிமையான அரிச்சந்திரன் வழியில் நான் நிற்பவன். என் பேச்சை நம்பு. சில நிமிஷத்தில் வந்துவிடுவேன்" என்றான்.

இதனைக் கேட்ட சிவபூஷணி இடியேறுண்ட நாகம்போல் நடுங்கினாள். தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்தாள். அவள் உள்ளம் அடைந்த துயரை அளவிட முடியுமா? அவளுக்கு இதயம் வெடித்துவிடும் போல் இருந்தது. "பெருமானே! தாங்கள் இனி கடற்கரைக்கே போகவேண்டாம். என்னைவிட்டு நீங்கள் போகலாமா? என்பொருட்டு நீங்கள் சத்தியம் தவறினால் குற்றமில்லை. ஆதலால் நீங்கள் போக வேண்டாம்" என்று கணவன் காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

பத்மநாபன், "மங்கையர் மணியே! மனம் வருந்தாதே. மரணம் என்றும் வரும். மரணத்திற்கு அஞ்சுகின்றவன் உத்தமனாக மாட்டான். அன்றியும் நான் அந்தப் பூதத்தினிடம் பெரிய சத்தியம் புரிந்துள்ளேன். "ஒருவன் சாப்பிடும்போது விளக்கு நின்றுவிட்டால், பின்னர் எவன் சாப்பிடுவானோ அவன் போகின்ற நரகிற்குப் போவேன்" என்று கூறியுள்ளேன்; ஆதலால் அந்த சத்தியத்தினின்றும் வழுவுவேனாயின் எனக்கு நரகஞ் சித்திக்கும். ஆனபடியால் எனக்கு நிம்மதியாக விடை கொடு. விரைந்துவருவதாகச் சொல்லியுள்ளேன்" என்றான்.

சிவபூஷணி, "அப்படியா? இத்துணைப் பெரிய சத்தியம் புரிந்தால் உங்களை நான் தடைபடுத்தக்கூடாது. எனக்கு என்ன புத்தி சொல்லுகின்றீர்?"

பத்மநாபன், "பெண்ணே! நீ ஆண்டவனை மறவாது வழிபாடு செய்துகொண்டு இரு. உனக்கு ஆறுமுகப்பெருமான் எல்லா நலன்களையும் அருளுவார்" என்று கூறிவிட்டு அவளைத் தழுவி அன்புப் பார்வை பார்த்துவிட்டு துணிந்து புறப்பட்டான். கண்ணீர் வடித்துக்கொண்டு நின்றாள் சிவபூஷணி. பத்மநாபன் தெருக்கோடியில் மறைந்தவுடன், சிவபூஷணி ஒரு மடக்கில் எண்ணெயை விட்டு பெரிய திரியை மொத்தமாகப் போட்டு விளக்கு ஏற்றிக்கொண்டு கூடையில் மறைத்துப் புறப்பட்டாள். கடுநடையாகத் தொடர்ந்து கணவனறியாமல் பின் சென்றாள்.

பத்மநாபன் கடற்கரை சென்றான். பூதங் காத்திருந்தது. இவனைக் கண்டவுடன் அது மகிழ்ந்தது. "வந்துவிட்டாயா? சிறிதுநேரம் ஆனவுடன் ஏமாற்றிவிட்டனையோ? என்று எண்ணினேன். நல்லது. வா, வா; பசிக்கின்றது. பல்லில் படாமல் விழுங்குகின்றேன்" என்றது. பத்மநாபன் முருகன திருவடியை முழுமனதுடன் தியானித்துக்கொண்டு அதன் அருகிற் சென்றான். பிலத்துவாரம் போன்ற திறந்தவாயில் அவனை விழுங்க முயன்றது பூதம். அத்தருணத்தில் சிவபூஷணி திடீர் என்று விளக்கைக் கூடையிலிருந்து எடுத்து வெளியே காட்டி படக்கென்று அணைத்துவிட்டாள்.

உ

முருகா

ஆடவல்லான்

இறைவன் எங்கும் நிறைந்தவன்; எல்லாம் அறிகின்றவன்; கருணை நிறைந்தவன்; இன்பமயமானவன். எல்லா ஆற்றலும் உடையவன். ஆன்மாக்களின் பொருட்டுத் திருவருளால் பல்வேறு திருமேனிகளை எடுத்துக்கொள்ளுகின்றான். அவற்றுள் இடையறாது ஆனந்தத் தாண்டவம் புரியும் நிலை ஒன்று. அது எல்லா மூர்த்திகளிலும் சிறந்தது. அந்த ஆனந்தக் கூத்து ஆன்மாக்களின் பொருட்டு ஓவாது சிவபெருமானால் நிகழ்த்தப் பெறுகின்றது. அவன் ஆடவில்லையானால் உலகத்தில் ஒன்றுமே ஆடாது. அந்தத் திருக்கூத்துக்கு முதலுமில்லை; முடிவுமில்லை; ஏனைய தெருக் கூத்துக்களைப் போன்றதன்று அத் திருக்கூத்து; அற்புதத் தனிக்கூத்து அது. சேக்கிழார் சுவாமிகள் கூறியருளினர்.

"ஆதியு முடிவுமில்லா அற்புதத் தனிக் கூத்தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கார்"

ப—பாவம்; ர—ராகம்; த—தாளம். பாவ ராக தாளம் என்ற மூன்றும் ஒன்று கூடியது பரதம். இந்த பரத கலை நடராஜப் பெருமானிடமிருந்து தோன்றியது. "அன்பர்க் கின்பத் திற முதவு பரதகுரு" என்கின்றார் அருணகிரிநாதர். இனி பரத நூல்கள் நடனம் நூற்று எட்டு என்று கூறுகின்றன. சிவாகமங்களும் சிவதாண்டவம் நூற்று எட்டு என்று கூறியிருக்கின்றன.

நடராஜ மூர்த்தியைப் பற்றிய தியான சுலோகம் அடியில் வருமாறு காண்க.

த்ரிநேத்ரம் சதுர்ப்புஜம் சாந்தம் ரக்தவர்ணம் ஸ்மிதாநநம்।
கரோட பகபத்ரஞ்ச தத்தாரஞ் சார்க்க புஷ்பகம்॥
கங்கா சந்த்ர ஸமாயுக்தம் அபஸ்மாரோபரிஸ்திதம்।
தக்ஷிணம் குஞ்சிதபாதம் வாமபாதந்துஉத்ருதம்॥
ஸவ்யஞ்சு பூர்வமபயே அந்யேடமருகந்ததா।
வாமஹஸ்தேது டோளாங்கம் இதரம் அக்நிபாத்ரகம்॥
வாமகர்ணேது பத்ரஞ்ச தக்ஷிணேநக்ர குண்டலம்।
அபயே பணிஸம்யுக்தம் ஸர்வாங்கே பஸ்மதாரிணம்॥
ஏவம் நடேசமித்யுக்தம் த்யாத்வா மந்த்ரேணபூஜயேத்.

இதன் பொருள்:—

நடேசப் பெருமானுடைய திருவுருவம் மூன்று கண்களும், நான்கு தோள்களும், சாந்த குணமும், சிவப்பு நிறமும், புன்முறுவல் செய்யும் முகமும் உடையதாயும்; தலையின் ஓடும், கொக்கின் இறகும், ஊமத்தையும், எருக்கும், கங்கையும், நிலவும்

என்ற ஒரு கலைப்புளது. அது நாதாந்த நடனத்தின் உண்மையை நன்கு விளக்குகின்றது. நடனத்தைக் கண்டுகளித்த பதஞ்சலி முதலியோருடன் சித்த சிகாமணியாக விளங்கிய திருமூலரும் ஒருவர் என அவர் பாடலால் தெளிவாகின்றது.

நந்தி அருள்பெற்ற நாதரை நாடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரர்
என்றிவர் என்னோடு எண்மருமாமே.

இதனால் பதஞ்சலிமுனிவர் நந்தி அருள் பெற்ற சித்தருள் ஒருவர் என்பதும் புலனாகின்றது.

இறைவன் ஞானக் கண்ணைத் தர தில்லை மன்றுள் அப்பரமனது திருநடனத்தை பதஞ்சலி முதலிய சித்தர்கள் கண்டு இன்புற்றார்கள்.

எண்ணருங் காதல் கூரும் இருவரும் காணஞானக்
கண்ணினை நல்க முன்னைக் காரிருள் கழிவுற் றின்ன
வண்ண மென்றறியவாரா வளரொளி மன்றுள் மாதோ
டண்ணல் நின்றாடு கின்ற ஆனந்த நிருத்தங் கண்டார்.

—கோயிற்புராணம்.

சித்தர்

சித்தாந்தச் செந்நெறியில் நான்கு படிகள்; சரியை கிரியை யோகம் ஞானம் என்பன. இவற்றுள் சிவயோக நெறி நின்று ஞானங் கைவரப்பெற்றவர்கள் சித்தர்கள். சிவமூர்த்தி யோகிகளுள் மகாயோகியாவார். சடாமகுடம் யோக தண்டம் கமண்டலம் புலித்தோல் கோவணம் கபாலம் வெண்ணீறு உருத்திராக்கம் என்றவை யெல்லாம் யோகிகளுடைய சின்னங்களாகும். இவைகளையுடைய மூர்த்தி சிவமூர்த்தி.

சித்தர்கள் ஞான சித்தர், நாதசித்தர், ரஸேஸ்வர சித்தர் என மூன்று பிரிவினராவார்கள். உண்மையான ஞான நிலையில் நின்றவர் ஞான சித்தர்; பிராணயாமயோகப் பயிற்சியால் சுழுமுனை நாடியில் உண்டாகும் நாதத்தில் தம் மனத்தை ஒடுக்கி சமாதி நிலையில் நின்றவர் நாதசித்தர். ரஸாயன முறையால் காயசித்தி யடைந்தவர் ரஸேஸ்வர சித்தர். இந்த ரஸேஸ்வர சித்தர்களே வைத்தியம் ரஸவாதம் முதலிய நூல்களைச் செய்தவர்கள்.

ஞான சித்தர்கள் சுத்த சன்மார்க்க சித்தர்கள் எனவும் அழைக்கப் பெறுவர். அகத்தியர், அகப்பேயார், திருமூலர், பாம்பாட்டியார், கடுவெளியார், இடைக்காடர், கருவூரார், சிவவாக்கியர், திருவெண்காடர், பத்ரகிரியார், அருணகிரியார்,

காய பாசம தனிலே புகுவது வந்துபேசிப்
மாயனூ ரயனறியா வகையது
காயமானவ ரெதிரே யவரென
பேணுதது வெளியேய் ஒளியது விந்துநாதப்
மாயனூ ரயனறியா வகையது
பேத பேதமொ டுலகாய் வளர்வது
பெருமாய் கலையறிவாய் துரியவ
நிதமானது"

"சரியையாளர்க்கு மெய்க் கிரியையாளர்க்கு மச்
சகல யோகர்க்கு மெட் டரிதாய
சமயபேதத்தினுக் கணுகொணா மெய்ப்பொருட்
டருபராசக்தியில் பரமான
துரிய மேலற்புதப் பரமஞானத் தனிச் பதி"
சுடர் வியாபித்த நற்

என்பனவாதி பலப்பல திருப்புகழால் எங்கள் கருணைஞான வள்ளலாகிய அருணகிரிநாதர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

தனிப்பரம் பொருளாகிய அப்பர சிவம் புறப்பொருள் களைத் தன்னருளுடன் நோக்கும் நிலையில் பரா சக்தி யெனப் படும். அதனால் சிவத்தின் அருள் நிலையே பராசக்தியாகும் என்று அறிக. தீயும் சூடும் போலே பரசிவமும் பராசக்தியும் ஒன்றே யென வுணர்க. பரசிவமாகிய ஞானநிலையும் பராசக்தி யாகிய அருட்செயல்நிலையும் ஒரே பொருளின் இருதன்மைக ளாகும். பராசக்தியும் ஞானசொரூபமேயாகும்.

பராசக்தியானது மறைத்தலில்லாத தன் சுத்தஞான நிலையினின்றும் நீங்கி, உயிர்களுக்குத் தனுவாதிகளைத் தோற்று வித்து, மலபரிபாகம் வரும்பொருட்டு பிறப்பு இறப்புக்களை நல்கி, கன்மங்களை நுகர்வித்து மறைத்தல் தொழிலைச் செய்யு மிடத்து, அவைகளைப் பக்குவப் படுத்தும் சிவசக்தியாக மாறு மிடத்து, அது திரோதான சக்தி யெனறு சொல்லப்பெறும். அதுவே இச்சா சக்தி கிரியா சக்தி ஞான சக்தியென முத்திறப் பட்டு நின்று வியாபரிக்கும்.

உயிர்களுக்கு மலத்தை நீக்கிச் சிவத்தை அளித்தற்கு இரங்கும் நிலை இச்சாசக்தி; அங்ஙனம் உயிர்கள்பால் இரக்கங் கொண்டபின்னர், அவை சிவத்தைச் சார்வதற்கு வேண்டப் படும் உபாயங்களை அறியுநிலை ஞானசக்தி. அவ்வுபாயங்க ளாவனவாம் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்றவைகளை வகுக்கும் நிலை கிரியாசக்தி.

சிருட்டியாரம்பத்தில் பரமசிவம் தனது துரிய ஞானத் தனி நிலையை விடுத்து அசைந்து, பராசத்தி நிலையை யடைகின்றது;

திருமாளிகைத் தேவர் என்ற ஆன்றோர்கள் ஞானசித்தர்கள்
ஆவார்கள்.

அநாதிநாதர், ஆதிநாதர், சடேந்திரநாதர், கோரக்கநாதர்,
சகோதநாதர், மச்சேந்திர நாதர், சித்திய நாதர், மதங்கநாதர்,
வகுளிநாதர், என்பவர்கள் நவநாதசித்தர்கள். "குகையில்
நவநாதரும்" என்று அருணகிரியார் திருப்புகழில் கூறியுள்ள
னர். "சொலவின் முடிவில் முடியாத பகுதி புருடர் நவநாதர்"
என்ற திருப்புகழ் வாக்காலும் அறிக.

இங்ஙனம் வந்த சித்தர் மரபு தாயுமானர் காலம் வரை
தமிழ் நாட்டில் சிறப்பாகச் செழித்திருந்தது. தாயுமானருடைய
குருநாதர் திருமூலர் திருமரபில் வந்தவர் என்று தாயுமானரே
"மூலன் மரபில் வரு மௌனகுருவே" என்று கூறுவதனால்
அறிக.

பதஞ்சலி முனிவர்:

சிவயோகச் செந்நெறியில் நின்ற பழைய சித்தர்களுள்
ஒருவர் பதஞ்சலி முனிவர். இவர் மகத நாட்டினின்றும் தில்லை
வனம் வந்து அரிய பெரிய தவஞ் செய்து, இறைவன் திரு
வருளால் நாதாந்த நடனத்தைத் தமது சிவஞானயோக வலிமை
யினாலே அகக்கண் கொண்டு கண்டு களித்தவராவார். அத்
திருக் கோலந்தான் தில்லை ஞான வெளியில் உள்ள நடேச
ருடைய திருவடிவம்.

நாதாந்த நடனம்:

ஞானமாத்திரையாய் நிற்கும் பரசிவம் ஏகமாய் குணாதீத
மாய் சிதாகாசத்துக்குள் விளங்கும் பரஞ்சோதியாய் உள்ள
பொருளாகும். அச் சிவத்தினது தத்துவாதீதமான அத்
துரியநிலையில் எச் செயலும் நிகழ்வதில்லை. அக்காரணத்தினால்
அது சுத்த சிவம் என்றும் பரசிவம் என்றும் பேசப்பெறும்.
அத் தனிநிலை மனத்தால் நினைக்கவும் வாக்கினால் பேசவும் கலை
யினால் அளக்கவும் இயலாதது.

"வாசித்துக் காணொணாதது பூசித்துக் கூடொணாதது
 வாய்விட்டுப் பேசொணாதது
மாசர்க்குத் தோணொணாதது நேசர்க்குப் பேரொணாதது
 மாயைக்குச் சூழொணாதது — நெஞ்சினாலே
ஓசைக்குத் தூரமானது மாகத்துக் கீறதானது
 லோகத்துக் காதியானது" — விந்துநாத

"காணொணாதது உருவோடருவது
 பேசொணாதது உரையே தருவது
 காணு நான்மறை முடிவாய் நிறைவது — பஞ்சபூதக்

காய பாசம தனிலே யுறைவது
 மாயனூரய னறியா வகையது
 காயமானவ ரெதிரே யவரென — வந்துபேசிப்
பேணொணாதது வெளியேய் ஒளியது
 மாயனூ ரயனறியா வகையது
 பேத பேதமொ டுலகாய் வளர்வது — விந்துநாதப்
பேருமாய் கலையறிவாய் துரியவ
 தீதமானது"

"சரியையாளர்க்கு மெய்க் கிரியையாளர்க்கு மச்
 சகல யோகர்க்கு மெட் — டரிதாய
சமயபேதத்தினுக் கணுகொணா மெய்ப்பொருட்
 டருபராசக்தியில் — பரமான
துரிய மேலற்புதப் பரமஞானத் தனிச்
 சுடர் வியாபித்த நற் — பதி"

என்பனவாதி பலப்பல திருப்புகழால் எங்கள் கருணைஞான
வள்ளலாகிய அருணகிரிநாதர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

தனிப்பரம் பொருளாகிய அப்பர சிவம் புறப்பொருள்
களைத் தன்னருளுடன் நோக்கும் நிலையில் பரா சக்தி யெனப்
படும். அதனால் சிவத்தின் அருள் நிலையே பராசக்தியாகும்
என்று அறிக. தீயும் சூடும் போலே பரசிவமும் பராசக்தியும்
ஒன்றே யென வுணர்க. பரசிவமாகிய ஞானநிலையும் பராசக்தி
யாகிய அருட்செயல்நிலையும் ஒரே பொருளின் இருதன்மைக
ளாகும். பராசக்தியும் ஞானசொரூபமேயாகும்.

பராசக்தியானது மறைத்தலில்லாத தன் சுத்தஞான
நிலையினின்றும்நீங்கி, உயிர்களுக்குத் தனுவாதிகளைத் தோற்று
வித்து, மலபரிபாகம் வரும்பொருட்டு பிறப்பு இறப்புக்களை
நல்கி, கன்மங்களை நுகர்வித்து மறைத்தல் தொழிலைச் செய்யு
மிடத்து, அவைகளைப் பக்குவப் படுத்தும் சிவசக்தியாக மாறு
மிடத்து, அது திரோதான சக்தி யென்று சொல்லப்பெறும்.
அதுவே இச்சா சக்தி கிரியா சக்தி ஞான சக்தியென முத்திறப்
பட்டு நின்று வியாபரிக்கும்.

உயிர்களுக்கு மலத்தை நீக்கிச் சிவத்தை அளித்தற்கு
இரங்கும் நிலை இச்சாசக்தி; அங்ஙனம் உயிர்கள்பால் இரக்கங்
கொண்டபின்னர், அவை சிவத்தைச் சார்வதற்கு வேண்டப்
படும் உபாயங்களை அறியுநிலை ஞானசக்தி. அவ் வுபாயங்க
ளாவனவாம் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல்
அருளல் என்றவைகளை வகுக்கும் நிலை கிரியாசக்தி.

சிருட்டியாரம்பத்தில் பரமசிவம் தனது துரிய ஞானத் தனி
நிலையை விடுத்து அசைந்து, பராசத்தி நிலையை யடைகின்றது;

உ

ஓம் குஹாய நம:



திருப்புகழமிர்தம்

மலர் 21 | துன்முகி ஆண்டு புரட்டாசித் திங்கள் செப்டம்பர்-1956 | இதழ் 6

திருப்புகழ்

திருச்செந்தூர்

சந்தன சவாது நிறைகற் பூர
குங்கும படீர விரைகத் தூரி
தண்புழு களாவு களபச் சீத வெகுவாச

சண்பக கலார வகுளத் தாம
வம்புது கிலார வயிரக் கோவை
தங்கிய கடோர தரவித் தார பரிதான

மந்தர மதான தனமிக் காசை
கொண்டுபொ ருள்தேடு மதிநிட் டூர
வஞ்சக விசார இதயப் பூவை யணையார்கள்

வந்தியி டுமாய விரகப் பார்வை
அம்பிலு ளம்வாடு மறிவற் றேனை
வந்தடி மையாள இனிஎப் போது நினைவாயே

இந்த்ரபு ரிகாவல் முதன்மைக் கார
சம்ப்ரம மயூர துரகக் கார
என்றும கலாத இளமைக் கார குறமாதின்

இன்பஅ நுபோக சரசக் கார
வந்தஅ சுரேசர் கலகக் கார
எங்களு மைசேயெ னருமைக் கார மிகுபாவின்

கொண்டு பொருள் தேடு=மிகுந்த ஆசை கொண்டு பணம் தேடுகின்றவராய, அதிநிட்டுரே=மிகவும் கொடுமையுடைய, வஞ்சக விசார இதய=வஞ்சனைச் செயல்களை ஆராய்கின்ற மனத்தையுடைய, பூவை அனையார்கள்=நாகணவாய்ப்பறவை போன்ற பொதுமகளிருடைய, வந்திடு=துன்பத்தைத் தருகின்ற, மாய விரக பார்வை அம்பில் உளம் வாடும்=மாயமும் காமமும் நிறைந்த பார்வையாகிய அம்பினுல் உள்ளம்வாடுகின்ற, அறிவு அற்றேனை=அறிவு அற்றுப்போன அடியேனிடம், வந்து அடிமை ஆள இனி எப்போது நினைவாயே=எழுந்தருளிவந்து அடிமையாகக் கொண்டு ஆட்கொள்ள இனி எப்போது தேவரீர் நினைப்பீரோ?

பொழிப்புரை

இந்திரனது நகரமாகிய அமராவதியைக் காத்தருளும் முதல்வரே! மிக்க 'பெருமையுடைய மயிலைக் குதிரைவாகனம்போல் செலுத்துபவரே! எந்நாளும் அகலாத இளமையுடையவரே! வள்ளிநாயகியை(ஆன்மாக்களின் பொருட்டு)மணந்துவாழ்பவரே! போருக்கு வந்த அசுர வேந்தர்களை யழித்தவரே! எங்கள் உமாதேவியின் புதல்வர் என்னும் அருமையுடையவரே! மிகுந்த பாவினங்களையுடைய செய்ய தமிழ் மொழியால் அடியார்கள் பாடும் நான்கு கவிகளையுடையவரே! கிரவுஞ்ச மலையைப் பிளந்த வேலாயுதத்தின் ஆற்றலையுடையவரே! இனிய சொற்களையுடைய அடியார்களிடம் எளிமை பூண்டவரே! அழகிய சந்திரனைச் சூடிய சிவமூர்த்தியின் சமயத்தைப் பரப்புகின்றவரே! மந்திர உபதேசத்தின் மகிமையை யுடையவரே! திருச்செந்தூரில் வாழுந் தேவர்கள் போற்றும் பெருமிதம் உடையவரே! சந்தனம், சவ்வாது, நிறைந்த பச்சைக் கர்ப்பூரம், குங்குமப்பூ கலந்த சந்தனம், கஸ்தூரி, குளிர்ந்த புனுகு இவைகள் கலந்த கலவைக் குழம்பு பூசப்பட்டதாய், குளிர்ச்சியும் மிகுந்த மணமும் உடைய சண்பக மலர் செங்கழுநீர் மலர், மகிழ மலர் மாலைகளையுடையநாய், இரவித்தை ஆடையுடன் கூடியதாய், முத்துமாலை வைரமாலை பூண்டதாய், கடினமும் உயர்வும் விசாலமும் பருமையும் உடையதாய், மந்தரமலைபோல் உள்ள தனங்களை உடையவராய், மிக்க ஆசை கொண்டு பணத்தைத் தேடுகின்ற மிகுந்த கொடியவர்களாய், வஞ்சனையான ஆராய்ச்சியுடைய மனமுடையவர்களாய், நாகணவாய்ப் பறவை போன்றவர்களாயுள்ள பொது மாதர்களுடைய, துன்பத்தைத் தருகின்ற மாயமும் காமமும் உடைய கண் பார்வையாகிய அம்பினுல் மனம் வாடுகின்ற அறிவற்றவனுகிய அடியேன் முன் வந்து என்னை ஆட்கொள்ளுமாறு இனி எப்போது நினைப்பீரோ?

விரிவுரை

இந்திரபுரி காவல் முதன்மைக்கார:—

இந்திரனுடைய நகரமாகிய அமராவதியை சூரபன்மனுடைய மகன் பானுகோபன் இடித்துத் தீக்கு இரையாக்கிப் பொடி செய்து

அழித்துவிட்டனன். முருகப்பெருமான் சூராதி யவுணரை யழிந்து, இடிந்த அமராவதியைப் புதுப்பித்து, இந்திரனுக்கு முடி சூட்டி, அவனை ஐராவத முதுகில் ஏற்றி பவனிவரச் செய்து மீளவும் அந் நகருக்கு இடர் வரா வண்ணம் பாதுகாவல் புரிந்தனர்.

" அயிராவத முதுகின் தேற்றி
அடையோமென இனிதன் பேத்தும்
அமரேசனை முழுதுங் காத்த பெருமாளே"

தேரணியிட்டுப் புரமெரித்தான் மகன் செங்கையில் வேல்
கூரணியிட்டணு வாகிக் கிரவுஞ்சம் குலைந்தரக்கர்
நேரணியிட்டு வளைந்த கடகம் நெளிந்தது சூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே.

என்று அருணகிரிநாதர் பிறஇடங்களிலும் முருகன் இந்திரபுரியைக் காத்தருளிய கருணைத் திறத்தை வியந்து கூறுகின்றார்.

இந்திராதி தேவர்கள் இளம்பூரணனைச் சரணமடைந்து தொழுது வழிபட்டதனால், இமையவர்கள் நகரை எம்பெருமான் காவல் புரிந்தனர். "தொழுது வழிபடு மடியர் காவல்காரப் பெருமாளே" என வரும் பழநிமலைத் திருப்புகழாலும் அறிக.

சம்ப்ரம மயூர துரகக்கார:—

மயில் மிகவும் பெருமையுடையது. ஓங்கார வடிவமானது. அது வாகனத்திற்குரிய குதிரைபோல் பெருமானை என்றும் தாங்கி நிற்பது. அதனால் அருணகிரிநாதர் பல இடங்களில் மயிலைக் குதிரையென்றே உருவகம் புரிகின்றனர்.

"பட்சி யெனும் உக்ர துரகமும்" — திருப்புகழ்.
"ஓகார பரியின் மிசை வரவேணும்" — திருப்புகழ்.
"ஆடும்பரி" — அநுபூதி.

என்றுமகலாத இளமைக்கார:—

முருகமூர்த்திக்கு உரிய அநேக சிறப்புக்களுள் முதன்மையும் வேறு எத்தேவுக்குமில்லாத தனிமையும் இந்த மாறுத இளமையே யாகும். அதனால் பாம்பன் அடிகள் அடிக்கடி "இளம்பூரணன்" என்று எம்பெருமானைக் குறிப்பிடுவார்கள். என்றும் குழந்தை வடிவில் நின்று அடியவர்கட்கு இன்ப அருள் பாலிக்கின்ற தெய்வம் இது.

தன்பால் காதலித்து வந்த அடியவர்க்கு முருகன் இள நலங் காட்டி முன்னின்று வேண்டியாங்கு வேண்டிய வரங் கொடுத்து அருள்புரிவன்.

மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல் நின்வரவென
அன்புடை நன்மொழி அளைஇ விளிவு இன்று

இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீயாகத் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்கும். —திருமுருகாற்றுப்படை.

குமாரசுவாமி என்ற திருப்பெயராலும், பாலசுப்ரமண்யம் என்ற திருப்பெயராலும் அறிக.

குறமாதின் இன்ப அநுபோக சரசக்கார:—

இறைவன் திருவருளாகிய அம்பிகையுடன் கூடியிருக்கின்றன் என்பதன் உட்பொருள் உயிர்களை உய்விக்கும் பொருட்டு என்பது ஆகும்.

தென்பா லுகந்தாடுந் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேல் பேதா யிருநிலமும்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ. —திருவாசகம்.

இங்கே வள்ளியம்மை இச்சா சக்தி. இச்சா சக்தியுடன் முருகன் கலந்திருப்பது உயிர்கள் இச்சை யமைந்து கன்மங்களைத் துய்த்து, கன்ம நீக்கம் பெற்று மலபரிபாகமுற்று, வீடுபேறு பெறும் பொருட்டே என வுணர்க.

"இச்சை வைத்து உயிர்க்குயிராய் தழைத்தது" —தாயுமானுர்.

வந்த அசுரேசர் கலகக்கார:—

அசுரர் தலைவர்களாகிய சூராதி யவுணர், அமரர்களைச் சிறைவிடுமாறு ஆறுமுகப் பெருமான் கூறிய அறவுரையைக் கேட்டு உய்யாமல், மூர்க்கத்தன மேற்கொண்டு போர்க்களத்தில் எதிர்த்து வந்தார்கள். பலப் பல மாயப் போர் புரிந்தார்கள். இறைவன் அவர்களைத் தண்டித்தது மறக் கருணையாம் என்க. குற்றஞ் செய்கின்ற புதல்வனைத் தந்தை தண்டிக்கின்றார். மகன் திருந்தி உய்தல் வேண்டும் என்ற கருணையால் தண்டிக்கின்றார். இதே நியாயந்தான் முருகவேள் அசுரேசரைத் தண்டித்தது என்பதை யுணர்க.

எங்களுமை சேயெனருமைக்கார:—

உமா - உ ம அ என்ற மூன்று மந்திரங்களின் சேர்க்கையே உமா என்ற மந்திரம் என வுணர்க. உ - காத்தல், ம - ஒடுக்கல், அ - ஆக்கல். முத்தொழில்களையும் தனது சந்நிதியில் தனது ஆற்றலைக் கொண்டு செய்விக்கும் முதல்வி உமாதேவியார். அவளின்றி ஓர் அணுவும் அசையாது. ஞானத்தின் சொருபம்; சகல லோக ஏக நாயகி. அப் பரம நாயகியின் அன்பு நிறைந்த இளங் குழவி முருகவேள். "பார்வதி ப்ரிய நந்தனுய நம:" என்பது முருகனுடைய நூற்றெட்டு மந்திரங்களுள் ஒன்று. ஆகவே பார்வதி பாலன் என்ற அருமைக்கும் பெருமைக்கும் உரியவர் முருகர்.

இனி உமை என்பது சித்து; முருகர் என்பது ஆனந்தம். அறிவிலிருந்து ஆனந்தம் தோன்றும். "ஞானானந்தம்" "அறிவானந்தம்," "சிதானந்தம்" என்று வரும் சொற்களை உன்னுக.

அஞ்ஞானத்திலிருந்து துன்பம் தோன்றும். ஞானத்திலிருந்து இன்பந் தோன்றும். ஆகவே அருணகிரிநாதருக்கு அம்பிகையின் பரிபூரண அருள் உண்டு. அவர் பல இடங்களில் அம்பிகையை வாயார வாழ்த்துகின்றார். "எங்கள் தாய்" என்று அவர் கூறும் உரிமையை நோக்குக.

"இமவரை தருங் கருங்குயில்
எனதுயி ரெனுந் த்ரியம்பகி"

"நாளுமினிய கனி எங்களம்பிகை"

"அமுதமதையருளி எமையாளு மெந்தைதன்
திருவுருவின் மகிழெனது தாய்பயந்திடும் புகல்வோனே"

—திருப்புகழ்.

மிகுபாவின் செந்தமிழ் சொல் நாலு கவிதைக்கார:—

தமிழில் பாவினங்கள் நான்கு; வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா, ஆசிரியப்பா என்பன. இனி வெண்பாவில் நேரிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, ஒருவிகற்ப வெண்பா, இருவிகற்ப வெண்பா, குறள் வெண்பா இப்படிப் பல உட் பிரிவுகள் உண்டு; இவ்வாறே வஞ்சிப்பாவிலும், கலிப்பாவிலும், ஆசிரியப்பாவிலும் பலபேதங்கள் இருக்கின்றன. இவற்றின் விவரங்களை யாப்பிலக்கணத்தில் அறிக.

இனி நாலு கவிகள்:--

ஆசுகவி, மதுர கவி, சித்திர கவி, வித்தார கவி, என்பவை; ஆசு கவி விரைந்து உடனுக்குடன் பாடுவது; மதுர கவி, இனிமையாகப் பாடுவது; ஏகபாதம், நாகபந்தம், தேர்ப்பந்தம், மயூர பந்தம், கோமூத்திரி முதலியவை சித்திர கவி. பலவித சாங்கோபாங்கமாகப் பாடுவது வித்தார கவி; இந்த நாலு கவிகளையும் பாடும் திறத்தைத் தன்னை வழிபட்ட அடியவர்கட்கு அள்ளித் தரும் வள்ளல் முருகன்.

'நாகாசல வேலவ நாலுகவி
த்யாகா சுரலோக சிகா மணியே!'

—அநுபூதி.

இந்த நாற் கவிகளிலும் வல்லவர் நம் அருணகிரிநாதர். இதனை அவரே சீர்பாத வகுப்பில் கூறுகின்றார்.

"முடிய வழிவழியடிமை யெனுமுரிமை அடிமைமுழு
துலகறிய மழலை மொழி கொடுபாடும் ஆசுகவி
முதல மொழிவன நிபுண மதுப முகரித மவுன
முகுள பரிமள நிகில கவிமாலை சூடுவதும்"

குன்றெறியும் வேலின் வலிமைக்கார:—

தாரகனுக்குத் தோழனும் மாயத்தில் வல்லவனுமாகிய கொடிய அசுரன் தேவர்களையும் முனிவர்களையும் வருத்துவதே தொழிலாக வுடையவன், பரம சாதுவாகிய பறவை அன்றில். அதற்குக் கிரவுஞ்சம் என்று மற்றொரு பேருமுண்டு. அந்த கிரவுஞ்சப் பறவை யுருவில் மலைபோல் நின்று வஞ்சனை செய்வான். அதனால் அந்த அசுரன் கிரவுஞ்சாசுரன் எனப் படுவான். அகத்தியர் சாபத்தினால் மலை யுருவாகவே நின்று கொடுமை பல செய்து வந்தான். முருகனுடைய வேல் அக் கிரவுஞ்ச மலையைப் பிளந்து அக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. அது முதல் அமரரும் இருடியரும் இடர் தீர்ந்தனர்.

செஞ்சொ லடியார்க ளெளிமைக்கார:—

செவ்விய இனிய சொற்களை மொழியும் அடியார்களிடம், மூவருந் தேவருங் காணாத முருகன் மிக எளியனாக நின்று அருள்புரிவான்.

"மாலயனுக் கரியானே
மாதவரைப் பிரியானே"

"அபிநவதுங்க கங்காநதிக்கு மைந்த
அடியவர்க் கெளியோனே"

—திருப்புகழ்.

திங்கள் முடிநாதர் சமயக்கார:—

திங்கள் முடிநாதர் சமயம் சிவசமயம். சிவசமயத்திற்குரிய மூர்த்தி குமாரமூர்த்தி. குமாரக்கடவுள் திருஞானசம்பந்தரை அதிஷ்டித்து சிவசமயத்தைப் பாதுகாத்தருளினார்.

முருகவழிபாடு வேறு சிவ வழிபாடு வேறு என எண்ணிச் சிலர் மலைவர். சிவமூர்த்தமே முருகமூர்த்தம். நடராஜவடிவம் தட்சிணாமூர்த்தி வடிவம் என சிவமூர்த்தங்களில் பல காணப்படுவது போல் முருகமூர்த்தமும் ஒன்று என வுணர்க. இதனை யறியாது அழிந்தவன் சூரபன்மன். எனவே சூரபன்மன் செய்த பிழையை மற்றவர்கள் மேற்கொள்ளக் கூடாது. சிவமூர்த்தமே குமாரமூர்த்தம். குமாரமூர்த்தியை வழிபடுவோர் தாம் ஒழுகுவது கௌமார சமயம் எனவும் அது சைவத்திற்கு வேறானது எனவும் கூறி இடர்ப்படுவர். இத்தகைய இடர்களை நீக்கவே அருணகிரிநாதர் முருகனைச் சிவசமய மூர்த்தி என விளக்கமாக விளம்புகின்றார்.

"திருமருவு புயனயனொ டயிராவதக்குரிசில்
அடிபரவு பழநிமலை கதிர்காம முற்றுவளர்
சிவசமய அறுமுகவ திருவேரகத்திலுறை பெருமாளே"

—திருப்புகழ்.

மந்ரத் வுபதேச மகிமைக்கார:—

மந்திரங்களை அவரவர் பரிபக்குவத்துக்கு ஏற்ப குருவாக நின்று உபதேசிக்கின்ற மூர்த்தி முருகமூர்த்தியாகும். அவரைக் குருவாகக் கொண்டு வழிபட்டால் அவர் நிச்சயமாக ஒரு சமயம் குருவாய் வெளிப்பட்டு அருள்புரிவார்.

அகத்தியருக்கும் அருணகிரிநாதருக்கும் குருமூர்த்தியாக வந்து மந்த்ரோபதேசம் புரிந்தருளினார். உண்மைத் துறவியாக அண்மையில் வாழ்ந்த பாம்பன் சுவாமிகட்குக் குருமூர்த்தியாக வந்து அருள்புரிந்தனர்.

முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள் கொண்டறியார் அறியுந்தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின்றதுவே.

என்ற அநுபூதியை ஊன்றிப் படித்து உணர்க. மேலும் இறுதியாகிய அநுபூதியிலும் உறுதியுடன் "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்று சுவாமிகள் பாடி முடிக்கின்றனர். எல்லோருக்கும் அவனே குரு. "ஆதி குருப்புகழை மேவுகின்ற கோற்றவன்" அவனேயாகும்.

உப - சமீபம்; தேசம் - இடம். இறைவனுடைய அருகில் ஆன்மாவைச் சேர்ப்பது உபதேசம்.

சேந்தினகர்வாழும் அருமைத் தேவர் பெருமாளே:—

இரண்டாவது படைவீடாகிய திருத்தலம் திருச்சேந்தூர். சுவாதிஷ்டான க்ஷேத்திரம். அங்கே நினைவுகளாகிய அலைகள் வந்து இறைவன் திருவடியிலே ஓய்ந்து ஒடுங்கிவிடுகின்றன. அதனால் 'அலைவாய்' என்று அப்பதிக்கு மற்றொரு பேரு முண்டு. பிறவிப் பெருங்கடலின் துறைமுகப் பட்டினம். அங்கு சென்றோர் பிறவிக் கடலினின்று உய்வுபெற்று முத்திக்கரை சேர்வர். அதனால் அங்கு வந்து தேவர்கள் வழிபடுகின்றார்கள். அந்த அருமையுடையவர்கள் என்று குறிப்பிடுகின்றார்.

கருத்துரை

சேந்திமாநகரம் மேவிய கந்த நாயகனே! பந்தபாசத்தைத் தரும் மாதர் மயலில் அகப்படா வண்ணம் அடியேனை ஆண்டருளுவீர்!

கற்பு

விஜயலட்சுமி

[மேல் கீழாவதும் கீழ் மேலாவதும் இறைவன் அருளாடல்]

விஜயலட்சுமிக்கு இளமையிலிருந்தே இயற்கையாக [illegible] இருந்தது. மனத்திலே மாசில்லா[illegible] அதற்கேற்ப சுகமாக அமைந்திருந்தது. விஜயலட்சுமிக்கு எல்லோருடனும் இனிமையாகப் பழகும் [illegible] எளிமையில் வாழும் எண்ணமும், ஆடம்பரத்தில் [illegible] வெறுப்பும், தெய்வ பக்தியும் அணிகலன்களாக [illegible] மாநிறமாக இருப்பினும் அவள் முகத்தில் ஒருவகை [illegible] சாந்தமான பார்வையும் இருந்தன. பெரியோர் [illegible] அடக்கமாக விழுந்து வணங்குவாள். ஆலயத்திற்கு நாடோறும் சென்று தொழுவாள். தனிமையில் இருந்து இனிமையாகப் பாடுவாள். அவள் பாடலைக் கேட்டால் கல்லும் புல்லும் உருகும் என்றால் மனித உள்ளம் [illegible]?

"அப்பா! எனக்கு சங்கீதஞானத்தில் அதிக விருப்பம்; [illegible] ஒரு பாட்டு வாத்தியாரை ஏற்பாடு செய்யப்பா!" என்று கேட்டாள். சிறு கிராமத்தில் பலசரக்குக் கடை வைத்திருந்த [illegible] செல்வி விஜயலட்சுமியின் வேண்டுகோளை [illegible] குழந்தை [illegible] ஆற்றல் [illegible] இல்லை" என்று கூறவும் [illegible] "[illegible] அல்லது சக்தியில்லை" [illegible] நாள் போகட்டும். [illegible] இல்லை. "குழந்தாய்! [illegible] என்று பக்குவமாக மறுமொழி [illegible] வாத்தியாரை நியமிக்கின்றேன்" [illegible] கேட்டதும் [illegible] கணவன் கூறிய பதிலும் பலவேசன் மனைவிக்குப் பிடிக்க[illegible] ஆமாம் இவளுக்கு என்ன சங்கீதம்? சங்கீதம் படித்து [illegible] செய்யப்போகின்றாளோ? அதுவேறு வெட்டிச் செலவு. [illegible] வாத்தியாருக்குச் சம்பளம் யார் தருவது? [illegible]" என்று வெடுப்பாகச் [illegible] முழம் சறுக்குகின்றதே"

விஜயலட்சுமி அன்றாடம் ஆலயம் போகும்போது [illegible] ஓதுவார் பாடுகின்றதைக் கவனமாகக் கேட்பாள்; [illegible] நாதஸ்வர வித்வான் வாசிப்பதையும் ஒருபுறம் நின்று ஒருமைப்பட்ட உள்ளத்தோடு உற்றுக் கேட்பாள். தூய வேட்டியில் [illegible] கெட்டிச் சாயம் படிவது போல் ஒரு முறை கேட்டவுடன் அவளுக்குப் பாடல் ராகம் தாளம் எல்லாம் அப்படியே மனதில் படிந்துவிடும். வீட்டில் வந்து அதேமாதிரி பாடுவாள். [illegible] நாள்களில் சந்தேகம் வருமானால் அந்த ஊரில் உள்ள ஒரு சங்கீத வித்வானிடம் தனிமையில் கேட்டுத் தெரிந்துகொள்வாள்.

ஒருநாள் சங்கீதவித்வானிடம் போய் பணிந்து "ஐயா! ஒரு சின்ன சந்தேகம். இருபத்தேட்டாவது மேளகர்த்தாவாகிய அரிகாம்போதியைப் பஞ்சமம்பிடிக்காமல் பாடினால் நாட்டகுறிஞ்சி தானே. நாட்டகுறிஞ்சிஒருஅழகானராகம். சௌக்யமானபிடிகள் அதில் உண்டு. ஆஹா அன்றொருநாள் நீங்கள் கோயிலில் பாடுகின்றபோது தேனாறு ஓடுவதுபோல் இருந்தது. பாவிப் பிரமன் இரண்டுகாதுகளைப்படைத்தானே.எண்ணுயிரங்காதுபடைத்திருந்தால் பண்ணாரமுதைக்கேட்டுப் பருகலாம்"என்றாள். இளஞ்சிறுமியின் ரசிப்புத்தன்மையையும் அவளுடைய அடக்கமான குணத்தையும் கண்ட அந்த ஆசிரியர் அதிக அன்புகொண்டார். விஜயலட்சுமி மீது அவருக்கு ஒரு அலாதியான பட்சம் ஏற்பட்டது. "குழந்தாய்! உனக்குச் சின்னஞ் சிறுவயதில் நல்ல ஞானத்தை ஆண்டவன் தந்திருக்கின்றான். நீ மாலை நேரத்தில் ஒரு அரை மணி நேரம் என்னிடம் வந்திரு. முறையே உனக்கு இசை ஞானத்தைத் தருவேன்" என்று கருணையுடன் கூறினார். வறுமையாளனுக்குத் தங்கப்புதையல் கிடைத்தது போல் இருந்தது விஜயலட்சுமிக்கு.

அதுபடி அன்றுமுதல் நாடோறும் மாலையில் சென்று அவரிடம் இசைபயின்று வந்தாள். கற்பூர மலையில் தீப்பிடிப்பது போல் அவளுக்கு இசை வளர்ச்சி ஓங்கியது. முற்பிறப்பில் விட்ட குறை போலும்.

வீட்டில் ஒருபுறமிருந்து பாட ஆரம்பித்துவிட்டால் தேனுண்ட வண்டுபோல் பலவேசன் பரவசமடைவான். "என்னடி ஓயாத பாட்டு? சட்டிபானையைக் கழுவு; வீட்டைக் கூட்டு; இந்தா இந்தச் சாணியை எடுத்து எருமுட்டை தட்டு;" என்று கடும் வேலை தருவாள் பலவேசன் மனைவி; "அப்படியே செய்கின்றேனம்மா! கோபிக்காதீர். வேலையிருந்தால் அதனைச் செய்வதுதானே பெண்களுக்கு அழகு" என்று பணிவுடன் கூறி எழுந்து தாய்தந்த வேலைகள் அத்தனையும்புரிவாள் விஜயலட்சுமி. அப்படி வேலை செய்யும்போதே சின்ன சுருதியில் உள்ளங்குழைந்து உருகிப் பாடிக்கொள்வாள்.

ராகம் : ஹேமவதி—தாளம் : ஆதி

பல்லவி

வள்ளிமணவாளன் மலரடி நினைந்திட்டால்
உள்ளங் குழையுதடி..........குயிலே!

அநுபல்லவி

வள்ளலைக் கண்டால் அன்பு வெள்ளமாய் ஓடுது
உள்ளபடியே எந்தன் இதயமும் நாடுது

சரணம்

வீதியில் அன்று நான் விளையாடுந் தருணத்து
வேகமாய் வந்தென்பின்னல் பிடித்திழுத்தான் பித்து
பேதையென் உள்ளத்தில் பிடித்தது கண்ணீர் முத்து
பெய்துநின்றேன் மயில் பிரான்மீது அன்பு வைத்து"

இப்படி புதியபுதிய பாடல்களைச் சுயமாகவே பாடுவாள். உள்ளங்குழைந்து பாடும் பாடலைக் கேட்டால் யார் மனந்தான் குழையாது? ஊராரெல்லாம் அவளைக் கண்டு பரிந்து புகழ்வார்கள்; கொண்டாடுவார்கள்; பாராட்டுவார்கள். ஆனால் தாய்மட்டும் இதற்கு நேர்மாறு. "இவளுக்கேன்ன பாட்டு? குடும்பத்தில் உள்ள இவளுக்குச் சதா சங்கீதப் பைத்தியம். இது அடுக்குமா? மூதேவி" என்று சலிப்புடன் வைவாள். அதன் காரணம் அறியாது விஜயலட்சுமி விழிப்பாள். முருகனை நினைந்து உருகுவாள்.

இப்போது விஜயலட்சுமிக்கு வயது பதினேழு; நல்ல இளமை. வளமையில்லாத குடும்பத்தில் வளர்வதனால் வயதுக்கு ஏற்ற உடல் அமைப்பு இல்லை. சற்று மெலிந்திருந்தாள். பூத்த பூங்கொடிபோல் விளங்கினாள்.

ஒருநாள் மாலை 7 மணி. பலவேசன் தன் கடையில் இருந்து வியாபாரம் புரிந்துகொண்டிருந்தான். தாய் எருமுட்டைக் கூடையை எடுத்துக்கொண்டு அந்த வூரில் உள்ள ஒரு தனவந்தன் வீட்டுக்கு விற்பதற்காகப் போயிருந்தாள். வீட்டுக்குள் இருந்து விஜயலட்சுமி சமைத்துக்கொண்டிருந்தாள். நகர சோதனையின் பொருட்டு அடுத்தநகரத்து அரசகுமாரன் மாறு வேடம் புனைந்து பலவேசன் வீட்டுவழியாகப் போய்க்கொண்டிருந்தான். அது சமயம் விஜயலட்சுமி நாட்டக்குறிஞ்சியில் முருகன் மீது ஒரு அருமையான கீர்த்தனத்தைப் பாடிக்கொண்டிருந்தாள்:

ராகம் : நாட்டக்குறிஞ்சி—தாளம் : ஆதி

பல்லவி

முருகனைப் பணிந்திடுவோம் அதனால் நமது
இருவினை தணிந்திடுவோம்.........திரு

அநுபல்லவி

கருதுவார் வினையெலாம் கனலிடைப் பஞ்சாய் நீங்கும்
கலியினில் கண்கண்ட கடவுளாய் அருள் ஓங்கும்

சரணம்

அருணைமுனிவர்க்கருள் ஆறுமுக வேலனடி
ஆனைமுகற்கிளைய அநாதி மூலனடி
தருணத்தில் வந்திடர்கள் தவிர்க்குமநு கூலனடி
தாய் கருணாகரி சங்கரி பாலனடி"

இந்த அழகிய இனிய பாடலைக் கேட்டான் [illegible]. இசையில் அவனுக்கு அளவற்ற வேட்கை. மருந்துண்ட வண்டு போல் மயங்கிவிட்டான். மெல்ல அந்த வீட்டிற்குள் சென்றான். தனித்த வீட்டுக்குள் புகுவது முறையன்று என்று அவன் மனம் புகன்றது. எனினும் இசை வெள்ளத்தில் மிதந்து நுழைந்தான். பாடிக்கொண்டே சமைக்கும் பாவையைக் கண்டான். அவளும் இவனைக் கண்டு 'என்ன வேண்டும்?' என்று வினவினாள். அவளுக்கு என்று அமைந்திருந்த அடக்கமான குரலில் அன்பு நிலவியது. மன்னன் மகன் அவளுடைய தோற்றம், குரலின் ஏற்றம் இவைகளில் மிகவும் ஈடுபட்டுவிட்டான். "ஒன்றுமில்லை; கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் வேண்டும்" என்றான். அவள் தண்ணீருக்குப் பதில் பால் கொணர்ந்து தந்து, "நீங்கள் களைப்பாக இருக்கின்றீர். இதோ இந்தப் பாலைக் குடியுங்கள்" என்றாள். பாலை வாங்கிய பார்த்திபன், "இப்போது நீங்கள் பாடிய ராகம் பாலினும் இனிமையாக இருந்தது. உங்கள் பேர்?"

"என் பேர் விஜயலட்சுமி. இந்தவூரில் என் இசையைக் கேட்டு மகிழ்பவர் யார் இருக்கின்றார்? எங்கும் நிறைந்த எம்பெருமான்தான் கேட்டுக் கொண்டிருக்கின்றார். ஆத்மார்த்தமாக அவர் கேட்க வேண்டும் என்றுதான் பாடுகின்றேன். அருணகிரியார் பாடலைக் கேட்ட அருளாளன் என் பாடலைக் கேட்பானோ? கேட்கமாட்டானோ? ஆனால் ஒரே ஒரு நியாயம். கருடன் பறக்கிற வானத்தில் கொசுவுந்தானே பறக்கின்றது. அதுபோல அப்பன் என் பாடலையுங் கேட்டுத் திருவுளம் இரங்குவான என்ற ஒரு நம்பிக்கையுமுண்டு. தாங்கள் எந்த ஊர்?"

"நான் அடுத்துள்ள ராஜேந்திரபுரி. அந்த நகரையாளும் வீரசேகரன் மகன்; என்பேர் **குணசேகரன்.** எனக்கு உன் இசையில் அளவுக்கு மேற்பட்ட ஈடுபாடு உண்டாயிற்று. நான் நகர் சோதனையின் பொருட்டு மாறு வேடம் புனைந்துவந்தேன். உன் பிதாவின் பேர் யாது?"

அவன் சொற்களைக் கேட்ட விஜயலட்சுமி நாணினாள். சற்று ஒதுங்கி நின்றாள். "வணக்கம்; என் பிதா பலவேசன் செட்டியார். சில்லரைக் கடை வியாபாரம். என் தாய் எருமுட்டை விற்கப் போயிருக்கின்றாள். ஏழைக் குடும்பம்; எங்கள் பிதாவுக்குக் கடனும் கொஞ்சம் உண்டு. மன்னவர் மைந்தராகிய தங்கள் வரவு எங்கள் பாக்கியம்."

"பெண்மணியே! இவ்வளவு அரிய சங்கீதத்தை நான் இதுவரை கேட்டதேயில்லை. அரண்மனையில் எத்தனையோ சங்கீதவித்வான்கள் ஓயாது வந்து பாடிப் பரிசில் பெற்றுப் போகின்றார்கள். அவர்கள் பாடுகின்ற பாடல்கள் உயிரில்லாத ஓவியம்போல் உணர்ச்சியற்று சுவையற்று இருக்கின்றன. உன்

பாடல் என் உள்ளத்தை உருக்குகின்றது. நீ விரும்பினால் இன்னும் ஒரு பாடல் பாடலாமா?"

"ஆகா! தாய் தந்தையர் இல்லாத நேரம். நான் இளம் சிறுமி. தாங்கள் தனித்திருக்கின்றீர். ஆகவே [illegible] வேண்டும். [illegible] வைத்தால் மற்றொரு சமயம் [illegible] பாடலைக் கேட்கலாம்" என்றாள். மன்னன் மகன் "சரி" என்று கூறிவிட்டு வெறும் உடம்புமட்டுமாகச் சென்றான். அவன் உள்ளம் உணர்ச்சி எல்லாம் அவளிடமே நின்றுவிட்டன.

குணசேகரனுக்கு விஜயலட்சுமியிடம் ஏற்பட்ட அன்பு [illegible] ஆக மாறியது. எப்படியும் அவளை மணக்க வேண்டும், [illegible] சங்கீதக் கடலில் மூழ்கி விளையாட வேண்டும் என்று [illegible]. தன் கருத்தை எப்படி வெளியிடுவது? யாரிடம் [illegible] பது? என்று அறியாது திகைத்தான். [illegible] அவனுடைய [illegible] விழாவில் மேல் [illegible] விஜயலட்சுமியின் இசையரங்கு நிகழ ஏற்பாடு செய்தான். [illegible] வெள்ளத்தில் அனைவரையும் மூழ்க வைத்தான். விஜயலட்சுமிக்குச் சன்மானமும் அள்ளி வழங்கினான்.

பலவேசனுக்குப் பரம சந்தோஷம். மகள் [illegible] னுடைய பரிச்சயமும் தன் [illegible] ஏற்பட்ட [illegible] கிடைத்தது பற்றிப் பெரிதும் உவந்தான். [illegible] அருமையையும் அந்த [illegible] பெருமையையும் [illegible] தான் அறிந்தான். அவனுக்கு நல்ல ஆடையும் சிறு அணிகலனும் செய்து அளித்தான்.

இரண்டொருதடவை குணசேகரன் மாறு வேடத்துடன் வந்து விஜயலட்சுமியின் இசையமுதைப் பருகி ஆறுதல் அடைந்தான். அடைந்தும் அமைதியடைந்தானில்லை.

"அன்புள்ள விஜயலட்சுமி! அன்புக்கு [illegible] புதல்வி; என்ன [illegible] கிடையாது? உன்னை [illegible] என்னுடைய குழந்தைகள். [illegible] என்று கருதாதே. எல்லாரும் [illegible] ஒன்றுதான். [illegible] மாகிய அரங்கிலே நாம் [illegible] நாடுகின்றேன். என் வாழ்க்கைத் [illegible] என்றும் பருக [illegible]. [illegible] துணைவியாக உன்னை விரும்புகின்றேன். [illegible] அரண்மனையில் [illegible]; என்றும் எண்ணுகின்றேன். உன் மறுமொழியை எதிர்பார்க்கின்றேன்.

இங்ஙனம்
உன்னை விரும்பும்
குணசேகரன்.

இக்கடிதத்தை ஒரு அரச [illegible] கொணர்ந்து விஜயலட்சுமி [illegible] சென்றான். இதைத் திரும்பத் திரும்பப் படித்தாள். [illegible]

என் சிறுமை எங்கே? மன்னவர் பெருமை எங்கே? இசை ஒன்று நடுவில் இருந்து இணைக்கின்றதுபோலும். விருப்பு வெறுப்பு ஒன்றும் எனக்கு இல்லை. திருமணத்திலே நாட்டமும் இல்லை. இருப்பினும் ஒருநாள் நமது குருநாதர், “மகளே! உனக்குச் சிறந்த கணவன் வருவான். மலரினும் மென்மையாக உன்னை உள்ளம் உவந்து ஆதரித்து அன்பு செய்வான். உன் எதிர்கால வாழ்க்கை சிறக்கும். உன் பொருட்டு நான் முருகனை வாழ்த்துகின்றேன்” என்று கூறி ஆசீர்வதித்தார். இது அவருடைய ஆசியின் பலன்தான் போலும். நம் தாய் மாற்ருந் தாயினும் பன்மடங்கு கொடுமையாக நம்மை வாட்டுகின்ருள். தந்தையோ பரம ஏழை. ஈசன் அருள்போல் எல்லாம் நடக்கட்டும்” என்று எண்ணினுள்.

“அருள் நிறைந்த அரசிளங்குமரரே! அநேக வணக்கம். நலம்.

தங்கள் கடிதத்தைக் கண்ணுற்றேன். எனக்கென்று ஒரு உரிமை என்பால் இல்லை. என்னை என்றும் ஆட்கொள்ளும் இளம் பூரணன் இன்னருள் போல் எல்லாம் நடக்கும். அவன் அருளுக்கு நன்றி.

அடிமை,
விஜயலட்சுமி.

இந்த மறுமொழிக் கடிதத்தைக் குணசேகரன் பலமுறை படித்தான். எழுத்தில் உள்ள ஆழம்; ஆழத்தில் உள்ள தெளிவு; தெளிவில் பிறக்குந் திருவருள் உறைப்பு ஆகிய இவைகளை எண்ணினுன்; உருகினுன். கண்ணீரால் அக் கடிதத்தை முழுக வைத்தான். அதனை மடித்துத் தன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்.

தாய் மூலம் தந்தைக்குத் தன் கருத்தை யறிவித்தான். வீரசேகரனுக்கு வெகுளித்தீ மூண்டது. “என்ன மூடத்தனம்? நமது அரச குடும்பத்தின் பெருமை எங்கே? சில்லரைக் கடைக்காரன் மகளின் சிறுமை எங்கே? சிங்கம் சுண்டெலியை மணப்பதா? இச் செய்தி உலகம் அறிந்தால் அரச வம்சத்திற்கே பழியல்லவா? இன்னும் ஒரு முறை இச் சொல் என் செவியில் விழக்கூடாது. மாபெரு மாட்சியுடைய என் மகன் மன்னவள் மகளை மணந்து மாண்புற வாழட்டும். வீரசேகரன் உடம்பில் உயிர் உள்ளவரை இதற்கு இணங்கமாட்டான். ஆகவே உன் மகனுக்கு திட்டவட்டமாக இக் காரியம் நடவாது என்றும் என் கருத்துக்கு மாருக நடந்தால் அவன் என் மகன் அல்லன் என்றும் கூறிவிடு” என்று கூறிக் கர்ஜித்தான்.

இதனை மறைவில் இருந்து கேட்ட குணசேகரன் நடுநடுங்கி விட்டான். வீரசேகரன் சினத்தை அவனுலே தாங்கமுடியாதல்லவா? மேலும் தந்தை; இதுவரை தந்தை சொல் தட்டாமல் நடந்தவன். அப்படியே உயிரற்ற உடம்புபோல் ஆனுன்,

ஆருத்துயரமுற்ருன். “மணந்தால் அவளை மணப்பது? இல்லையேல் தன் வாழ்வை முடிப்பது” என்று எண்ணினுன். ஏங்கினுன்.

ஒருமுறை தனிமையில் பிதாவின் கால்மீது வீழ்ந்து அழுதான். வீரசேகரன் மனம் இளகியது. மகனே' உனக்கு என்ன வேண்டும்? கேள்” என்ருன். “அப்பா! வாழ்வு என்பது குலம் பணம் அழகு உயர்வு இவைகளில் அமையாது. அது அன்பில் அமைவது. தாங்கள்தான் எனக்கு முதல் தெய்வம். தங்கள் கருத்தை நான் ஒருபோதும் மீறி நடக்கமாட்டேன். நான் தங்கட்கு ஒரே மகன். நான் மகிழ்ச்சியாக வாழவேண்டுமானுல் அந்த உத்தம குணம் பொருந்திய ஏழைக் குலமகளைத் தாங்கள் மருமகளாக ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த ஒரு வரந்தான் தங்களை நான் மன்ருடிக் கேட்பது” என்ருன்.

இப்போது வீரசேகரனுக்குக் கோபம் வரவில்லை. ஏன்? மகன் மீதுள்ள பாசம். “கண்ணே! என் வார்த்தையைக் கவனமாகக் கேள். நமது வீர குலத்தின் பெருமையைக் காப்பாற்ற வேண்டும். புலி பசித்தால் புல்லைத் தின்னுது. பெருங் குடும்பத்தில் பிறந்த நீ சிறுகுடும்பத்தில் பிறந்த ஒருத்தியை விரும்புவது சற்றும் பொருந்தாது. அதனை மறந்துவிடு. இளம் பிள்ளையாகிய நீ இப்போது என் சொல்லின் நுட்பத்தை யறியமுடியாது. ஆகவே நமது வீரக்குடும்பத்திற்கு ஏற்ப ஒரு அரசகுமாரியை நாடி உனக்கு மணம் புரிந்துவைப்பேன்” என்று கூறிவிட்டான்.

ஒரு நாள் பலவேசன் வீட்டிற்குக் குணசேகரன் வந்தான். அன்றும் அவளுடைய பாடலைக் கேட்டுப் பரவசம் அடைந்தான். தன் தந்தை தனது எண்ணத்தை மறுப்பதாகக் குறிப்பினுல் உணர்த்தினுன். இப்படி இரண்டு, மூன்று ஆண்டுகள் அகன்றன.

இராஜேந்திரபுரியை யாளுகின்ற வீரசேகரன் சிற்றரசன். மகேந்திரபுரியை யாளுகின்ற சக்கரவர்த்தியாகிய நீலாங்கவேந்தனுக்குக் கப்பங்கட்டுபவன். ஐந்து, ஆறு ஆண்டுகளாகக் கப்பங் கட்டாமையால் அவனுடைய சேவகர்கள் வந்து நெருக்கி வீரசேகரனைச் சிறையில் இட்டனர். தந்தைக்கு நேர்ந்த இன்னலைக் கண்டு இதயந் தளர்ந்தான் குணசேகரன். ஒன்றும் உணராது திகைத்தான்.

குணசேகரன் நேரே 'மகேந்திரபுரி சென்ருன். தனது பிதாவைச் சிறையிலிருந்து விடுவிக்குமாறும், சற்று நிதானமாகப் பகுதிப் பணத்தைச் சிறுகச் சிறுகக் கட்டிவிடுவதாகவும் சக்கரவர்த்திபால் முறையிட்டுக் கூறி வேண்டினுன். குணசேகரனுடைய சொல்லின் நயத்துக்கு உள்ளம் உருகிய நீலாங்க வேந்தன் வீரசேகரனை விடுதலை புரிந்தான். தந்தை மைந்த

[illegible] உருவமாய் விரதம் பெற்றவு நிறைந்தும் பெரு மகிழ்ச்சி யுற்றார். அந்த மகேந்திரபுரியில் ஒரு புறத்தில் தங்கி யிருந்தான்.

[illegible]யில் நீலாங்கனுடைய பட்டமகிஷி கோப்பாயம் [illegible] பிரியும் தருணத்தை யடைந்தாள். நீலாங்கமன்னன் அவள் [illegible] இருந்த வேதனையுடன் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தான். உடலும் இனிய [illegible] [illegible].

ராணி கணவனை மெல்லக் கண் திறந்து பார்த்தாள். அவன் கையைப் பிடித்துக் கண்களில் ஒத்திக்கொண்டாள். மெல்லிய குரலில் பேசுகின்றாள். "பெருமானே! என்னைக் கடவுளும், தாங்களும் சேர்ந்து மன்னிக்கவேண்டும். ஆத்ம சாந்திக்காக இப்போது இந்த ரகசியத்தை வெளியிடுகின்றேன். முந்த ராணி [illegible] மாதக் குழந்தையை விடுத்து மாண்டனர். அந்தக் குழவி வளர்ந்து பெரியவளானால் என் வாழ்வு சிறக்காது என்ற தீய எண்ணத்தால் அதே உருவமுள்ள ஒரு குழந்தையைக் கொணர்ந்து மாண்டுவிட்டதாக சூழ்ச்சி செய்துவிட்டேன். நமது [illegible] ராஜேந்திரபுரிக்கு அருகில் உள்ள உதையபுரியில் பலவேசன் என்ற வறியவன் வீட்டில் வளர்கின்றாள். அவளை அழைத்து வந்து பட்டங்கட்டி இந்த அரசை நீங்கள் [illegible]. அப்படிச் செய்தால் என் பாவம் ஒரு அளவுக்குத் தேயும்" என்று கூறிக் கண் மூடிவிட்டாள். மன்னவனும் மற்றவரும் கேட்டு அதிசயமுற்றார்கள். அவளுக்கு ஈமக்கடன் ஒரு புறம் நடந்தது. பட்டத்துயானை பட்டத்துக் குதிரை முதலிய பரிவாரம் சூழ சக்ரவர்த்தி பலவேசன் குடிசைக்கு முன் வந்தார். விஜயலட்சுமியைக் கண்டார். அவள் கரத்தில் உள்ள அம்சரேகையாலும் அவளைத் தன் மகளே என எண்ணினார். ஆனந்தக் கண்ணீரால் ஆட்டினார். மேள தாளத்துடன் அழைத்துக் கொண்டு சென்றார்.

மகேந்திரபுரி சென்றதும் ஒரு குறிப்பிட்ட நாளில் விஜயலட்சுமிக்கு மகுடாபிஷேகம் நடந்தது. சொல்லமுடியாத சிறப்புடன் நிகழ்ந்தது. சிற்றரசர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் வீரசேகரனும் அவன் மகன் குணசேகரனும் ஒருபுறம் ஒதுங்கியிருந்தார்கள். குணசேகரனுக்குத் தன் கண்களை நம்பமுடியவில்லை. தான் காதலித்த கண்மணி இப்போது சக்ரவர்த்தினியாக விளங்குகின்றாள்.

வீரசேகரன் அவளை வணங்கி நிற்கின்றான். எவளை இழிந்த [illegible] என்று [illegible] அவளை இப்போது இறைஞ்சுகின்றான். மெல்லத் [illegible]தையால் வந்து, "அப்பா! இந்த உத்தமியைத்தான் முன்னே நான் விரும்பியதும்; நீர் மறுத்தீர்; இன்று இவள் நாம் வணங்கத் தக்கவளாக இருக்கின்றாள். எல்லாம் எனையாளும் ஈசன் செயல்" என்றான்.

"மகனே! நமது சிறுமை எங்கே? விஜயலட்சுமியின் பெருமை எங்கே? அக்கினியைப் பஞ்சு நீண்ட முடியுமா? அதுபோல் கப்பங் கட்டமாட்டாத சிற்றரசன் சிறுவனாகிய நீ அவளை விரும் பினால் அது நடக்கின்ற காரியமா? சும்மாயிரு; கிட்டாதாயின் வெட்டென மற. எட்டாத மரத்திற்கு ஏணிவைக்கக் கூடாது" என்றான். முடிசூட்டு விழா வெகு சிறப்பாக நடந்தது. ஆடல் பாடல் விருந்து விழா எல்லாம் இனிது நிகழ்ந்தன. விஜயலட்சுமி கடைக்கண் பார்வையால் தன்னைக் காதலித்த குணசேகரனைப் பார்த்துக்கொண்டாள். அவன் அப்போது அவளுடைய ஏற்றத் தையும் தோற்றத்தையுங் கண்டு நாணினான்.

சில மாதங்கள் கடந்தன. தந்தையாகிய நீலாங்கன் "என் செல்வப்புதல்வியே! உனக்கு விருப்பமான ஒருவனை உனக்குத் திருமணஞ் செய்விக்க எண்ணுகின்றேன். எனக்கு வயது தளர்ந்துவிட்டது. ஆகவே ஒரு சிறந்த வரனை நீ நிச்சயிக்க வேண்டும்" என்றான்.

விஜயலட்சுமி, "அப்பா! ராஜேந்திரபுரியை ஆளும் வீரசேகரவேந்தனுடைய புதல்வர் குணசேகரரை நான் விரும்பி யுள்ளேன். அவரை அழைத்து எனக்குத் திருமணம் புரிந்து ஆசீர்வதியுங்கள்" என்றாள்.

இதனைக் கேட்ட நீலாங்கன் நகைத்தான். "செல்வக் குமாரியே! உனது பெருமை மேருமலையனையது. வீரசேகரன் நம்மிடம் கப்பங் கட்டுகின்ற சிற்றரசன். மேலும் கப்பங் கட்ட மாட்டாது சிறையிற் கிடந்தவன். அவன் மகன் குணசேகரனு எனக்கு மருமகனாக வருவது? இது பொருந்தாது. வேண்டாம். வேறு நமது தகுதிக்கு ஏற்ற அரசகுமாரனை விரும்பு" என்றான்.

"அப்பா! பெண்கள் கணவனை வரிப்பது ஒருமுறைதான். மறுமுறை கிடையாது. ஆட்டுக்குத் தோல் உரிப்பதும் ஒரு முறைதான் ஆகவே என் விருப்பத்தைத் தாங்கள் கெடுக்கக் கூடாது. நான் முருகன் திருக்கையில் இருக்கும் வேற்படை யறிய அவரை விரும்பியுள்ளேன். ஆகவே அவருக்கு என்னைத் திருமணம் புரிந்து வாழ்த்துவீர்" என்றாள்.

புதல்வியின் மொழியை அவரால் தடுக்க முடியவில்லை. வீரசேகரனை அழைத்தார். திருமண விஷயமாகக் கூறினார். வீரசேகரன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். திருமணநாள் குறிப்பிடப்பட்டது. குணசேகரனுக்கும் விஜயலட்சுமிக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தது. அந்தரங்கத்தில் கணவன் களிக்க விஜயலட்சுமி அந்த நாட்டக்குறிஞ்சியில் பாடலைப் பாடினாள். அப்போது குணசேகரன் தன்னையே மறந்துவிட்டான்.

முன்னே தமது பெருமைக்கு ஏற்றவள் அல்லள் என்று எண்ணிய அம் மடக்கோடி இப்போது தம்மின் பன்மடங்கு

உ
முருகா

ஆடவல்லான்

[கஉ0-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த நாதாந்த நடனத்தினையே சமயாதீதப் பழம் பொருளாகிய ஏகநாதன் தில்லைத் திருச்சிற்றம்பலத்துள் தனது நடராஜத் திரு வடிவத்தால் வெளியே விளக்கிக் காட்டுகின்றனன். நடராஜப் பெருமான் தன் ஆனந்த மேலீட்டினுல் ஆன்மாக்களின் மீதுள்ள தன் கருணையே தனதுஅருள் திருமேனியாகக் கொண்டு, எஞ்ஞான்றும் இடையருது நின்று நிகழ்த்தும் அப் பொற்புறு நடனமே தில்லைத் திருநடனமாகும். பரசிவம் பராசத்தியை நோக்குதல் உயிர்கட்குச் சிருட்டியாதிய வினையும் பொருட்டே என வுணர்க. இதனையே "மாதொருபாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே........ அற்புதத் தனிக் கூத்தாடும் நாதனுர்" என்று தெய்வச் சேக்கிழார் சுவாமிகள் கூறுகின்றனர்.

சிதாகாசமாகிய பரவெளியிலே பரம்பொருள் பரநாதத்தை எழுப்பி ஆடும் அவ்வாடலே ஆன்மாக்களுக்குத் தநுகரண புவன போகங்களைப் படைத்துக் கொடுத்தலோடு, முத்தியின்பத்தையும் வழங்குகின்றது. எனவே நாதாதீதமாகிய அந்த அருள் நடனம் உலக உயிர்கள் யாவும் உய்வதற்குக் காரணமாகும் என்பதையுணர்க. பரநாத தோற்றமே சிருட்டியாரம்பம்; அதன் ஒடுக்கமே

(முன்பக்கத் தொடர்ச்சி)

உயர்ந்தவளாக இருந்தும் தம்மை மதித்து மணந்துகொண்ட அவள் பெருமிதத்தை நினைத்து வீரசேகரனும் குணசேகரனும் அவளைப் பெண் தெய்வமாகவே பேணி மதித்தார்கள்.

விஜயலட்சுமி தனது நாட்டில் எங்கும் இசை மன்றங்களை நிறுவினுள். இசைவாணர்களுக்கு நல்ல ஆதரவு தந்தாள். எல்லோரையும் இசையுலகில் உலாவவிடுத்தாள். இசைமயமாகவே நாட்டை யலங்கரித்தாள். இசை நுணுக்கத்தினுல் பல நோய்களை நீக்கவும், இசை விருந்தால் கொடிய விலங்குகளை அடக்கவும், இசையமுதால் பகைவரைச் சாதுவாக்கவும் பயிற்றுவித்தாள்.

இவ்வாறு விஜயலட்சுமியின் புகழ் உலகமெங்கும் பரவியது. தன் அன்புக்குரிய செல்வி விஜயலட்சுமியின் பெருமையைக் கண்டு அவளுடைய வாழ்வு சிறக்கவேண்டும் என்று முருகனை வேண்டிய அவளுடைய குருநாதர் ஆனந்தவாரியில் அழுந்தினுர்.

—

சங்காரம். இத் தத்துவத்தைத் தெரிவிக்க வந்தது திருக்கோயிலில் உள்ள பள்ளியறை. பரசிவம் ஐந்தொழில் நிகழத் தன்னிற் பிரிவிலாத பராசக்தியை நோக்குதல் என்ற உண்மையை உலகம் உணர்ந்து உய்யும் பொருட்டே அந்த அமைப்பு என்பதைக் கூர்த்த மதியினர் உணர்வர்.

அன்றியும், நடராஜ வடிவம் ஐம்பெருந் தொழில்களைக் காட்டுவதுமன்றி, இவ்வைம்பெருந் தொழிலுக்கும் அதீதமாயுள்ள பேரின்ப நிலையையும் குறிக்கும்; சிவபரம்பொருள் கேவல திசையில் இருந்த ஆன்மாக்களுக்குத் தநுகரணுதிகளைக் கொடுத்தல் **தூல நடனம்** எனப்படும்; அது ஆன்மாக்களுக்குப் பெத்த திசை அறிவிக்குந் தொழில் **அதிசூக்கும நடனம்** எனப்படும். ஆன்மாக்கள் பந்தத்தினின்றும் விடுபட்ட முத்த திசையில் அநுபவப் பேறு **பரநடனம்** அல்லது **ஞானநடனம்** எனப்படும்.

எனவே ஆனந்தத் தாண்டவம் பஞ்சகிருத்தியத்தை மாத்திரம் காட்டுவதன்று; அது நின்மலதுரிய நிலையில் உண்டாகும் அருள் விளக்கத்தையுங் காட்டி, அதற்குப்பின் உண்டாகும் துரியாதீதத்துச் சிவபோக ஆநந்த நிலையையுங் காட்டுவதாகும். மெய்ஞ் ஞானமாகிய அருள்விளக்கமே மெய்யுணர்வாகும்.

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

என்பார் திருவள்ளுவர்.

இந்த மெய்ஞ்ஞான அருள் விளக்கத்துக்குப்பின் நிகழா நிற்குந் திருக்கூத்தே சிவபோகமாகும். இதனைச் சேக்கிழாரன்றி வேறு யாரால் விளக்க முடியும்? சிவயோக சிகாமணியாகிய திருமூல நாயனுரது அநுபவப் பேற்றைக் கூறுமிடத்து இதனைக் கூறுகின்ருர்.

எவ்வுலகும் உய்ய எடுத்தருளிய சேவடியாரைச்
செவ்விய அன்புற வணங்கிச் சிந்தை களிவரத்தினைத்து
வவ்விய மெய்யுணர் வின்கண் வரும் ஆனந்தக் கூத்தை
அவ்வியல்பிற் கும்பிட்டங் காராமை யமர்ந்திருந்தார்,

சிவபோகவிளைவாம் திருக்கூத்தைக் கண்டு திளைத்தசித்தருள் ஒருவராகிய திருமூல நாயனுர் தமது திருமந்திரத்தில் இப் பேரின்பத் திருநடனத்தின் உட்பொருளை மிகவும் சிறப்பித்து விளக்கியருளினுர்.

பரம்பொருளாகிய சிவம் ஆன்மாக்களின்பால் வைத்துள்ள கருணையே தமது உருவாகக் கொண்டு பராபரையின் திருமுன் ஆனந்தத் திருக்கூத்தை இயற்றுகின்ருர் என்ற தத்துவத்தைக் கூறுகின்ருர்.

அண்டங்கள் ஏழினுக் கப்புறத் தப்பான்
உண்டென் றசக்தி சதாசிவத் துச்சிமேல்
கண்டங் கரியான் கருணைத் திருவுருக்
கொண்டங் குமைகாணக் கூத்துகந்தானே,

அப்பராநந்தக் கூத்து நிகழ்வதற்குரிய இடம் பேரின்ப நிலையாகிய துரியமே என்பதைக் கூறுகின்றார்.

தெற்கு வடக்குக் கிழக்கு மேற் குச்சியில்
அற்புத மானதோர் அஞ்சு முகத்திலும்
ஒப்பில் பேரின்பத் துப்ப உபயத்துள்
தற்பரன் நின்று தனிநடஞ் செய்யுமே.

இப்பேரின்ப் உபயத்துள் நிகழ்வதாகிய நடனத்திற்கு அம்பலமாக அமைந்துள்ளது பராசத்தியேயாம் என்பதைக் கூறுகின்றார்.

அண்டங்கள் ஓரேழும் அம்பொற்பதியாகப்
பண்டையா காசங்கள் ஐந்தும் பதியாகத்
தெண்டினிற் சக்தி திருஅம்பலமாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்துகந்தானே,

அத் திருக்கூத்தைக் கண்கூடாகக் காணவல்லார் மாயை கடந்த மாதவரேயாகும்.

தீமுதல் ஐந்தும் திசை எட்டும் கீழ்மேலும்
ஆயும் அறிவினுக் கப்புறம் ஆனந்தம்
மாயைமா மாயை கடந்து நின்றார் காண
நாயகன் நின்று நடஞ் செய்யுமாறே.

அப் பரமானந்தக் கூத்தைக் காணுந்தோறும் காணுந்தோறும் புளியைக் கண்டார்க்கு நாவில் நீர் ஊறுவதுபோல் உள்ளத்தே ஆனந்த அருவிபாயும்; சிவபோக விளைவே அத்திரு நடனம்.

புளிக்கண்டவர்க்குப் புனலூறு மாப்போல்
களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
அளிக்கும் அருட்கண்ணீர் சோர் நெஞ்சுருக்கும்
ஒளிக்குள் ஆனந்தத் தமுதூறும் உள்ளத்தே,

நாதாந்த நிலையிலே நின்று நம்பன் நடிக்கின்றதனாலே அண்ட சராசரம் யாவும் ஆடுகின்றன.

தேவர்சுரர் நரர் சித்தர் வித்தியாதரர்
மூவர்கள் ஆதியின் முப்பத்து மூவர்கள்
தாபதர் சத்தர் சமயஞ் சராசரம்
யாவையும் ஆடிடும் எம்மிறை யாடவே.

மேலும் சிவபோகமாகிய முத்தி முடிவைக் குறித்தலோடு, சிவபரம் பொருளே ஆக்கல் அளித்தல் அழித்தல் மறைத்தல் அருளல்என்ற ஐந்தொழில்களையும் அயன் அரி உருத்திரன் மகேசன் சதாசிவன் என்னும் ஐவகை மூர்த்திகளின் வழியாகச் செய்கின்றது என்பதைக்காட்டி நிற்குந் தன்மை தன்னிடந் தங்குமாறு அமைந்துள்ள திருவுருவம் நடராஜ வடிவமாகும்.

அவருடைய திருக்கரத்தில் விளங்கும் உடுக்கை (டமருகம்) யினால் உலக சிருட்டியையும், அபயகரத்தினால் காத்தலையும், நெருப்பை ஏந்திய திருக்கரத்தினால் அழித்தலையும், ஊன்றிய திருவடியால் மறைத்தலையும், தூக்கிய திருவடியால் ஆன்மாக் களுக்கு அருளலையும் இத்திருவுருவம் காட்டுகின்றது.

இதனை "உண்மைவிளக்கம்" என்ற சித்தாந்த நூலாசிரியர் மனவாசகங் கடந்தார் கூறுகின்றார்.

தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உள்ள திரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

அரன்துடிதோற்றம் அமைத்தல் திதியாம்
அரன்அங்கி தன்னில் அறையிற் சங்காரம்
அரனுற் றணைப்பில் அமருந்தி ரோதாயி
அரனடி யென்றும் அநுக்கிரகம் என்னே. —திருமந்திரம்.

தாண்டவஞ் செய்யவல்ல ஆண்டவன் மாயையை எடுத்து அப்படி உடுக்கையினுல் உதறுகின்றார். ஆன்மாக்களின் வல் வினைகளை-சஞ்சிதத்தைத் தமது திருக்கரத்தில் உள்ள நெருப்பில் சுட்டுச் சாம்பலாக்குகின்றார். ஆணவமாகிய முயலகனை மேலெழா வண்ணம் கிரியா சத்தியாகிய வலப்பாதத்தினுல் மிதித்திருக்கின் றார். ஆனந்த அநுபவத்தை ஞான சக்தியாகிய தூக்கிய திருவடி யினுல்தந்து ஆன்மாக்களைப் பேரின்பசாகரத்தில்அழுத்துகின்றார். இதுவே அவர் செய்யும் பரத நாட்டியத்தின் உட்பொருள்.

மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாய அமுக்கிஅருள் தான்எடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பரதந் தான். — உண்மை விளக்கம்.

இனி நடராஜ வடிவம் பஞ்சாட்சரத்தால் அமைந்ததும் ஆகும். அதனை அறிந்து தியானிப்பதும் ஞான சாதகர்களுக்கு கூறப்பட்ட முறைகளுள் ஒன்றாகும்.

ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்.

இதன் பொருள்:

"மாணுக்கனே! பொன்னம்பலமுடையான் திருநடனஞ் செய்கின்ற முறையைச் சொல்லுகின்றோம்; கேட்கக் கடவாயாக.

நின்ற பாதத்திலே ந
திருவுந்தியிலே ம
திருந்தோளிலே சி
திருமுகத்திலே வா
திருமுடியிலே ய

இந்தவண்ணம் எம்பிரான் ஐந்தெழுத்தையும் உருவமாகக் கொண்டு ஆடுகின்றான் என்று அறிக. இது தூலபஞ்சாக்கரம்.

அன்றியும் சூக்கும பஞ்சாக்கர வகையாலும் அப் பரமனது தாண்டவ வுருவம் பேசப்பெறும்.

சேர்க்குந் துடிசிகரம் சிக்கெனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கிலிறைக்
கங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான்.

மருவுந் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய அப்பும் அனலுடன் கையும்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமஎன ஓதே.

ஒலிக்கின்ற உடுக்கை சி
வீசிய கரம் வ
அமைத்த கரம் ய
அனலேந்திய கரம் ந
முயலகனைமிதித்த பதம் ம

இத்தகைய அருளானந்த அற்புதத் திருக்கூத்தை உள் முகத்தில் நாடி அலைகின்ற மனத்தை ஒடுக்கி உள்ளுணர்வு பெற்று உவக்கவேண்டும் என்கின்றார் திருமூலர்.

ஆடிய காலும் அதிற்சிலம் போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமும்
கூடிய கோலம் குருபரன் கொண்டாடத்
தேடியு(ள்)ளே கண்டு தீர்ந்தற்றவாறே.

இதுகாறும் கூறிய விளக்கத்தினால் 'நாதாந்த நடன மென்னும், ஆனந்தக் கூத்தால் உலகில் காணப்படும் அசைவுகள் யாவும் அவன் தன் அருளாலே செய்யும் ஆணையினாலே நிகழ்கின்றன என்பதும், அத்தகைய நிகழ்ச்சியானது ஆன்மாக்கள் தம்முடைய இன்ப துன்பங்கட்குக் காரணமான பந்தத்தினின்றும் நீங்கிப் பேராவியற்கைத்தாகிய முத்தியின்பத்தைப் பெறும் பொருட்டே நிகழ்கின்றதென்பதும், அத்திருக் கூத்து நடைபெறுமிடம் தூலமாகிய திருச்சிற்றம்பலமே யன்றி, உலகமாகிய திருக்கோயிலும், சூக்குமமாகிய தகராகாசம் எனப்படும் அன்பர்களது இதய கமலமும் ஆகும் என்பதும் இனிது புலப்படும்.

இத்தகைய தத்துவங்களைத் தெளிவுறக் காட்டுந் திருவுருவம் நடராஜ வடிவினையன்றி வேறு ஒன்றும் இல்லை. இதனை நமக்கு உணர்த்திய ஆன்றோர்களின் மதி நலம் துதி நலம் உடையதாகும். நடராஜ வடிவினைச் சூழ்ந்திருக்குந் திருவாசி ஓங்காரமாகும். இத்தகைய திருவுருவம் சிறப்பாக விளங்குவதனால் தில்லையைத் தெரிசித்த மாத்திரத்தில் முத்தி யென முந்தையோர் மொழிந்தனர். அதாவது நடராஜ வுருவத்தால் விளங்கும் சிவ போக நிலையைத் தரிசித்தமாத்திரத்தில் முத்தியுறும் என்பது போதரும்.

அதனால் இத் தில்லை நடராஜ வுருவினைக் காணும் வாய்ப்பு கிடைக்குமாயின் மண்ணுலகில் மனிதப் பிறப்பு மற்றொருமுறை வந்தாலும் குறைவில்லை என்கின்றார் அப்பர்மூர்த்திகள்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

தன்பால் வந்த அடியார்களை "என்று வந்தாய்?" என்று கருணையுடன் கேட்பது போலவும் இருக்கின்றது தென்பால் நோக்கியாடும் தில்லைப்பரமனது அபய கரத்தின் குறிப்பு.

ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை
கன்றிய காலனைக் காலால் கடிந்தான் அடியவர்க்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
"என்று வந்தாய்?" எனும் எம்பெருமான்றன் திருக்குறிப்பே.

"இனி எல்லாமாய் நின்ற எம்பிரானாகிய அம்பலக்கூத்தனைத் தினையளவு நேரமாகிலும் நான் மறந்து உய்யமாட்டேன்" என்கின்றார் அப்பர்.

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனை
தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனே.

உ
ஓம் குஹாய நம :



திருப்புகழமிர்தம்

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

மலர் 21 | துன்முகி ஆண்டு ஐப்பசித் திங்கள் அக்டோபர்-1956 | இதழ் 7

திருப்புகழ்

திருச்செந்தூர்

தண்டே னுண்டே வண்டார் வஞ்சேர்
தண்டார் மஞ்சுக் குழல்மாதுர்
தம்பா லன்பார் நெஞ்சே கொண்டே
சம்பா வஞ்சொற் றடிநாயேன்

மண்டோ யந்தீ மென்கால் விண்டோய்
வண்கா யம்பொய்க் குடில்வேறுய்
வன்கா னம்போ யண்டா முன்பே
வந்தே நின்பொற் கழல்தாராய்

கொண்டா டும்பேர் கொண்டா டுஞ்சூர்
கொன்றுய் வென்றிக் குமரேசா
கொங்கார் வண்டார் பண்பா டுஞ்சீர்
குன்று மன்றற் கிரியோனே

கண்டா கும்பா லுண்டா யண்டார்
கண்டா கந்தப் புயவேளே
கந்தா மைந்தா ரந்தோள் மைந்தா
கந்தா செந்திற் பெருமாளே.

பதவுரை

கொண்டாடும் பேர்=தன்னைக் கொண்டாடிப் புகழ்கின்றவர்களை! கொண்டாடும் சூர் கொன்ருய்=மகிழ்ந்து கொண்டாடுகின்ற சூர பன்மனைக் கொன்றவரே! வென்றி குமர ஈசா=வெற்றியையுடைய குமாரக் கடவுளாகிய தலைவரே! கொங்கு ஆர் வண்டு=பூந்தாதுகளில் நிறைந்துள்ள வண்டுகள், ஆர்பண்பாடும்=அரிய பண்களைப் பாடுகின்ற' சீர் குன்ரு=சிறப்பு குறையாத, மன்றல் கிரியோனே=திருமணஞ் செய்து கொண்ட மலையாகிய வள்ளி மலையில் வாழ்பவரே! கண்டு ஆகும் பால் உண்டாய்=கற்கண்டு போன்ற (உமையம்மையின்) திரு முலைப்பால் உண்டவரே! அண்டார் கண்டா=பகைவரைக் கண்டித்தவரே! கந்த புயவேளே=நறுமணம் நிறைந்த புயாசலத்தையுடையவரே! கந்து ஆம் மைந்து ஆர்அம் தோள் மைந்தா=கம்பத்துக்கு நிகரான வலிமை நிறைந்த அழகிய தோளுடைய வீரரே! கந்தா=கந்தக்கடவுளே! பெருமாளே=பெருமையிற் சிறந்தவரே! தண்தேன் உண்டே=குளிர்ந்த தேனைப்பருகி, வண்டு ஆர்வம் சேர்=வண்டுகள் அன்புடன் மொய்க்கின்ற, தண்தார் மஞ்சு குழல் மாஞர் தம்பால்=குளிர்ந்த பூமாலை சூடிய மேகம் பேன்ற கூந்தலையுடைய மாதர்களிடம், அன்பு ஆர் நெஞ்சே கொண்டே=அன்புநிறைந்த மனத்தைக் கொண்டு, சம்பாவம் சொற்று=நிகழ்ச்சிகளை யெல்லாம் பேசுகின்ற, அடிநாயேன்=அடிமையாகிய நாயினேன், மண்=மண்ணும், தோயம்=தண்ணீரும், தீ=நெருப்பும், மென்கால்=மெல்லிய காற்றும், விண்=வெளியும், தோய்வண் காயம்=தோய்ந்துள்ள வளங் கொண்ட உடம்பாகிய, பொய் குடில்வேருய்=பொய்யாகிய சரீரத்தினின் றும் உயிர் நீங்கி, வன்கானம் போய்=கொடுங் கானகம் போய், அண்டா முன்பே=நெருங்கா முன்னர், வந்தே நின் பொன் கழல் தாராய்=அடியேன் முன் வந்தருளி தேவரீருடைய அழகிய திருவடிமலரைத் தந்தருளுவீர்.

பொழிப்புரை

தன்னைப் புகழ்கின்றவர்களை ஆதரித்து மகிழ்கின்ற சூர பன்மனைக் கொன்றவரே! வெற்றி நிறைந்த குமாரக்கடவுளே! பூ மலர்களில் நிறைந்த வண்டுகள் அருமையான பண்களைப் பாடுகின்ற சிறப்பு குறையாத வெள்ளிமலையில் எழுந்தருளி யிருப்பவரே! கற்கண்டுபோல் இனிமை நிறைந்த அம்பிகையின் திருமுலைப்பாலை உண்டவரே! பகைவரைக் கண்டித்தவரே! வாசனை தங்கிய புயத்தையுடைய உபகாரியே! தூண்போன்ற வலிமை நிறைந்த அழகிய தோள்களையுடைய இளம்பூரணரே! கந்தக் கடவுளே! பெருமிதமுடையவரே! குளிர்ந்த தேனை யுண்டு வண்டுகள் அன்பு செய்கின்ற குளிர்ந்த மலர்மாலை சூடி மேகம் போல இருக்குங் கூந்தலையுடைய பொதுமாதர்களிடம் ஆசைவைத்த மனத்தையுடையவனுய் அவர்களுடைய

செயலைப் பாராட்டிப் பேசுகின்ற நாயேனுகிய அடியேன், மண், நீர், நெருப்பு, காற்று, வெளி என்ற ஐம்பூத சேர்க்கையாலாகிய இப் பொய்யாகிய உடம்பிலிருந்து உயிர்நீங்கி, சுடுகாடு சென்று சேரா முன்னம் தேவரீர் எளியேன்முன் எழுந்தருளி அழகிய அடிமலரைத் தந்தருளுவீர்.

விரிவுரை

தண்டேனுண்டே வண்டு :—

தண் தேன் என்று பிரித்துக் கொள்க; குளிர்ந்த தேன்; குளிர்ந்த மலர்களிலிருந்து வண்டுகள் தமது திறமையால் மிகவும் பாடுபட்டு சிறிது சிறிதாக எடுத்துக் கொண்டு வந்து சேகரிப்பது தேன். வண்டு இல்லையேல் தேன் இல்லை.

தாங்கள் உண்ணுமலும் ஓய்ந்து சிறிதுநேரங்கூட இருக்காமலும், உழைத்து உழைத்துத் தேனைக் கொணர்ந்து சேர்க்கின்றன தேனீக்கள். அதனைப் பிறர் அபகரித்துக்கொள்ளுகின்றனர்.

உண்ணுமலும் உடுக்காமலும் பிறருக்குக் கொடுக்காமலும், சேர்த்து வைக்கின்ற லோபியினுடைய பொருளும் பிறரால் கவரப்படும்.

" வைத்தீட்டி ஞரிழப்பர் வான்தோய் மலைநாட
உய்த்தீட்டுந் தேனீக் கரி. "

என்பது நாலடி.

தண்டார் மஞ்சுக் குழல் மாஞர்:—

வண்டுகள் மகிழ்ந்து மொய்க்கின்ற குளிர்ந்த மலர்மாலைகளை வகை வகையாகக் கட்டித் தமது கூந்தலில் பொதுமகளிர் சூடிக் கொள்வார்கள்.

அந்தக் கூந்தல் கருமை நிறமாக இருப்பதனுல் மேகம்போல் அழகாக இருக்கும்.

மஞ்சு—மேகம்.

மாஞர்—மான்போன்றவர்கள்.

தண்டார்—தண் தார் எனப் பதம் பிரித்துக்கொள்க.

தம்பாலன்பார் நெஞ்சே கொண்டே:—

மனிதர்களாகிய நாம் இந்த மனித உடம்பை நமக்குத் தந்த இறைவனிடம் அன்புவைக்க வேண்டும். இடையருத இன்பத்தை வழங்குபவன் இறைவன். அத்தகைய எம்பெருமானிடம் அன்பு வைக்காது. இன்பம்போல் தோன்றும் துன்பத்தைத் தரும் பொதுமகளிர்பால் அன்புவைக்கின்ற மனதைக் கொள்கின்றனர். அதனால் எத்தனை எத்தனைக் கேடுகளை யடைகின்றனர்.

சம்பாவஞ் சோற்றடி நாயேன்:—

சம்பவம்—என்பது சம்பாவம் என வந்தது. சம்பவம்—நிகழ்ச்சி. போதுமகளிருடைய செயல்களைக் குறித்து அவர்பால் மயல் கொண்டோர் வியந்து நயந்து பேசி இன்புறுவர். அதிலே அவர்கட்கு ஒரு மகிழ்ச்சி.

இறைவனுடைய திருநாமங்களைச் சொல்வதற்காகவே இந்த நா அமைந்துளது.

> கற்றுக் கொள்வன வாயுள நாவுள
> இட்டுக் கொள்வன பூவுள நீருள
> கற்றைச் செஞ்சடையானுளன் யாமுளம்
> எற்றுக்கோ நமனால் முனி வுண்பதே.

மண்டோயந்தீ மேன்கால் விண்டோய்
வண்காயம் போய்க் குடில்:—

இந்தவுடம்பு மண் முதலிய ஐம்பெரும் பூதங்களினாலாகியது. பஞ்ச பூதபரிணம சரீரம். ஐம்பெரும் பூதங்களின் சேர்க்கையால் இது வந்துளது. நிலைபேறில்லாதது. நீர்மேற் குமிழிக்கு நிகரானது.

> 'ஐந்துவிதமாகின்ற பூத பேதத்தினால்
> ஆகின்ற யாக்கை நீர்மேல்
> அமிழ்கின்ற குமிழி'

என்கின்றார் தாயுமானார்.

> ககனமு மநிலமும் அனல்புனல் நிலமமை
> கள்ளப் புலால் க்ருமிவீடு.

என்ற திருப்புகழாலும் அறிக.

பொய்யான உடம்பை மெய் என்று நம்பி, தவநெறி சேராது அவநெறி சேர்ந்து, காமதேனுவின் பாலைக் கமரில் கொட்டியதுபோல், தமது நேரத்தை வீணுக்கி மாநுடர் வறிதே கெடுகின்றனர்; அந்தோ! பரிதாபம்,

> பொய் விளக்கப் புகுகின்றீர் போது கழிக்கின்றீர்
> புலைகொலைகள் புரிகின்றீர் கலகல என்கின்றீர்
> ஐவிளக்கு மூப்பு மரணுதிகளை நினைத்தால்
> அடிவயிற்றை முருக்காதோ கொடிய முயற்றுலகீர்
> கைவிளக்குப் பிடித்தொருபாழ்ங் கிணற்றில் விழுகின்ற
> களியரெனக் களிக்கின்றீர் கருத்திருந்துங் கருதீர்
> மெய்விளக்கும் எனது தந்தை வருகின்ற தருணம்
> மேவியதிங் கடைவீரேல் ஆவிபெறுவீரே.

என்று உலகினரை நோக்கி அருளால் பாடுகின்றார் இராமலிங்க அடிகளார்.

> பொய்க்கூடு கொண்டு புலம்புவனோ எம்மிறைவர்
> மெய்க்கூடு சென்று விளம்பிவா பைங்கிளியே.
> —தாயுமானார்.

வன்கானம் போயண்டா முன்பே:—

இந்த வுடம்பு இறைவனை யடைவதற்காக வந்தது. நானே வரவில்லை;முன்செய்த மாதவத்தின்பயனாய் இறைவன் தரவந்தது. இந்த உடம்பாலாய பயன் இருவினைகளின் வேரறுத்து மும்மலத் தொடர்பையும் அகற்றி அருளின் தொடர்பு கொண்டு இறைவனுடன் இரண்டறக் கலத்தலேயாம்.

அந்த் முயற்சியில் ஈடுபடாதார் செத்து செத்துப் பிறப்பதே தொழிலாகியுழல்வர். "மண்ணுண்டு போகுது ஐயோ! கெடுவீர் இந்த மானுடமே" என்று வருந்துகின்றார் பட்டினத்து சுவாமிகள்.

ஆகவே இந்த உடம்பு அழியுமுன் நற்கதிக்குரிய நலத்தைத் தேடிவிட வேண்டும். அதிலே அயராத முயற்சியிருக்க வேண்டும்.

> "கைவைத்த வீடு குலையுமுன்னே வந்து காத்தருளே"

என்ற அருணகிரிநாதரது கந்தரலங்காரத்தை நினைந்த எந்தக் கன் மனந்தான் கரையாது?

> "காதலார் மைந்தரும் தாயராருஞ் சுடு
> கானமே பின்தொடர்ந் தலறுமுன்
> சூலம்வாள் தண்டு செஞ் சேவல் கோதண்டமும்
> சூடு தோளுந் தடந் திருமார்பும்
> தூயதாள் தண்டையுங் காண ஆர்வஞ் செயுந்
> தோகைமேல் கொண்டுமுன் வரவேணும்"

என்ற அரிய திருப்புகழும் ஈண்டு நினைவு கூரற்பாலது.

வந்தே நின்போற் கழல்தாராய்:—

"முருகா! அடியேனுடைய உடம்பை விட்டு உயிர் போகு முன் சிறியேன்முன் தேவரீர் எழுந்தருளி வந்து எளியேனுக்கு உமது பொன்னார் திருவடியைத் தந்து காத்தருள வேண்டும்" என்று அருணகிரிநாதர் உள்ளம் உருகி முறையிடுகின்றார். இல்லை; இப்படி முறையிடுமாறு நம்மைத் தூண்டுகின்றார் அவர் பரகதிக்குச் சிறந்த அந்தவழியைக் காட்டுகின்றார். வழிகாட்டி...

கொண்டாடும்பேர் கொண்டாடுஞ் சூர் கொன்ருய்:—

தன்னை யார் யார் கொண்டாடுகின்ருர்களோ அவர்களை யெல்லாம் மகிழ்ந்து ஆதரிப்பான் சூரபன்மன். தன்னைக் கொண்டாடுவதற்கென்றே பலரை வைத்திருப்பர் சிலர். இன்றுங் காணலாம்! சிலருக்குத் தன்னைக் கொண்டாடிஞல் அதில் ஒரு பெருமகிழ்ச்சி. அறிஞர்கள் தன்னை யாராவது புகழ்ந் தால் வருந்துவர் நாணுவர்.

மாலை நேரத்தில் மரத்தின் இலைகள் தலைகவிழ்ந்திருந்தன. அதனைக்கண்டு கூறவந்தார் புலவர். "தன்னைப் புகழக்கேட்ட மதிநலம் படைத்த மாண்புடைய ஒருவன் தலை கவிழ்ந்திருப்பது போல் இருக்கின்றன" என்கின்ருர்.

தம்புகழ் கேட்டார் போல் தலை சாய்ந்து மரந் துஞ்ச"

—கலித்தொகை.

சூர் கொன்ருய்:—

சூர்—துன்பம். துன்பத்தைச் செய்கின்றவன் சூரபன்மன்; அதஞல் சூர் எனப்பட்டனன். இவன் 108 யுகங்கள் அமரர்கட்கு அலக்கண் புரிந்தான். அதஞல் அவனை மாய்த்தனர் குமாரக் கடவுள். இது மறக்கருணை யெனவுணர்க. குற்றஞ் செய்கின்ற மகனைத் தாய் அல்லது தந்தை அடிக்கின்றனர். மகன் மீது பகை காரணமாகவா அடிக்கின்றனர்? இல்லை. அவன் திருந்தி உய்ய வேண்டும் என்ற கருணையிஞலேயே தண்டிக்கின்றனர். அது போல் உயிருக்குத் தந்தையாகிய இறைவன் குற்றம் புரிந் தோரை உய்யும்பொருட்டுத் தண்டிக்கின்றனன். போற்றுனர்க்கு அறக் கருணையும், அல்லார்க்கு மறக்கருணையும் புரிந்து ஆட்கொள்வது இறைவனுடைய இயல்பு.

கொங்கார் வண்டார் பண்பாடும் :—

கொங்கு ஆர் வண்டு ஆர் பண் பாடும் எனப் பதப் பிரிவு செய்க.

கொங்கு - வாசனை. அது தானியாகு பெயராக இங்கே மலரைக் குறிக்கின்றது. "கொங்கு தேர் வாழ்க்கை யஞ் சிறைத்தும்பி" என இறைவன் தருமிக்குப் பாடித்தந்த பாடலா லும் அறிக.

ஆர்—நிறைதல்.

வண்டு - ஆர் - இங்கே ஆர் என்ற சொல்லுக்கு அருமை போன்பது பொருள்.

மலர்களில் நிறைந்த வண்டுகள் தேனையுண்ணும்பொருட்டு அரிய பண்களைப்பாடும். ஏன்? மலர் விரியும் பொருட்டு. நல்ல

பண்ணைக் கேட்டவுடன் அரும்பு மலர்கின்றது. இசைக்கு அத் துணை வலிமையுளது. இன்னும் பிச்சை கேட்க வருகின்ற யாசகர்கள் ஏதாவது ஒரு பாடலைப் பாடிக்கொண்டே வருவது கண்கூடு. பாடல் கேட்டவர் பரிசில் தருவர். அதுபோல் வண்டு பாடும் பண்ணுக்குப் பரிசிலாக மலர் தேன் தருகின்றது.

சீர்குன்ரு மன்றல் கிரியோனே :—

மன்றல் கிரி என்பது வள்ளிமலை. வள்ளியைப் பெருமான் மணந்துகொண்டதஞல் அப்பெயர் பெற்றது. வள்ளிமலை மிகுந்த மகிமை வாய்ந்தது. உலக மாதா இங்கு அவதரித்து வளர்ந்தனர்; வேதங்களும், முனிவரும் மூவருந் தேவருந் தேடிக் காணுத திருமுருகன் இம்மலையைத் தேடி வந்து, மறை கமழும் மலரடி நோவ இம்மலையில் நடந்தான் எனில் இம்மலையின் பெருமை நம்மால் இத்தன்மைத்து என்று நினைக்கவும், சொல்ல வும் தரமோ?

" வீடும் சுரர்மாமுடி வேதமும் வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே "

என்ற அநுபூதியின் திருவாக்கால் இவ் வள்ளிமலையின் பெரு மையையுணர்க.

இம்மலை தொண்டை நாட்டில் (வட ஆர்க்காடு மாவட்டத் தில்) திருவல்லம் (புகை வண்டி நிலையம் உண்டு) என்ற திருத் தலத்தின் வடக்கே 5 கல் தொலைவில் விளங்குகின்றது. முருகன் அடியார்கள் அனைவரும் வாழ்நாளில் ஒருமுறையாவது அவசியம் சென்று தரிசிக்க வேண்டும். இல்லையேல் வள்ளி யம்மையின் திருவருளை எங்ஙனம் பெறமுடியும்? தங்கள் குரு நாதர் பிறந்த தலத்தைக்காண இஸ்லாமிய அன்பர்கள் பல்லா யிரம் மைல் கடந்து பாலைவனம் வழியே பொருள் நிரம்பச் செல வழித்துப் போகின்ருர்கள். முருகன் அடியார்கள் நம் நாட்டில் எளிதாகப் போகக் கூடிய வள்ளிமலை சென்று இயற்கையாகக் குகைக் கோயிலில் வற்ருத கருணைமூர்த்தியாக எழுந்தருளியுள்ள வள்ளி கல்யாண வரதனைச் சேவிக்க வேண்டாமா?

திருவல்லம் சென்னையிலிருந்து பெங்களூர் போகும் இருப்புப் பாதையில் காட்பாடிக்கு அருகில் உள்ளது. திருவல்லம் தேவார, திருப்புகழ், பெரிய புராணப் பாடல்கள் பெற்ற அரியதலம். அதன் அருகில் வள்ளிமலை இருப்பதஞல் போகும் வழியில் திருவல்லத் தைத் தரிசிக்கலாம். ஒரு கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்தியது போல், ஒரு முயற்சியில் இரு தலங்களைத் தரிசித்த நன்மை கிடைக்கும். நீவா நதிக்கரையில் திருவல்லம் என்னும் தலம் இருக்கின்றது. வில்வவனநாதர் என்பது சுவாமி பேர். அருமை யான ஆலயம். அன்பர்கள் அனைவரும் திருவல்லம் தரிசித்து, அதனைக் கடந்து அம்மை அவதரித்த அரிய தலமாகிய வள்ளி மலையைச் சேவித்து அருள் நலத்தைப் பெறுவார்களாக.

கண்டாகும் பாலுண்டாய் :—

கண்டு—கற்கண்டு. கற்கண்டுபோல் இனிமையாகவுள்ள அம்மை திருமுலைப்பாலுண்டதைத் தெரிவிக்கின்றது.

> " திருந்தப் புவனங்கள் ஈன்ற பொற்பாவை திருமுலைப்பால் அருந்தி "

என்பது அலங்காரம்.

கந்தா மைந்தாரந்தோள் மைந்தா :—

கந்து ஆம் மைந்து ஆர் அம் தோள் எனப் பதப்பிரிவு செய்க.

கந்து	—	தூண்.	தூண்போன்ற
மைந்து	—	வலிமை.	வலிமை நிறைந்த
ஆர்	—	அருமை.	அரிய
அம்	—	அழகு.	அழகிய

தோள்மைந்தா — தோளையுடைய வீரரே!

கந்தா செந்திற் பெருமாளே :—

கந்தன் என்பது முருகனுடைய நாமங்களில் உயர்வுடையது. இதன் பொருளை முன்னர் நமது அமிர்தத்தில் விரித்து எழுதியுள்ளேன்.

செந்தில்—இரண்டாவது படை வீடு; சுவாதிட்டானத் தலம்.

கருத்துரை

சூரசங்காரரே! வள்ளிமலை வேலவரே! செந்திலாண்டவரே! மாதராசையிற்பட்டு மாண்டு சுடலை ஏகாமுன் வந்தருளி பாதமலரைத் தந்து ஆட்கொள்ள வேண்டும்.



உ
முருகா

கற்பு

நீலி

' முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும் '

முத்தித் தலம் ஏழு. காசி, காஞ்சி, அவந்தி, அயோத்தி, மதுரை, மாயை, துவாரகை. இவற்றுள் 6 தலங்கள் வடநாட்டில் உள்ளவை. காஞ்சி ஒன்று தென்னாட்டில் உள்ளது. "நகரேஷு காஞ்சி" என்பர். காஞ்சி மாநகருக்கு நிகரான நகர் இல்லை என்று முருகப் பெருமானே வள்ளியம்மையாரிடம் கூறியிருக்கின்றனர். அரிய பெரிய திருத்தலம். தொண்டை மண்டலத்தின் தலை நகருமாகும். அம்மை மணலால் மாவடியில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டது. சுந்தரர் கண் பெற்ற தலம்.

இத்தகைய கச்சியம்பதியில் **விதேகன்** என்ற வேதியன் ஒருவன் வாழ்ந்தனன். அவன் மனைவி **நவஞானி**. இருவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள். நவஞானிக்கு ஒரு மகன் பிறந்தனன்.

விதேகன் மனம் ஆசைக்கு அடிமையாயிற்று. வேறு மனைவியை மணந்து கொள்ள விரும்பினான். உரிய நண்பர் பலர் தடுத்தனர். "தாரமிருக்க மற்றொரு தாரம், பாரம்; அதனால் வினையும் கோரம்" என்று அன்பர்கள் கூறிய அறவுரையை அவன் கேட்டானில்லை. இளையாள் ஒருத்தியை மணந்து கொண்டான். பின்னர் இளையாள் கரும்பாகவும், மூத்தாள் வேம்பாகவும் ஆனார்கள். மூத்தவளாகிய நவஞானியை அறவே வெறுத்தான். மூத்தவள் கணவன் கால்மீது வீழ்ந்து "பிராணபதி! நான் தங்கள் மனைவியல்லவா? என்னை வெறுக்க வேண்டாம். இளையாளிடம் பிரியமாக இரும். நான் தடுக்கவில்லை. என்னையும் என் குழந்தையையும் இடர்ப்படுத்த வேண்டாம் என்னை அல்லற்படுத்துவது அழகன்று, அருளன்று" என்று கூறி வேண்டினாள்.

மோகவெறி பிடித்த மூடனாகிய விதேகன் இளையாளுடைய மையல் கடலில் முழுகினான்; மதி மயங்கினான். மூத்தவளையும் அவள் மகனையும் வஞ்சனையாக ஊர்ப் புறத்தே அழைத்துச் சென்று கொன்றுவிட்டான்.

நவஞானி பேயாக ஆனாள். கோதிப்புற்றாள். பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று பதறினாள். இங்கும் அங்குமாக அப் பேய்வடிவு அலைந்தது. திருவாலங்காட்டிலே ஒரு அந்தணன் இருந்தான். புரிசைக்கிழான் என்பதுஅவன்பேர். அவனுக்கு மகளாக வந்து பிறந்தது அப்பேய். அது பெண் வடிவாக இல்லாமல் பேய்த் தோற்றமாக இருப்பதைக் கண்டு அந்தணன் அஞ்சி விரட்டிவிட்டான். அப்பேய் திருவாலங்காட்டின் சுற்றுப் புறத்தே நிலையின்றி அலைந்துகொண்டிருந்தது.

மனைவியைக் கொன்ற விதேகன் சிறிது காலத்திற்குப் பின் மாண்டனன். ஒரு வைசியன் மகனாகப் பிறந்தான். சுதர்சனன் என்பது அவன் பேர். வியாபாரம் புரிந்து பொருளீட்டி மனைவியுடன் சீரும் சிறப்புமாக வாழ்ந்தான். ஒரு நாள் அவன் வீட்டிற்கு ஒரு மாந்திரீகன் வந்திருந்தான். அவன் அந்த வைசியனுக்கு நண்பனானான். "அப்பனே! உன்னை ஒரு பேய் தொடர்ந்து கொல்லுவதற்கு முயலுகின்றது. அப்பேயால் உனக்கு மரணம் நேரும். இந்தக் கத்தியில் மந்திர உரு ஏற்றி வைத்துளேன். இதனை இடையில் சொருகி வைத்துக் கொள். இக்கத்தி யுன்பால் இருக்குமாயின் அப்பேய் உன்னை அணுகாது" என்று கூறி ஒரு மந்திரவாளை நல்கிச் சென்றனன். வைசியன் அது முதல் அவ்வாளைத் தற்காப்புக்காக இடையில் வைத்திருப்பானாயினன்.

சுதர்சனன் வியாபார நிமித்தம் அடிக்கடி அயலூர் செல்லுவான்; சரக்குகளைக் கொள்முதல் புரிந்து காஞ்சிபுரத்தில் கொணர்ந்து விற்பான். ஒருநாள் திருவாலங்காடு சென்றான். அங்கே பண்டங்களை விற்றான். ஊருக்குத் திரும்பினான். மாலை நேரம்; எப்படியும் வேகமாகக் காஞ்சீபுரம் சேர்ந்துவிடலாம் என்று கருதி வேகமாகப் புறப்பட்டான்.

திருவாலங்காட்டிலேயுள்ளவர்கள், "தம்பீ! இவ்வூரின் அருகே பேய் ஒன்று உலாவுகின்றது. சூரியன் மேற்கடலையணுகி விட்டான். இனி நீ காட்டு வழியில் காஞ்சிபுரம் போவது சரியன்று. நாங்கள் இரவில் பேய்க்கு அஞ்சி வெளியே செல்லுவதில்லை. நீ இன்றிரவு இங்கு தங்கிவிட்டு நாளைக் காலையில் புறப்பட்டுச் செல்லுதி" என்று கூறித் தடுத்தனர்.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.

என்றபடி விதி வழியே மதி செல்லும் அல்லவா? சுதர்சனன் ஊரவர் உரையைப் பொருட்படுத்தினானில்லை. "பேயாவது? பிசாசாவது? சுத்தப் பயித்தியங்கள்; பேய்க்கு அஞ்சுகின்றவன் நானன்று. என்னை அது என் செய்யும்? சும்மா இந்த வீண் பயத்தை விடுங்கள்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

திருவாலங்காட்டை விடுத்து அருகே உள்ள காட்டு வழியே சென்றுகொண்டிருந்தான். பொழுது மறைந்தது. இருள் நிறைந்தது. அப்பேய் பெண் வடிவங்கொண்டு அவன் முன் நின்றது. கண்வலை வீசி அவனை மயக்க முயன்றது. அவன் ஐயுற்றான். "இது பெண்ணா? அல்லது பேயா? இந்த இரவில் இருள் சேர்ந்த காட்டில் ஒரு பெண் தனியே இருக்க நியாயமில்லையே?" என்று எண்ணினான். உடம்பு நடுங்கியது; நடை ஒடுங்கியது. என் செய்வான்; திகைத்து நின்றான்.

பெண் பேய் அவன் அருகில் நெருங்கியது. சுதர்சனன் ஓடலானான். பேயும் அவனை ஓடித் தொடர்ந்து அவன் முன் நின்றது. இப்போது அவன் மனைவியின் வடிவத்தைக் கொண்டு நின்றது. இந்த மாயவடிவைக் கண்ட அவன் மேலும் கலக்கமுற்றான். அந்தோ என்று அலறினான்; மீண்டும் ஓடித் திருவாலங்காட்டிற்கு அருகில் உள்ள பழையனூர் சென்றான். பேய் வழியில் இருந்த கள்ளிக் கட்டையை எடுத்து குழந்தை வடிவாகச் செய்துமடியில்வைத்துக்கொண்டு அவனைத்தொடர்ந்துசென்றது.

பழையனூரில் வேளாள குலத்தினர் மிகுதியாக வாழ்ந்தனர். அவர்கட்குத் தலைவர்கள் எழுபதின்மர். அவர்கள் அம்பலம் என்னும் பொது இடத்தில் வாரந்தோறும் கூடி நியாயம் வழங்குவார்கள். எல்லோரும் அவர்களிடத்தில் தங்கள் குறைகளைக் கூறி நியாயம் பெறுவார்கள். அன்று அந்தப் பொது இடத்தில் எழுபதுபேரும் கூடியிருந்தார்கள்.

அங்கே சென்று சுதர்சனன் "பெரியோர்களே! இதோ இந்தப் பேய் என்னைத் தொடர்ந்து இடர்ப்படுத்துகின்றது; என்னைக் காப்பாற்றுங்கள்" என்றான்.

நீலிப்பேய், "அன்பும் ஆதரவும் படைத்த ஆன்றோர்களே! இவர் என் கணவர். நான் இவர் மனைவி; இவர் ஒரு விலைமகளின் வலைப்பட்டு என்னைப் புறக்கணிக்கின்றார். 'தையலார் மயலிற் பட்டோர் தமக்கோரு மதியு முண்டோ?' என்றபடி இவர் அறிவு இழந்து, தாலி கட்டிய மனைவியாகிய என்னை வெறுத்துத் தள்ளுகின்றார். அந்தோ! நான் என்செய்வேன்? பெண்களுக்குக் கணவன் தானே கதி. அடித்தாலும் உதைத்தாலும் இவர் பாதமே தஞ்சம். நான் எத்தனை விதமாக இவரிடம் அன்பாக நடந்தாலும் இவர் என்னை வேம்பாக நினைத்து வெறுக்கின்றார். கருணை நிறைந்த பெரியோர்களே! இவர் என்னை விரும்பாவிடினும் வெறுக்காமலிருந்தால் போதும்; வெறுத்தால் குழந்தையும் நானும் எங்கு சென்று வாழ்வோம்? எப்படி உய்வோம்? எனக்காக இரங்கவில்லையாயினும் இந்தக் குழந்தைக்காகவாவது இரங்க வேண்டாமோ? உங்களுக்குப் பல கோடி வணக்கம். இவருக்கு அறவுரை கூறி இவருடன் என்னைச் சேர்த்து ஆதரியுங்கள். இந்தக் குழந்தை அப்பா அப்பா என்று அலறுகின்றது. நான் அபலை; திக்கற்றவள். எனக்கு அன்னையுமில்லை; அப்பனுமில்லை. வேறு உறவு ஒருவருமில்லை. தாவிப்படரக் கொழு கொம்பிலாத தனிக்கொடி போல் தவிக்கின்றேன். காத்தருள்வது உங்கள் கடன்" என்றுகூறி முறையிட்டது. அவள் கண்களிலிருந்து முத்து முத்தாக நீர்த் துளிகள் சிந்தின. சோகமே உருவாக நின்றாள். அப்பேய் இத்தனை சாகசம் செய்தது.

அம்பலத்தார்கள், "அம்மா! அழாதே. மனதைத் திடப்படுத்திக்கொள். உன் துயரத்தை நடராஜப்பெருமான் கருணை

யால் மாற்றுகின்றோம்'' என்று ஆறுதல் கூறினார்கள். வணிகனைப் பார்த்து, "ஐயா! உம்முடைய வாக்குமூலம் யாது?'' என்று கேட்டார்கள்.

"பெரியோர்களே! இது பேய்; பெண்வடிவில் வந்து என்னைத் துன்புறுத்துகின்றது. இது கூறும் சொற்கள் அந்தணையும் பொய். என் உண்மையான மனைவி காஞ்சியில் இருக்கின்றாள். ஆகா! உலகில் என்ன என்ன இந்திரஜாலம் நடக்கின்றது. இதன் பொய் நடிப்பைக் கண்டு நீங்கள் ஏமாற வேண்டாம். இதனை அடித்து விரட்டுங்கள்'' என்றான் வணிகன்.

அம்பலத்தில் உள்ள வேளாளர்களுக்குத் தலை சுழன்றது. உண்மை புலப்படவில்லை. இருவர் கூறுவதில் எது சரி, எது பிழை என்று அறியாமல் திகைத்தார்கள்.

அம்மா! நீ இவரைக் கணவன் என்று கூறுகின்றாய்; இவர் இல்லை என்கின்றார். நாங்கள் யாருடைய சொல்லை நம்புவது? நீ இவர் மனைவி என்பதற்கு ஏதாவது சான்று உளதா? என்றார்கள்.

பெரியோர்களே! நன்றுகவுளது. உண்மையில்லாமலா பெண்மையுடன் கூடிய நான் மன்றுடுவேன். என்ன இருந் தாலும் நான் பெண்ணல்லவா! இவர் பொதுமகள் மோகத்தில் மதிமயங்கி என்னைக் கைவிட்டதுமன்றி பேயென்று நிந்திக் கின்றார். இது முறையா? இது தகுமா? இது தருமமா? ஐயோ என்மனம் பதறுகின்றது. உள்ளம் உருகுகின்றது. குதிரை தன் மீதிருந்த ஒருவனைக் கீழே தள்ளியது மன்றி குழியும் பறித்ததாம். அதுபோல் இவர் என்னைத் தள்ளியதுமன்றி பேய் என்று கூறி நிந்திக்கின்றார். தெய்வந்தான் இவருக்கு நற் சிந்தனையைத் தரவேணும். நான் முற்பிறப்பில் என்ன தீவினை செய்தேனோ? இவர் மனம் என் விஷயத்தில் கல்லாக மாறி விட்டது. தாலிகட்டிய மனைவியைத் தவிக்க விடலாமா? என்னை இவர் கொல்லவும் நினைக்கின்றார். நான் என் செய்வேன்? பெண்ணாகிய நான் எங்கு போவேன்? உங்களுக்கு ஒரு கோடி புண்ணியம் வரும். இவரையும் என்னையும் ஒன்று படுத்தி வையுங்கள். இவர் கணவன் என்பதற்கு என்ன சான்று என்று கேட்கின்றீர்கள். நான் எந்த வகையில் சான்று கூறுவேன்? இதோ என்மடியில் உள்ள பச்சிளங் குழவியே சான்று சொல் லும்'' என்று அழுது கொண்டே மடியில் இருந்த குழந்தையைக் கீழே இறக்கி விட்டாள்.

அப் பேயின் மாயத்தால் கள்ளிக் கட்டையாகிய அக் குழந்தை "அப்பா! அப்பா!'' என்று கூவியழுது கொண்டே தவழ்ந்து சென்று வணிகனுடைய காலைக் கட்டிக் கொண்டு அழுதது.

இந்த அதிசயத்தைக் கண்ட சுதர்சனன் திடுக்கிட்டான் அம்பலத்தாரை நோக்கி, "ஆன்றோர்களே! இப் பேயின் வஞ்சனைச் செயலை வகுத்துரைக்க வொண்ணுமோ? வரும் வழியில் கள்ளிக்கட்டையை எடுத்து இக்குழந்தை வடிவாகச் செய்து இம்மாயத்தைச் செய்கின்றது. இதுபேய்; சத்தியமாகச் சொல்லுகின்றேன். என் மனைவியன்று. என்னை இப்பேய் கொல்ல நினைத்து வந்துளது'' என்றான்.

எக்காலத்திலும் குழந்தை சாட்சி யாவரும் ஒப்புக் கொள்ளக் கூடியதாகும். ஆதலால் குழந்தையின் சாட்சியை சபையோர் கள் நம்பினார்கள். "ஐயா! எங்கள் பேச்சைச் சற்று கேளும். ஏதோ உங்களுக்குள் மனத்தாங்கல் ஏற்பட்டுளது. இன்று இரவு இருவரும் இந்த வீட்டில் ஒற்றுமையாக இருங்கள்; உங்களுக்குள் ஏற்பட்டுள்ள மனமாறுதல் அகலும்; இப்போது அகாலமாகிவிட்டது; விடிந்து நாளைக்கு உங்கள் குறைகளைக் கேட்டு ஒருமுடிவுக்கு வருவோம். ஆகவே இந்த இரவை இந்த அறையில் கழியுங்கள்'' என்றார்கள்.

சுதர்சனன், "அந்தோ! பெரியோர்களே! இதுபேய்; பேயுடன் நான் எப்படி தங்குவேன்! என் உயிரைப் போக்கி விடும் இப்பேய். வேண்டாம் என்னைக் காப்பாற்றுங்கள்'' என்றான்.

அம்பலத்தில் உள்ள வேளாளப் பெரியோர்கள், "செட்டி யாரே! நீர் சிறிதும் அஞ்ச வேண்டாம்; உன் உயிருக்கு ஆபத்து வர நாங்கள் சம்மதிக்க மாட்டோம். இன்றிரவு இந்த வீட்டில் தங்கியிரும். அப்படி உன் உயிர்போகுமேல் அவ்வுயிருக்குப் பிணையாக நாங்கள் எழுபதுபேரும் எங்கள் உயிரைத் தருவோம்'' என்று கூறித் தேற்றினார்கள்.

இருவருக்கும் உணவு படைத்தார்கள். தனி வீட்டில் அவர்களை இருக்குமாறு செய்தார்கள். நீலிப் பேய் "பெரியோர் களே! இதோ இவர் இடுப்பில் கத்தி வைத்திருக்கின்றார். அதனால் ஒருவேளை என்னைக் கொன்றாலும் கொல்லுவார். எனக்கு அச்சமாக இருகின்றது. ஆதலால் கருணை நிறைந்த நீங்கள் இந்தக் கத்தியை வாங்கிக் கொள்ளுங்கள்'' என்றது.

"ஐயா! வணிகரே! உமது இடையில் வாள் இருப்பதாக இந்த அம்மை கூறுகின்றாள். ஆகவே கணவனும் மனைவியும் களித்திருக்கின்ற வேளையில் கத்திக்கு வேலையில்லை. அந்தவாளை எம்மிடம் தாரும்; விடிந்தபின் பெற்றுக் கொள்ளும்'' என்றார்கள் சபையோர்கள்

வணிகன், "உத்தமப் பெரியோர்களே! இது எனக்கு ஒரு பெரியவர் தந்தது; இப்படி ஒரு பேய் தொடரும்; இந்தக்

கத்தி உன்பால் இருந்தால் பேயினல் இடர் வராது. என்று கூறித்
தந்த மந்திரவாள் இது. இந்தக் கத்தி என்பால் இருப்பதனுல்
தான் இப்பேய் என்னை அணுகிக் கோல்லாமல் இருக்கின்றது.
ஆகவே இக் கத்தியை நான் தரமாட்டேன்'' என்ருன்.

பேரியோர்கள், ''அப்பனே; அஞ்சாதே! உனக்கு ஒரு
ஆபத்தும் வராது. வாள் இருப்பதை நோக்கி இப் பேண் •அஞ்சு
கின்ருள். சதிபதிகள் ஒற்றுமையாக இருப்பதுவே அழகு. எங்கள்
சோல்லைத் தள்ளாதே; உனக்குத் தீங்குவர நாங்கள் ஒருப்படு
வோமா ? கத்தியைத் தந்துவிட்டு இங்கு இன்றிரவு மகிழ்ச்சி
யாகத் தங்குங்கள்'' என்று கூறி கத்தியை வாங்கிக்கோண்டு
இருவரையும் அந்த தனிவீட்டில் இருத்திவிட்டு அவர்கள் ஆறு
தலுடன் தத்தம் இல்லங்கட்குச் சென்ருர்கள். பேயின் மாயமறி
யாத அவர்களால் மேல் நிகழ இருப்பதை யறியமுடிய வில்லை.
கள்ளமறியாத உள்ளமுடைய அவர்கள் சென்றபின் என்ன
நிகழ்ந்தது ?.

நீலி வணிகனுடன் உள் சென்று தாளிட்டாள். பழிவாங்கச்
சமயம் வாய்ந்தது என்று மகிழ்ந்தாள். ''என் பிராணபதியே!
என் அன்புநிறைந்த ஆருயிர்க் காதலரே! உள்ளத்தைக்
கோள்ளை கோண்ட உத்தம ரத்தினமே! என்று கூறி அருகிலே
வந்தாள். கோர வடிவத்தைக் கோண்டது அப்பேய். அவனைப்
பிடித்துக் கிழித்துக் குடலை எடுத்து மாலையாகப் போட்டுக்
கோண்டது. வஞ்சினம் முடிந்தது என்று மகிழ்ந்து மறைந்து
சென்றது.

போழுது புலர்ந்தது. எழுபது வேளாளப் பெருமக்களும்
அங்கே குழுமினுர்கள். கதவு மூடிய வண்ணமே இருந்தது.
தட்டினுர்கள். திறக்கப்படவில்லை. நெடுநேரம் காத்திருந்தார்கள்.
கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தார்கள். வணிகன்
மாண்டு கிடப்பதைக் கண்டார்கள். அப்பேண்ணையும் குழந்
தையையுங் கண்டார்களில்லை. ''அந்தோ என்று அலறினுர்கள்.
பேயின் மாயத்தையறியாமல் பேதைகளானுேமே! இப் பழி
பாவத்திற்கு ஆளானுேமே! ஆலங்காட்டில் வாழும் அண்ணலே!
இவனுடைய மரணத்திற்கு நாங்கள் காரணமாக நின்ருேமே!
இப்பாவத்தை எங்ஙனம் தீர்ப்போம்? எங்கள் மனம் வேகின்றதே
இவன் கூறியது உண்மை. இவன் உயிர் போனல் நாங்கள்
எழுபதுபேரும் உயிர் தருவதாக உரைத்தோமே ?

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

என்று நாங்கள் படித்தோமே! அதன்படி நடக்க வேண்டாமா?
சத்தியம் பிறழ்ந்து உயிர் வாழலாமா! ஈசனே! மலைமகள்
நேசனே! சோற்சோர்வுபட மாட்டோம் எங்கள் குலத்திலே

சொன்ன சோல்லை மாற்றுவது இல்லை. பரம்பரையாகச் சத்திய
நெறியில் நிற்கின்ற நாங்கள் உயிர் வாழ்க்கையை விரும்பி,
வாய்மை தவற மாட்டோம்'' என்று உயிர் விடத் துணிவு
செய்தார்கள்.

அம்பலத்திற்கு எதிரே ஒரு பேரிய தீக்குண்டம் அமைத்
தார்கள். ஊரவர்கள் கூடி அவர்களைத் தோழுதார்கள். அழு
தார்கள். 'வேண்டாம். தீயில் விழவேண்டாம்; ஒருவனுக்காக
எழுபது பேர் மாள்வதா ? எழுபது குடும்பங்கள் தவிக்குமே!
மாண்டவன் ஆன்மா சாந்தியடையுமாறு ஏதாவது சாந்தி
செய்யுங்கள். வணிகனை நீங்களா கோன்றீர்கள் ? பேயின்
செயலுக்கு நீங்கள் என்ன செய்ய முடியும் ? ஆதலினல் நீங்கள்
நெருப்பில் வீழ்ந்து வீணே உயிர் விட வேண்டாம்' என்று கூறித்
தடுத்தார்கள்.

'ஊரவர்களே! நீங்கள் கூறுவது முறையன்று. 'உன்
உயிர் போனல் நாங்கள் எழுபது பேரும் உயிர் தருவோம்' என்று
வணிகனுக்கு நாங்கள் உறுதிமோழி கூறினுேம். அச்சோல்லுக்
காக நாங்கள் உயிரை விடுவது நியாயம். ஒரு சோல்லுக்காகத்
தானே அரிச்சந்திரன் மகனையும், மனைவியையும் விற்ருன்.
தானும் பறையனுக்கு அடிமையானுன். மயானங் காத்தான்.
ஆகவே அரிச்சந்திரன் வாழ்ந்த இப் பாரத நாட்டில் நாங்கள்
சத்தியுந் தவறக்கூடாது. நீங்கள் வருந்த வேண்டாம்; என்றும்
மரணம் உள்ளதுதானே. பூத உடம்பு போனுலும் புகழுடம்பு
நிற்கும்.

''எல்லா விளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு''

என்கின்ருர் போய்யில்புலவர். அனபடியால் நாங்கள் உயிரை
யீந்து நற்கதி புகுவோம்'' என்று கூறினுர்கள். விண்ணளவும்
வெந்தீ கோழுந்து விட்டேரிந்து கோண்டிருந்தது.

எழுபதுபேரில் ஒருவர் வேறு கருமமாக வயற்புறம்
போயிருந்தார். மற்றை அறுபத்தோன்பது பேரும் நீராடினுர்கள்;
நீறு பூசிக் கோண்டார்கள். ஆலங்காட்டு அண்ணலை வணங்கி
ஞர்கள். தீக்குழியை வலம் வந்தார்கள். திரு ஐந்து எழுத்தை
ஓதினுர்கள். அகமும் முகமும் மலர்ந்த வண்ணமாக அத்தனை
பேரும் தாமரையில் இறங்கும் அன்னங்களைப் போல் கோழுந்து
விட்டேரியும் அக்கினிக் குண்டத்தில் குதித்து விட்டார்கள்.
என்னே அவர்களின் மனவுறுதி ? வாய்மையின் தூய்மைதான்
என்னே ?

எழுபதின்மரில் ஒருவர் தனது கழனிகளை உழுது கோண்
டிருந்தார். இந்நிகழ்ச்சியை அவர் அறியார். நீலி பேண்ணுருவுடன்
சேன்று அவர்பால் இச்செயலையுரைத்து நீர்மட்டும் வாழலாமோ!

உம்மைச் சேர்ந்தவர்கள் மாண்டார்கள். வேளாளருக்குக் கோழுவே ஆயுதமாகுமே? என்று கூறி மறைந்தது. இதனைக் கேட்ட அவர் உழுகலப்பையின் கோழுவைக் கொண்டு தனது உயிரைப் போக்கிக் கொண்டார்.

விழுவேன் எனச் சென்று வீழ்ந்தாரில்
 ஓர் மைந்தன் வேறுபட
உழுவேரில் சென்று ஒருநீலி முன்கை
 உடைய வற்குக்
கொழுவே படைக்கலம் என்று சொலாமுனம்
 கூறிய சொல்
வழுவேன் எனப் பொன்று வல்லாளனும் தொண்டை
 மண்டலமே.

—படிக்காசுப்புலவர்.

தீக்குழியில் நெருப்பு சில நாட்கள்வரை அவியாமல் எரிந்த வண்ணமாகவே இருந்தது. புலவூர்மக்கள் வந்து வந்து வலம் வந்து வணங்கினுர்கள். கண்ணீர் சிந்தினுர்கள். உண்மைக்காக உயிர் கொடுத்த உத்தமர்களைப் புகழ்ந்தார்கள். அவர்கள் புகழ் என்றும் நிலைபெறும் என்று மகிழ்ந்தார்கள்.

இச்செயலை தமிழ் வேந்தர்கள் மூவரும் ஒற்றர்கள் மூலம் அறிந்தார்கள். அதிசயம் உற்ருர்கள். ஆருத்துயரங் கொண்டார்கள். நேரில் வந்து கண்டார்கள். கண்ணீர் பெய்தார்கள்; பேயை வைதார்கள். வியந்து கவிபாடினுர்கள்.

யாவரே காராளர் யாவர் இணை ஆவார்
நாவலோ நாவலோ நாவலோ—கோவைப்
பொருப்பால் அளந்தார்க்குப் போதுமே உண்மை
நெருப்பால் அமைத்தார்க்கு நேர்.

—சேரன்.

எல்லை பலகடந்திட் டெங்கும் புகழ்பூத்துத்
தொல்லை மனுக்காக்கத் தோன்றிற்றே—கொல்லை
வழியிலொரு பேய் நின்று வஞ்சனையால் செய்த
குழியிலெழு செந்தீக் கொழுந்து.

—சோழன்.

பிழைத்தாரோ காராளர் பேய்மகள் சொற்கேட்டுப்
பிழைத்தார்கள் அல்லர் பிழைதீர்த்தார்—பிழைத்தார்கள்
எல்லாருங் காண எரியகத்தே மூழ்கினுர்
எல்லாரும் இன்றும் உளர்.

—பாண்டியன்.

இந்த நிகழ்ச்சி நிகழ்ந்து ஆயிரம் ஆண்டுகள் ஆயின. இன்றும் இந்நிகழ்ச்சி நம் உள்ளத்தை உருக்குகின்றது. சத்தியத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. எண்ணுந்தோறும் மனம்

கரைகின்றது. நமது முன்னேரின் வாய்மை நெறி நம்மை உயர்த்துகின்றது. ஆ! ஆ! என்னே அவர்களது உறுதி? வாய்மையில் இருந்த திட்பந்தான் என்னே?

இந்த வரலாற்றிலிருந்து நாம் விளங்கிக்கொள்ளவேண்டிய சில நெறிகள்:

(1) விதேகன் மறுதாரம் புரிந்துகொள்ளாதிருப்பின் இந்த வேதனை அவனுக்கு வந்திராது. மறு தாரம் புரிந்து இளையாள் மோகத்தினுல் முத்தாளைக் கொன்ருன். அவ்வினை மறுபிறப்பில் மூண்டுவந்து மாண்டுபோகுமாறு செய்தது. ஆகவே தார மிருக்கத் தாரம் மணப்பது என்றும் பிழை.

(2) திருவாலங்காட்டில் உள்ளவர்கள் சுதர்சனனை நோக்கி, "மாலை நேரம். பேயால் இடர் வரும். போகாதே" என்ருர்கள். ஆன்ருேர் சொற்களைத் தட்டியதனுல் துன்புற்ருன். ஆதலின் நாலுபேர் நவின்றதைத் தட்டக்கூடாது.

(3) ஊழ் வந்து பைய உருத்து வருத்தும். ஊழை வெல்ல ஒருவராலும் ஆகாது. முன் செய்த தீவினையால் சுதர்சனன் மாண்டான். ஆகவே "நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம்" என்ற வள்ளுவர் வாக்கின்படி நாம் யாருக்கும் தீங்கு செய்யக்கூடாது. செய்யின் அது பின்னர் நம்பால் வந்து சேரும்.

(4) வேளாண் மரபில் வந்த எழுபதின்மரும் தாங்கள் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றும் பொருட்டு தீக்குழியில் வீழ்ந்து நற்கதி புகுந்தார்கள். அவர்களுடைய மனத்தின் உறுதியை அளக்கவல்லார் யார்? வாயிடை கூறியதற்காகத் தீயிடை வீழ்வது என்ருல் அது எளிதான கருமமா? அதனுல் சந்தான குரவர்களில் ஒருவராகிய உமாபதி சிவம் புகழ்ந்து பாடுகின்ற அளவில் அவர்கள் புகழ் ஓங்கியது.

மாறுகொடு பழையனூர் நீலிசெய்த
 வஞ்சனையால் வணிகன்உயிர் இழப்பத் தாங்கள்
கூறியசொல் பிழையாது துணிந்து செந்தீக்
 குழியில் எழுபதுபேரும் முழுகிக் கங்கை
ஆறணி செஞ்சடைத் திருவாலங்காட்டு அப்பன்
 அண்டமுள நிமிர்ந்து ஆடும் அடியின்கீழ் மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை எம்மால்
 பிரித்து அளவிட்டு இவளவு எனப் பேசலாமோ?

அன்றியும் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் தாம் பாடியருளிய தேவாரத்திலும் கூறுகின்றனர்.

"வஞ்சம் படுத்து ஒருத்தி வாழ்நாள் கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழையனூர் ஆலங்காட்(டு) எம்அடிகளே"

பல ஆண்டுகளுக்கு முன்னே சுப்பிரதீபக் கவிராயர் என்பார் ஒருவர் இருந்தார். **விறலிவிடு தூது** என அவர் ஒரு நூல் பாடி

இயைந்து தமிழ் என வந்தது. த-வல்லோசை; மி-மெல்லோசை; ழ்-இடையோசை. என்ன அழகு! பேரே இப்படி அமைந்திருந்தால் தமிழ் இலக்கண அமைப்பு, இலக்கியச் சுவை முதலியவைகள் எப்படியிருக்கும் என்பதைச் சிந்தித்து உணர்க.

தமிழின் பெருமையைச் சிந்திப்பாரின் எண்ணிக்கை குறைந்துவருகின்றது. கொஞ்சம் படித்தவுடன் முற்றுங் கற்றுவிட்டதாகத் தருக்குஞ் செருக்கும் உற்று இடர்ப்படுவார் பலரைக் கண்டு வருந்துகின்றேன். பத்துக் கம்பன் என்று புகழ்பெற்ற திரிசிரபுரம் மஹாவித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் இறுதிவரைத் தன்னைத் தமிழ் மாணவனாகக் கருதிவந்தனராம். அவர் தந்த பிச்சையல்லவா இன்று சிறிதாவது தமிழ் நலம் உலவிவருகின்றது.

அகர வுயிர் பதியையும், உயிர் மெய் பசுக்களையும், மெய் பாசத்தையும் ஆக பதி பசு பாசத்தை யறிவிக்கின்றது தமிழ்.

"அகரவுயிர் போல் அறிவாகி எங்கும்
நிகரில்இறை நிற்கும் நிறைந்து"

என்பது திருவருட்பயன்.

தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்ற எழுவகைப் பிறப்புக்களையும் தமிழில் உள்ள ஏழு வேற்றுமைகள் குறிக்கின்றன.

முற்காலத்திலே தமிழிலே வேட்கைகொண்டு தமிழாகிய தண்ணீரை அள்ளி அள்ளிப் பருகி, அமிழ்தினும் இனிய தமிழ்க் கடலிலே நீந்தி விளையாடிய பல புலவர்கள் வாழ்ந்தார்கள். அப்புலவர் வரிசையில் முன்னணியில் நின்றவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். அவருடைய பாடல்கள் ஒவ்வொன்றும் அருமை நிறைந்தது. வேலமரத்தில் இளங் கொழுந்தில் கரிய வயிர ரேகை ஓடுவதுபோல் சிவப்ரகாசருக்கு மாணவராக நின்றபோதே கவிதாசக்தியும் அதிசய புத்தியும் அமைந்திருந்தன.

பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பது என்பது பழமொழி. ஸ்தாலிபுலாக நியாயம் என்று வடமொழியில் கூறுவர். ஆகவே அவர் வாக்கில் வந்த ஒரு பாடலை எடுத்துக் காட்டி ஒருவாறு தமிழின் பெருமையை நினைவு கூர்வாம்.

சிவப்பிரகாசர் இளமையில் தமிழ் கற்பதில் அளவற்ற வேட்கையுடையவராக இருந்தார். அவருடைய அறிவாற்றலுக்கு ஏற்ற ஆசான் அமையவில்லை. திருநெல்வேலியில் வெள்ளி யம்பலவாணர் என்பவர் ஒப்பற்ற தமிழ் ஞாயிறாக அந்நாள் விளங்கினார். அவர் குமரகுருபரருடைய சீடர்; திருச்செந்தூர்க் கலம்பகம் முதலிய நூல்களைப் பாடியவர். அவருடை புகழ்க் கதிர் எங்கும் பரவியது. சூரியனுடைய ஒளியை விரும்பு சக்கிரவாகப் பறவைபோல் சிவப்பிரகாசர் அவரை நாடி ஓடினு

அவரைப் பணிந்து நின்றார். தமிழ்மொழியைப் பயிற்றி வைக்க வேண்டும் என்று இரந்தார்.

வெள்ளியம்பலவாண முனிவர் தன்னை யடுத்த தமிழ் மாணவனுடைய அறிவை அளந்து சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணினார்.

'தம்பி! இதுவரை ஏதாவது தமிழ் பயின்றிருக்கின்றனையா?''

"ஆம். சிறிது பயின்றுளேன்; தங்கள்பால் நிரம்பவும் பயில விரும்பி வந்துளேன்"

"நல்லது; ஏதாவது கவிபாடக் கற்றிருக்கின்றனையா?"

"குழறிக் குழறிக் கொஞ்சம் பாடுவேன்"

"கு" என்று தொடங்கி, 'கு' என்று முடிக்கவேண்டும். சிவ சம்பந்தமாக இருக்கவேண்டும். நேரிசை வெண்பாவாகவும் அமையவேண்டும். ஊருடையான் என்று இடையில் வரவேண்டும். பாடு"

"புலவர்க்கு வெண்பாப்புலி". எடுத்த எடுப்பிலே இந்தக் கடுமையான கட்டளை பிறந்தது. மாணவராகிய சிவப்பிரகாசர் உடனே அடியில் வரும் நேரிசைவெண்பாவைப் பாடினார். ஆ.ஆ. என்ன பாடல்? அழகிய அரிய தமிழ்ப்பாடல்.

குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழல்
முடக்கோடு முன்னமணி வாற்கு—வடக்கோடு
தேருடையான் தெவ்வுக்குத் தில்லையதள் மேற்கொள்ளல்
ஊருடையான் என்னும் உலகு.

இந்தப் பாடலைக் குறைந்தபட்சம் பத்து முறையாவது படியுங்கள். சொல்லழகு, நடையழகு, தொடையழகு, பொருளாழம் முதலிய எத்தனை அழகுகள். அத்தகைய பாடல்களைப் படித்தல்லவா ஒரு புலவர் பாடுகின்றார்.

"இருந்தமிழே உன்னால் இருந்தேனே வானோர்
விருந்தமிழ்தம் என்னினும் வேண்டேன்"

அவருக்கு தமிழில் இருந்த ஆர்வந்தான் என்னே. தேவர்களுடைய புதிய அமிர்தங்கூடக் கசக்கின்றதாம்.

இனி அந்தப் பாடலைப் பாருங்கள்.

"குடக்கோடு வான்எயிறு கொண்டாற்கு"

குடக்கு ஓடுவான் எயிறு கொண்டாற்கு. குண (கீழ்)திசையிலிருந்து குட (மேல்) திசை நோக்கிச் சென்று பொழுதை யளக்கின்றவன் சூரியன்.

சிவநிந்தை புரிந்த தட்சனுடைய யாகத்தில் அவிசை விரும்பிக் கலந்துகொண்ட அமரர்களுள் சூரியனும் ஒருவன். அமரர் அறியாமையை யகற்றும்பொருட்டு சிவபெருமான் வீரபத்திரரை தக்கனுடைய மகத்தையும் அகத்தையும் அழிக்கும் பொருட்டு

ஏவினார். வீரபத்திரர் யாகசாலை வந்தார். எதிர்ந்து நின்ற சூரியனுடைய பற்றுண்டாக்கினார். (பல் துண்டாக்கினார்). பற்றற்றான்மீது பற்றுண்டாக்கினார். பற்றுண்டாக்கிப் பரமன்மீது பற்றுண்டாக்கி யருள் புரிந்தார்.

இதனை இந்த முதல் வரி தெரிவிக்கின்றது. குடக்கோடு வானாகிய சூரியனுடைய, எயிறு - பல்லை, கொண்டவன் - சிவ பெருமான்.

"குடக்கோடு வான்எயிறு கொண்டாற்கு" "கேழல்
முடக்கோடு முன்னமணி வாற்கு"

கேழல்—பன்றி; முடக்கு—வளைவு. ஓடு—அதன் கொம்பு. இரண்யாட்சன் பூமியை யகழ்ந்து கடலில் கரைக்க முயன்றான். அப்போது திருமால் பன்றி யுருவமெடுத்து இரண்யாட்சனைக் கொன்று பூமியை நிலை நிறுத்தினார். திருவருளிலே தோய்வு இல்லாதவர் யாவர்க்கும் ஒரு பெரிய கருமஞ் செய்தவுடனே தான் என்ற அகந்தை வந்து முளைக்கும். திருமாலுக்கும் நான் என்ற தருக்கு வந்தது. நாம் இல்லையேல் உலகம் அழிந்திருக்குமே. ஆகவே நாமே உலகங்கட்கு முதல்வன் என்று அகந்தை கொண்டு நிமிர்ந்து நின்றார். தனது அடிமைகள்பால் அகந்தை வந்தால் அதனை அகற்றி யாட்கொள்வது ஆண்டவனது கடமை. "தேவரையும் மாலயன் முதற் றிருவினார்கள் யாவரையும் வேற டிமையாவுடைய எம்மான்" என்கின்றார் சேக்கிழார் பெருமான்.

உடனே சிவமூர்த்தி குமார மூர்த்தியை யனுப்பினார். குமாரக் கடவுள் விரைந்து வந்து தருக்கி நின்ற வராகத்தின் கொம்பைப் பிடித்துப் பம்பரம்போல் சுழற்றினார். அப்பொழுது திருமகள் வந்து வணங்கி மங்கலநாண் பிச்சை கேட்டனள். முருகவேள் திருவுளம் இரங்கி, வராக மூர்த்தியின் அகந்தையை மாற்றி, சிவனருளை ஏற்றி அதன் வளைந்த வெண்மையான கொம்பைக் கொணர்ந்து காணிக்கையாகப் பிதாவுடைய திருவடி மீது வைத்து வணங்கினார். மற்றுமுள்ளவர் அதனை அறிந்து உய்யும் பொருட்டு சிவபெருமான் திருமாலின் அக் கொம்பை மார்பில் அணிந்து கொண்டனர். தலையில் உள்ள பிறைமதியைப் போல் அதுவும் அழகாக விளங்கியது.

"பன்றியங் கொம்பு கமடம்புயங் கஞ்சுரர்கள்
பண்டை என்பங்க மணி பவர் சேயே"

என்று அருணகிரிநாதரும் திருப்புகழில் பாடுகின்றார்.

கேழல்—பன்றியினுடைய, ஓடு—வளைந்த தந்தத்தை, முன்னம் அணிவாற்கு—முன்னாள் அணிந்த சிவமூர்த்திக்கு என்பது இரண்டாவது வரியின் பொருள்.

இனி மூன்றாவது வரியைச் சிந்திப்போம்.

ஏவினார். வீரபத்திரர் யாகசாலை வந்தார். எதிர்த்து நின்ற சூரியனுடைய பற்றுண்டாக்கினார். (பல் துண்டாக்கினார்). பற்றற்றான் மீது பற்றுண்டாக்கினார். பற்றுண்டாக்கிப் பரமன்மீது பற்றுண்டாக்கியருள் புரிந்தார்.

இதனை இந்த முதல் வரி தெரிவிக்கின்றது. குடக்கோடு வானாகிய சூரியனுடைய, எயிறு - பல்லை, கொண்டவன் - சிவபெருமான்.

"குடக்கோடு வான்எயிறு கொண்டாற்கு"
"கேழல்
முடக்கோடு முன்னமணி வாற்கு"

கேழல்—பன்றி; முடக்கு—வளைவு. ஓடு—அதன் கொம்பு. இரண்யாட்சன் பூமியை யகழ்ந்து கடலில் கரைக்க முயன்றான். அப்போது திருமால் பன்றி யுருவமெடுத்து இரண்யாட்சனைக் கொன்று பூமியை நிலை நிறுத்தினார். திருவருளிலே தோய்வு இல்லாதவர் யாவர்க்கும் ஒரு பெரிய கருமஞ் செய்தவுடனே தான் என்ற அகந்தை வந்து முளைக்கும். திருமாலுக்கும் நான் என்ற தருக்கு வந்தது. நாம் இல்லையேல் உலகம் அழிந்திருக்குமே. ஆகவே நாமே உலகங்கட்கு முதல்வன் என்ற அகந்தை கொண்டு நிமிர்ந்து நின்றார். தனது அடிமைகள்பால் அகந்தை வந்தால் அதனை அகற்றி யாட்கொள்வது ஆண்டவனது கடமை. "தேவரையும் மாலயன் முதற் றிருவினார்கள் யாவரையும் வேறடிமையாவுடைய எம்மான்" என்கின்றார் சேக்கிழார் பெருமான்.

உடனே சிவமூர்த்தி குமார மூர்த்தியை யனுப்பினார். குமாரக் கடவுள் விரைந்து வந்து தருக்கி நின்ற வராகத்தின் கொம்பைப் பிடித்துப்பம்பரம்போல் சுழற்றினார். அப்போது திருமகள் வந்து வணங்கி மங்கலநாண் பிச்சை கேட்டனள். முருகவேள் திருவுளம் இரங்கி, வராக மூர்த்தியின் அகந்தையை மாற்றி, சிவனருளை ஏற்றி அதன் வளைந்த வெண்மையான கொம்பைக் கொணர்ந்து காணிக்கையாகப் பிதாவுடைய திருவடி மீது வைத்து வணங்கினார். மற்றுமுள்ளவர் அதனை அறிந்து உய்யும் பொருட்டு சிவபெருமான் திருமாலின் அக் கொம்பை மார்பில் அணிந்து கொண்டனர். தலையில் உள்ள பிறைமதியைப் போல் அதுவும் அழகாக விளங்கியது.

" பன்றியங் கொம்பு கமடம்புயங் கஞ்சுரர்கள்
பண்டை என்பங்க மணி பவர் சேயே"

என்று அருணகிரிநாதரும் திருப்புகழில் பாடுகின்றார்.

கேழல்—பன்றியினுடைய, ஓடு—வளைந்த தந்தத்தை, முன்னம் அணிவாற்கு—முன்னாள் அணிந்த சிவமூர்த்திக்கு என்பது இரண்டாவது வரியின் பொருள்.

இனி மூன்றாவது வரியைச் சிந்திப்போம்.

இனி இதன் தத்துவார்த்தத்தையும் உன்னுவோம். இறைவன் சத்து சித்து ஆனந்தம் என்ற மூன்று தன்மைகளையும் உடையவன். சச்சிதானந்தன்.

"சூரிய சந்திரர் உள்ளவரை" என்று சிலர் சாசனத்தில் எழுதுவார்கள்.

யாவத் சந்திர திவாகரः

என்பது வேதவசனம்.

ஆகவே நிலைபேற்றைக் குறிப்பவன் சூரியன். சத்து என்பது என்றும் உள்ளது.

என்றும் உள்ள சூரியனைத் தண்டித்து, சத்துக்குஞ் சத்தாக நிற்பவன் தான் என்பதை உணர்த்தினார்.

அத்தகைய சத்துப் பொருளுக்கு ஊர்—தில்லை. "மன்னு சிற்றம்பலம்" என்பார் சேக்கிழார்.

"குடக் கோடுவான் எயிறு கொண்டாற்குத் தில்லையூர்
கேழல் முடக்கோடு முன்னம் அணிவான்"

அறியாமை மேற்கொண்ட திருமாலை அடக்கி அறிவுச் சுடரை ஏற்றியதை இது தெரிவிக்கின்றது. எனவே சித்து சித்து—ஞானம்; ஞானம் வெண்மையைத் தரிக்கும். வெண்மையான தந்தத்தைத் தரித்தார்.

அஞ்ஞானம்—கருமை. கரிய யானையை உரித்து அதன் தோலை உடையாகக் கொண்டார்.

"கேழல் முடக்கோடு முன்னம் அணிவாற்கு அதள் உடை"

வடக்கோடு தேருடையானாகிய மன்மதன் ஆசையை விளைவிப்பான் அதனால் வருவது துக்கம். ஆசை நீக்கத்தினால் விளைவது ஆனந்தம்.

அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம் என்பார் திருவள்ளுவர். ஆசைக்கு மூலமாகிய மதனனை யழித்து, ஞானத்தினால் ஆனந்தத்தை யருளுபவர் சிவபெருமான். எனவே இது ஆனந்தத்தை யறிவிக்கின்றது. ஆனந்தம் அழிவில்லாதது. அழிவில்லாதது தருமம் ஒன்றே. 'தரிக்கச் செய்வது தருமம்'. ஆனந்தமூர்த்தி மேற் கொள்வது தருமமே விடை. ஆகவே தருமவிடை மீது வந்து அழிவற்ற ஆனந்தத்தை ஆன்மாக்களுக்கு அருளுவார்.

சத்து சித்து ஆனந்தம் என்ற மூன்றையும் உடைய முக்கட் பெருமானை மூன்று வரிகளில் தெரிவித்து அவருடைய மூன்று செயல்களையும் தெரிவிக்கின்றது. இந்த அரிய செந்தமிழ் இன்பக் கவி.

"வடக்கோடு தேருடையான் தெவ்வுக்கு மேற் கொள்ளல் ஆன்"

ஊருடையான் என்று நான்காவது வரியில் அமைத்து, ஊர் உடை ஆன் எனப் பிரித்து ஊர் தில்லை என்றும், உடை அதள் என்றும், ஆன் ஊர்தியென்றும் வைத்துப்பாடிய அவருடைய மதிநலத்தைச் சிந்தியுங்கள். இந்தக் கவி பாடிய அவர் வாழ்ந்த தமிழகத்தில் கொஞ்சம் படித்து விட்டு தலைக்கனம் ஏறலாமா? என்று கேட்கத் தோன்றுகின்றது.

உ
ஓம் குஹாய நம :



திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 21 } துன்முகி ஆண்டு கார்த்திகைத் திங்கள் நவம்பர்-1956 { இதழ் 8

திருப்புகழ்

திருச்செந்தூர்

வெங்கா ளம்பா ணஞ்சேல் கண்பால்
மென்பா கஞ்சொற் குயில்மாலே
மென்கே சந்தா னென்றே கொண்டார்
மென்றே ளொன்றப் பொருள்தேடி
வங்கா ளஞ்சோ னஞ்சீ னம்போய்
வன்பே துன்பப் படலாமோ
மைந்தா ருந்தோள் மைந்தா அந்தா
வந்தே யிந்தப் பொழுதாள்வாய்
கொங்கார் பைந்தே னுண்டே வண்டார்
குன்ருள் கொங்கைக் கினியோனே
குன்ரே டுஞ்சூ ழும்பே ழுஞ்சூ
ரும்போய் மங்கப் பொருகோபா
கங்கா ளஞ்சேர் மொய்ம்பா ரன்பார்
கன்றே வும்பர்க் கொருநாதா
கம்பூர் சிந்தார் தென்பால் வந்தாய்
கந்தா செந்திற் பெருமாளே.

21-22

பதவுரை

கொங்கு ஆர்=பூந்தாதுகளில் உள்ள, பை தேன் உண்டே=பசுமை யான தேனை உண்டு, வண்டு ஆர்=வண்டுகள் நிறைந்துள்ள, குன்றுள் கொங்கைக்கு இனியோனே=வள்ளிமலையில் வாழுகின்ற வள்ளியம்மையா ருடைய தனங்களுக்கு இனிமையானவரே! குன்றேடும்=ஏழுமலைகளும், சூழ் அம்பு ஏழும்=சூழ்ந்துள்ள ஏழு கடல்களும், சூரும் போய் மங்க=சூரபன்மனும் வலிமை குன்றியழியுமாறு, பொருகோபா= போர் செய்து சினந்தவரே! கங்காளம் சேர் மொய்ம்பார்=எலும்புக் கூட்டை யணிந்த தோளையுடையவராகிய சிவபெருமானுடைய, அன்பு ஆர் கன்றே=அன்பு நிறைந்த பாலகரே! உம்பர்க்கு ஒரு நாதா=தேவர்கட்கு ஒப்பற்ற தலைவரே! கம்பு ஊர் சிந்து ஆர் தென்பால் வந்தாய்=சங்குகள் தவழும் கடலுடன் கூடிய தென் திசையில் வந்து அமர்ந்தவரே! கந்தா=கந்தக் கடவுளே! செந்தில் பெருமாளே=திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள வரே! பெருமையிற் சிறந்தவரே! வெங்காளம்=வெப்பமான நஞ்சு, பாணம்=அம்பு, சேல்=மீன் என்ற இவைகளைப் போன்ற, கண்=விழிகளையும், பால்=பால், மெல்பாகு=மென்மையான சர்க்கரைப் பாகு என்ற இவை போன்ற, அம் சொல்=அழகிய சொற்களையும், குயில்=குயில் போலவும், மாலை=மாலையிருள் போலவும் கருமையுடைய, மென் கேசம்=மென்மையான கூந்தலையும், என்றே கொண்டார்=ஆகிய இவைகளைக் கொண்டவர்களாகிய பொதுமாதர்களது, மென் தோள் ஒன்ற=மெல்லிய தோள்களில் பொருந்தும் பொருட்டு, பொருள் தேடி=பொருளைத் தேடிக்கொண்டு, வங்காளம்=வங்காளதேசத்திற்கும், சோனம்=சோனக தேசத்திற்கும், சீன=சீனதேசத்திற்கும், போய்=சென்று, வன்பே துன்பப்படலாமோ=கொடிய துன்பங்களை யநுபவிக்க லாமோ? மைந்து ஆருந் தோள்=வலிமை நிறைந்த தோள்களையுடைய, மைந்தா=குமாரக் கடவுளே! அந்தா=அழகனே! வந்தே இந்தப் பொழுது ஆள்வாய்=அடியேன் முன் வந்து இப்போதே ஆட்கொண் டருளுவீர்.

பொழிப்புரை

மணம் பொருந்திய மலர்களிலேயுள்ள பசுந்தேனை யுண்டு வண்டுகள் நிறைந்த மலையில் வசிக்கின்ற வள்ளியம்மை தனங் கட்கு இனியவரே! ஏழுமலைகளும், ஏழுகடல்களும், சூரபன்ம னும் வலி குன்றிக் கதறுமாறு சினந்து போர் புரிந்தவரே! எலும்புக் கூட்டை யணிந்த தோள்களையுடைய சிவபெருமானுக்கு அன்புடைய புதல்வரே! தேவர்கட்கு ஒப்பற்ற தலைவரே! சங்குகள் உலாவுகின்ற கடலுடன் கூடிய தென்திசைக்கு வந்த வரே! கந்தப்பெருமானே! செந்தில் மேவிய பெருமிதம் உடைய வரே! வெப்பமான நஞ்சையும் அம்பையும் மீனையும் ஒத்த கண் களையும், பாலையும் இனிய கற்கண்டின் பாகையும் ஒத்த அழகிய

சொற்களையும், குயில் போலவும் இருள்போலவும் கருமை நிற முடைய மெல்லிய கூந்தலையும்கொண்ட பொதுமாதர்களுடைய மென்மையான தோள்களைச் சேரும்பொருட்டு, பொருளை நாடி, வங்கநாடு, சோனகம், சீனம் முதலிய தேசங்களுக்குச் சென்று மிகுந்த துன்பத்தை அடியேன் அடையலாமோ? ஆற்றல் அமைந்த திருப்புயங்களையுடைய குமார மூர்த்தியே! அழகரே! அடியேன்முன் இப்போதே வந்து ஆட்கொண்டருளுவீர்.

விரிவுரை

வேங்காளம் பாணஞ் சேல் கண் :—

மகளிருடைய கண்களுக்குப் பல உவமைகள் உண்டு. அவற்றுள் இங்கு நஞ்சு, கணை, மீன் என்ற மூன்றையும் எடுத்து அடிகள் உரைக்கின்றனர்.

வெப்பமான நஞ்சுபோல் தமது மயலில் வீழ்ந்தாரைக் கொல்லுந் தன்மையுடையது விலைமகளிருடைய கண்கள்.

பாணம் போலே பாயுந் தன்மையுடையது;
மீன் போலே பிறழுந் தன்மையுடையது;

பால் மேன்பாகஞ் சோல் :—

அவ்விலைமகளிருடைய மொழி பாலையும் மென்மையான சர்க்கரைப் பாகையும் ஒத்து காமுகர்க்கு இனிக்கும். அம்மொழி யில் உருகி மயல் பெருகி மதிமயங்கி கதி விலகி கலங்குவர்.

பாலென்பது மொழி பஞ்சென்பது பதம் பாவையர்கண்
சேலென்பதாகத் திரிகின்ற நீ செந்திலோன் திருக்கை
வேலென்கிலை கொற்றமயூர மென்கிலை வெட்சித் தண்டைக்
காலென்கிலை நெஞ்சமே எங்ஙனே முத்தி காண்பதுவே.

—கந்தரலங்காரம்.

குயில் மாலை மேன்கேசம்:—

மெல்லிய கேசம் (கூந்தல்) மிகுந்த கருமையுடன் இருக்கும். அதற்கு உவமை குயிலும் இருளும்; குயில் போன்ற கருமை; இருள் பூசியது போன்ற கருமை

இருள்போன்ற கூந்தல் மேலும் மையல் இருளைத் தந்து ஆணவ இருளுக்கு அனுகூலம் புரியும். இருள் நிறைந்த இடத் தில் பொருள் இன்னது என்று விளங்காததுபோல் கூந்தலின் இருளில் மதிமயங்கியோர்க்கு செய்வன எவை; தவிர்வன எவை என்று விளங்காது. நான் யார்? எங்கிருந்து வந்தேன்? எதற்காக வந்தேன்? இந்த உடம்பு எவ்வாறு வந்தது? உடம்பு தானே வராதன்றே? ஒருவன் தந்து வந்ததாயிற்றே? தந்தவன் எதன் பொருட்டுத் தந்தான்? தன் பொருட்டுத் தந்தானா? என்

பொருட்டுத் தந்தானா? உடம்பு பெற்றதன் பயன் எது? உடம்பைத் தந்தவன் யாவன்? அவன் தன்மைகள் எவை? அவனுக்கும் எனக்கும் என்ன தொடர்பு? அவனை யறிந்தவர் யார்? அறியும் நெறிகள் எவை? என்பனவாதி நற் சிந்தனைகள் தோன்ற, அங்கே ஒரு ஞான ஒளி தோன்றும். அந்த ஞான வொளியில் உண்மைப் பொருள் தோன்றும்.

அந்த ஒளியைப் பெறுவதற்கு ஒவ்வொருவரும் முயலுதல் வேண்டும். அந்த ஒளி ஒரு மலைபோல் தோன்றி, அவ்வொளி மலைமேல் அன்புக் கூட்டிலிருந்து வெளிப்பட்டு ஆனந்த ஆறு பாய்ந்தது. அங்கு எல்லாம் அற்ற இனிய தனி நிலையைத் தெளிய அருணகிரிநாதருக்கு ஐயன் - பன்னிருகையன் உபதேசித்துவிட்டான். ஆ! ஆ! அந்த ஆனந்தம் எத்தன்மையதோ?

ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததோ ரானந்தத் தேனை அநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பியவா! முகமாறுடைத் தேசிகனே.

—கந்தரலங்காரம்.

அந்த ஒளியைப் பெறாதார் பொதுமகளிருடைய கூந்தலாகிய இருளில் மருளுற்று அருளற்று அல்லற் படுவர்.

மென்றோ ளொன்றப் பொருள்தேடி :—

மென் தோள் ஒன்ற:— ஒன்றுதல்—பொருந்துதல்; பொதுமகளிருடைய மெல்லிய தோளைப் பொருந்தும் பொருட்டு அவர்களுக்கு அள்ளிக் கொடுக்கப் பொருள் வேண்டுமன்றோ? ஆகவே அருளை மறந்து பொருளைநினைந்து அப்பொருளைத் தேடும் பொருட்டு மாந்தர் பலர் அலைகின்றனர்.

தூயவழியில் பொருள் தேடினாலுங் குற்றமில்லை; தீய வழியில் பொருளையீட்டுகின்றார்கள். பலரை இம்சித்தும் பொய்யும் புனை சுருட்டும் புகன்றும், களவுசெய்தும், பிறருடைய வயிற்றிலடித்தும் அழிகின்ற பொருளைத் தேடுகின்றனர். அதனால் இம்மையில் பழியும் மறுமையில் பாவமும் எய்துகின்றன. இங்ஙனம் பாவ வழியில் தேடிய பொருள் மிகுதியைக் காட்டிலும் வறுமையே நல்லது என்கிறார் வள்ளுவர்.

'பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.'

தீயவழியில் ஈட்டிய பொருளை மாதர்க்கும் மனைவி மக்கட்கும் ஈந்து இவன் பாவமூட்டையைச் சுமந்து கொண்டு நரக உலகிற் சென்று பன்னெடுங்காலம் பரதவிக்கின்றான். என்னே மதியீனம்? தேடிய பொருளைத் தான் கொண்டு போகின்றானுமில்லை. பிறர் பொருட்டுப் பொருள்தேடி தான் பாவத்தைச் சுமந்து செல்கின்றான். இவனைக்காட்டிலும் பேதையுளனோ? மிக்க பொருளுடையவர்களும் மேலும் பழிபாவங்கட்கு அஞ்சாது, வறியவர்கட்கு ஈயாது தீயவழிகளில் பெரும் பொருள் ஈட்டவே முயன்று கொண்டிருக்கின்றார்கள். அதனால் பிறவிப்பயனைப் பெறாது அவமே மாண்டு ஒழிகின்றனர்; பாவம்!

வங்காளம் சோனம் சீனம் போய் :—

அதிகபொருளை யீட்டவேண்டு மென்ற பேராசையால் தன் தேசத்தை விடுத்து அயல் தேசத்தையடுத்துப் போகின்றான். வங்கம் சோனகம் சீனம் முதலிய தேசங்கட்கெல்லாம் போகின்றான். அயல்தேசஞ் சென்று பஞ்சு படாதபாடு படுகின்றான்.

"பலதிக்கோடு திக்குவரை மட்டோடி மிக்கபொருள்
தேடிச் சுகந்த அணைமீதிற்று யின்று சுக
மிட்டாத ரத்துருகி வட்டார் முலைக்குளிடை
மூழ்கிக் கிடந்து மய லாகித்துளைந்து சில பிணியதுமுடி"

என்கின்றார் அடிகளார் பழநித் திருப்புகழில்.

வன்பே துன்பப்பட லாமோ :—

நிதிநாட்டம் உடையானுக்குக் கதி நாட்டம் ஏற்படாது. "நிதியை நினைந்து உனைமறந்த மதியை நினைந்து அழுவேனோ? விதியை நினைந்து நிமலானந்தக் கதியை மறந்து இருள் விழைந்த அழுவேனோ?" என்கின்றார் இராமலிங்க அடிகளார்.

பொருளாசையால் பெருந்துன்பம் எய்தும். இரவு பகலாக அலையச் செய்யும் பொருளாசை; செய்யாத வினைச் செயல்களைச் செய்யச் செய்யும்.

அருணகிரிநாதசுவாமிகள் ஆண்டவனை நோக்கி "பெருமானே! இப் பொருளாசையால் அடியேன் பெருந்துன்பத்தை யடையலாமோ! அவ்வாறு அடைதல் கூடாது. ஆசையினின்றும் விலகி உய்யுமாறு தேவரீர் அருள்செய்யும்" என்று வேண்டுகின்றார்.

ஆனால் அருணகிரிநாதர் உள்ளபடியே பொருளாசையுடையவர் என்று அன்பர்கள் கருதிவிடக்கூடாது. அவர் ஆசாநிகளந் துகளாகப் பெற்றவர்; ஆசாபயோதியைக் கடந்து நின்ற அரும்பெருந் தவஞானி; உலகவர்க்குள்ள ஆசைப் பாட்டைக் குறித்து வருந்தி இப்பாடலைப் பாடுகின்றார். மாணவர் குற்றத்தை ஆசிரியனும், மக்கள் குற்றத்தை மாதாபிதாவும் ஏற்றுக் கொள்வதுபோல், உலகவர் குற்றத்தைத் தாம் ஏற்று இப்பாடலைப் பாடுகின்றார் என அறிக.

மைந்தாருந் தோள் மைந்தா:—

உலகைப் புரக்கும் வீர அரசனுக்கு வலிமை நிறைந்திருக்க வேண்டும். வலிமை தங்குமிடம் தோள். அதனுல்தான் இராமரை முதல் முதலாகக் கண்ட மிதிலை மாதர்கள் இது வீரம் உள்ள தோள்தானு? என்று எடுத்த உடனே முதலில் தோளை உற்று நோக்கினுர்களாம்.

" தோள்கண்டார் தோளேகண்டார் "

அதனுலேயே "அவருடைய தோள்வலி கூறுவோர்க்கே" என்கின்றுர் கம்பநாடர்.

ஒருநாட்டைக் காக்கின்ற மன்னவனுக்கு இத்தகைய தோள் வலி வேண்டும் என்றுல் அகில உலகங்களை யாளும் எந்தை கந்தவேளுக்கு எத்தகைய தோள்வலி யமையவேண்டும்? அளவிலாற்றல் அத்தோளில் அமைந்துளது. அது அலகில் அவுணரைக் கொன்ற பேராற்றல் படைத்தது.

" அலகிலவுணரைக் கொன்ற தோளென "
" முற்றியபனிரு தோளும் "

அதனுலேயே வாழ்த்த வந்த கச்சியப்பர் முதலில் அத் திருத் தோள்களை வாழ்த்துகின்றுர்,'ஆறிரு தடந்தோள் வாழ்க' என்று.

அத்தோள் அனைவரும் துதி செய்யும் அருமையுடையது. என்கின்றுர். "எவருந் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி"

மைந்து—வலிமை. ஆர்—நிறைதல்.

வலிமை முழுவதும் நிறைந்த மைந்தன் முருகன். இனிய அடியவர்களின் வினைப் பகைகளையும் ஆணவாதி பகைகளையும் அழிக்கும் ஆற்றல் படைத்தவன்.

அவனை வழிபடுவோர்க்குப் பகையினுல் வரும் அச்சம் இராது. கோள் நாள் கூற்று முதலிய இடர்கள் எய்தமாட்டா.

கந்தா :—

கந்தன்—பகைவர்களுடைய பராக்கிரமங்களை வற்றச் செய்பவன்; அகப்பகை, புறப்பகை என்ற இருபகைகளையும் போக்கி அருள்புரிபவன்.

வந்தே இந்தப் பொழுதாள்வாய் :—

"பெருமானே! நாளை, மறுநாள் என்று தவணை போடாமல் இப்பொழுதே என்முன் வந்து ஆட்கொள்வீர்" என்று சுவாமிகள் வேண்டுகின்றனர்.

ஆண்டவனைக்காண வேண்டும் என்ற ஆவல் உள்ளத்தில் துடி துடித்துக் கொண்டிருக்க வேண்டும். தண்ணீரிலே அமுந்திய ஒருவன் மூச்சுவிட முடியாமல் திணறுவதுபோல் எவன் ஒருவன் இறைவனைக் காண வேண்டும் என்று துடிப்பானே அவனுக்கு அத் துடிப்புள் இறைவன் தோன்றி யருள் புரிவான்.

இன்றிருப்பார் நாளையில்லை; வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோ; இந்த மலக்கூடு; "சாநாளும் வாழ்நாளும் யாரறிவார்? நேருநல் உளனுெருவன் இன்றில்லை. ஆனபடியால் எத்தனைக்கு எத்தனை விரைவில் முருகனுடைய காட்சியைக் காணலாம் என்ற ஆவலும் அளவுக்கு மேற்பட்ட காதலும் அமைதல் வேண்டும். அங்ஙனம் அமைந்த பாம்பன் அடிகளார்க்கு ஆண்டவன் அண்மையில் கனவிலும் நனவிலும் காட்சி தந்தனன்.

அளவிறந்த காதல் பூண்ட ராமகிருஷ்ணர் தேவியை நேருக்கு நேராகத் தெரிசித்தனர்.

கோங்கார் பைந்தே னுண்டே வண்டார் குன்றுள் :—

குன்றுள்—குன்றில் பிறந்து குன்றில் வாழ்கின்ற வள்ளியம் மையார். மலை மகள் மகனுகிய மலைக்கு நாயகன் மலை மங்கை யாகிய வள்ளியை மணந்து மலையில் எழுந்தருளியிருக்கின்றுன்.

குன்றேடும் :—

சூரபன்மனுக்குத் துணையாக நின்ற ஏழுமலைகளையும் பெருமான் அழித்தனர்.

சூழம் பேழும் :—

உலகைச் சூழ்ந்துள்ள எழுகடல்களையும் வேலால் சுவற வைத்தனர்.

அம்பு—கடல்,

"எழுகடலும் எண் சிலம்பும் நிசிசரரும் அஞ்ச அஞ்சும்
இமையவரை அஞ்சலென்ற பெருமாளே"

சூரும் போய் மங்கப் பொருகோபா:—

சூர்—சூரபன்மன்.

போய்மங்க—வலிமையழிந்து குன்றுமாறு முருகன் மறக் கருணையால் கோபிப்பார் போல் கோபித்துப் போர் புரிந்தார்.

குற்றம் புரியும் குழந்தைகளை அன்னை சின முகங்காட்டித் தண்டித்துத் திருத்துவது போல் முருகவேள் சூராதியவுணரைத் தண்டித்து ஆண்டருளினுர். மொய்ம்பு—தோள்.

உ
முருகா

கற்பு

செல்வநாயகி

"அம்மா! நேரமாகின்றது. சீக்கிரம் நான் பள்ளிக்கூடம் போகவேண்டும். பழையது போடு," என்ருள் செல்வநாயகி.

"ஆமாம்! நீ படித்து பெரிய உத்யோகம் பார்க்கப் போகின்ருயோ! ஆண் பிள்ளைகள் மாதிரி உன்ஞல் உத்யோகம் பார்க்க முடியுமா? என்னமோ சற்று முன் பின் போனுல் என்னகுறை? வேலையாக இருக்கின்றேன். சற்று போறு" என்ருள் தாய்.

" அம்மா! அறிவு ஆற்றல் என்பவை ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானவை. உயிருக்கு ஆண் பெண் என்ற வேற்றுமை கிடையாது. ஆண் பெண் என்பது இந்த உடம்பினுலே வந்த பிரிவினை. தவிர படிப்பது கேவலம் உத்யோகத்திற்கும், பணம் சம்பாதிப்பதற்கும் அல்ல? கல்வி பயில்வது அறிவை வளர்க்கும் பொருட்டுத்தானே.

> தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு.

என்கின்ருர் திருவள்ளுவதேவர்.

நான் நன்ருகப் படிப்பேனே யாயின் பொன்னும் பொருளும் புகழும் தானே வரும். கல்வியின் பயன் அறிவு. அறிவின் பயன் ஒழுக்கம்; ஒழுக்கத்தால் வருவது உயர்வு" என்ருள்.

கங்காளஞ்சேர் மொய்ம்பார்:—

கங்காளம்—எலும்புக் கூடு. சர்வசம்மார காலத்தில் மாண்ட மாலயனுதி வானவர்கள் தமது அடியார்கள் ஆதலின் அவர்களுடைய எலும்புக் கூடுகளைச் சிவபெருமான் தோளில் தரித்துக்கொண்டு அருளினுர்.

அன்பார் கன்றே—

சிவமூர்த்திக்கு அன்புடைய இளங்குமாரர். கன்று என்ற சொல் மிக்க அழகாக அமைந்துளது.

கம்பூர் சிந்தார்—

கம்பு—சங்கு. சிந்து—கடல். சங்குகள் ஊர்ந்து தவழ் கின்ற கடல்.

கருத்துரை

வள்ளிமணவாளா! சிவகுமாரா! கந்தவேளே! மாதர் பொருட்டு பொருள் தேடி யலைந்து அடியேன் துன்புறமாட்டேன். இப்பொழுதே வந்து அருள் புரிவீர்.

சரி, சரி; சாப்பிட்டுப்போ! என்று அன்னை அன்னமிட்டாள். செல்வநாயகி உணவு செய்து பள்ளிக்குப் புறப்பட்டாள்.

செல்வநாயகி பாடத்தைக் கவனமாகப் படிப்பாள். ஆசிரியரிடம் அடக்கமாக நடந்து கொள்வாள். மாணவ மாணவிகளிடம் ஒற்றுமையாக இருப்பாள். மருந்துக்கும் பொய் சொல்ல மாட்டாள். கண்டவர்களுடன் கூடி விளையாடமாட்டாள். நல்ல உத்தமமான குணங்களை யுடையவளாக இருந்தாள். அந்த ஊரிலேயே அவளுக்கு நல்ல பேர். அடக்கமான பெண் என்று பேர் பெற்றிருந்தாள்.

ஒருநாள் தாயாரிடம் சென்று, "அம்மா! எங்கள் பள்ளிக் கூடத்தில் 'ட்ராமா' நடக்கப்போகின்றது. நாங்கள் தான் ட்ராமாவில் நடிக்கப் போகின்ருேம். அதற்கு ஆள் 1க்கு பத்து ரூபாய் தர வேணும்; பத்து ரூபாய் கொடு; அன்றியும் பரிமேலழகர் உரையுடன் கூடிய ஒரு திருக்குறள் வாங்க வேணும்; அதற்குப் பணங் கொடு" என்ருள்.

"குழந்தாய்! என்னை என்ன பணக்காரி என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனையா? உன் தந்தையோ இல்லை. நான் வீடுவீடாகச் சென்று கூலி வேலை செய்து உன்னைக் காப்பாற்று கின்றேன். உன் தந்தையிருந்தால் அந்த வாழ்க்கை வேறு. அவர் காலமாகி, பத்து வருடம் ஆகின்றது. நான் என்ன செய் வேன்? அம்மா! அது வேண்டும், இது வேண்டும், என்று என்னை அடிக்கடி வந்து கேட்கின்ருய்? என் கையில் காசு எது? வயிற்றுக்குப் பாடுபடுவதே பெரிதாக இருக்கின்றது. காலம் வர வர கஷ்டமாக இருக்கின்றது. கடன் தருவாருமில்லை. என்னைப் பணங் கேட்காதே; நாடகத்தில் சேர்ந்து நடிக்காவிட்டால் என்ன குறை? நமது வாழ்க்கையே ஒரு நாடகமாகத்தானே இருக் கின்றது. ஒருநாள் தள்ளுவது ஒரு யுகமாக இருக்கின்றது. அம்மா! வீட்டு வாடகை தரவில்லை யென்று வீட்டுக்காரன் நம்மை வறுத்துக் கொட்டுகின்ருன். வறுமைப் பிணியால் வாடுகின்ற நான் என்ன செய்வேன்?" என்ருள்.

செல்வநாயகி, "அம்மா! படிக்கின்ற எனக்குப் புத்தகம் வாங்க முடியவில்லை. படியாத பிள்ளைகளுக்கு நிரம்பப் புத்தகம் வாங்கிப் பெற்ருேர்கள் தருகின்ருர்கள். தனவந்தர்கள் வீணுன செலவுகள் லட்சாதி லட்சமாகச் செய்கின்ருர்கள். கல்விக்காக வறிய மாணவ மாணவிகட்குப் புத்தகம் வாங்கித்தர மனமில்லை. நான் உனக்குத் தொந்தரவு தரமாட்டேன். என்னைக் காப்பாற் றும் பொருட்டு நீ எத்தனையோ சிரமப்படுகின்ருய். நான் நன்கு அறிவேன். ஆண்டவன்தான் நமக்குத் துணை" என்று கூறிவிட்டுப் பள்ளிக்குச் சென்ருள்.

மகளுடைய எண்ணத்தை நிறைவேற்ற முடியவில்லையே என்று தாய்க்கு வருத்தம். மனம் நொந்துக் கண்ணீர் வடித்து

நின்றாள். அச்சமயம் விண்ணிலிருந்து ஒரு வைரத்தோடு
விழ்ந்தது. வானை நோக்கினாள் ஒரு கருடன் தன் காலில் எற்றிக்
கொண்டு வந்து எறிந்தது என உணர்ந்தாள். அவளால்
கண்ணை நம்பவே முடியவில்லை. அதனை எடுத்துப் பெட்டியில்
வைத்தாள். அவள் மனதில் மகிழ்ச்சி வரவில்லை. கவலையே
வந்தது. ‘‘அத் தோட்டிற்கு உரியவர்கள் யாரோ? அவர்கள்
பாவம் என்ன துன்பப்படுகின்றார்களோ? பிறர் பொருளை எட்டி
யாகப் பார்க்க வேணும் என்று பெரியவர்கள் கூறுவார்களே.
ஆகவே இது நமக்குப் பொருந்தாது; இதற்கு உடையவர்களிடம்
சேர்ப்பதுவே முறை; அவர்களை எப்படியறிவது?’’ என்று கருதி
சிந்தனைக் கடலில் ஆழ்ந்தாள்.

அந்தவூரில் ஒரு பெரிய தனவந்தனுடைய மகள் தனது
வைரத் தோட்டினைக் கழற்றி அருகே ஒரு தட்டில் வைக்க
அதனை உணவு என்று கருதிய கருடன் காலில் ஏற்றிக் கொண்டு
போனதாகவும், அதனைத் தொடர முடியவில்லை யென்றும்
செய்தி அந்த ஊரில் பரவியது.

அதனைக்கேட்ட செல்வநாயகியின் தாய் அந்த விலையுயர்ந்த
வைரத் தோட்டினைக் கொண்டு போய் அதற்கு உடையாரிடம்
தந்து நின்றாள். ‘‘ஐயா! ஒரு கருடன் காலில் எற்றிக் கொணர்ந்து
என்முன் இட்டது. உடையார்பால் சேர்க்க எண்ணினேன்.
இது தங்களுடையது தானே’’ என்றாள்.

அந்தத் தனவந்தன் அதிசயமடைந்தான். ‘‘வைத்தவன்
மறந்தால் எடுத்தவன் கொடுக்கின்ற காலமல்லவே இன்று?
இவர் வறுமையின் வடிவமாகக் காணப்படுகின்றார். பெரும்பணம்
படைத்த நமக்கே ஆசை விட்டபாடில்லை. மேலும் மேலும்
அல்வழியிலும் பொருளை யீட்டுகின்றோம். வறியவர்களைக் கண்டு
மனம் இளகுவதுமில்லை. அவர்களை வேலை வாங்கிக்கொண்டு
போதுமான கூலியும் தருவதில்லை. நமது மனோநிலைக்கும் இந்த
ஏழையின் மனோநிலைக்கும் ஏணி வைத்தால் கூட எட்டாது’’
என்று எண்ணினான்.

‘‘அம்மா! வணக்கம். உனது உத்தமமான குணத்தை மிக
வும் பாராட்டுகின்றேன். இது என்னுடைய குழந்தை கமலாம்
பாளுடையது. அவள் ஸ்நானஞ் செய்யும்பொருட்டுக் கழற்றி
வைக்கக் கருடன் எடுத்துக்கொண்டு போய்விட்டது. நல்ல
உடைமை நாடிக்கொண்டு வந்தது. இந்தக் காலத்தில் இப்படிப்
பிறருடைய உடைமை அகப்பட்டால் தேடிக்கொண்டு வந்து தர
மாட்டார்கள். அம்மா! மிகவுயர்ந்த குணம் உம்மிடம் உளது’’
என்றான்.

‘‘ஐயா! உடைமையை உடையவர்பால் தருவதில் பாராட்டு
தற்குரிய சிறப்பு யாதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.
இது ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கடமைதானே. இலவச

மாகத் தந்தால் பாராட்டலாம். சொத்து உம்முடையது. அதனை
உம்பால் சேர்க்கின்றேன். இதில் என்ன வியப்பு? நான் போய்
வருகின்றேன்’’ என்றாள்.

‘‘அம்மா! சற்றுப் பொறும். உங்களைக் கண்டது எனது
புண்ணியவசம். அடிக்கடி வாரும்; இந்தக் காலத்தில் கடமை
உணராத மடமை மிகுந்தவர்கள்தான் மலிவு. இந்த 25 ரூபாயை
வைத்துக்கொள்ளுங்கள்’’ என்றான்.

‘‘அண்ணலே! மன்னிக்கவேணும் எனக்குப் பணம் தேவை
யுண்டு. ஆனால் இதற்காகப் பணம் நான் வாங்கமாட்டேன்.
உங்கள் கருணையிருந்தால் போதும்’’ என்றாள்.

‘‘அம்மா! அப்படிச் சொல்லக்கூடாது. என் நன்றிக்கு
அடையாளமாக இதனை ஏற்றுக்கொள்ளுங்கள். மனம் உவந்து
தருகின்றேன். உங்கள் தங்கமான குணத்திற்கு என்ன தந்தாலும்
தகும். தயவுசெய்து மறுக்காமல் ஏற்றுக் கொள்ளுங்கள்’’
என்று கூறி மன்றாடினார்.

அதனை ஏற்றுக்கொண்ட அவள் தன் வீட்டிற்கு வந்தாள்.
மாலை மகள் வந்தவுடன் ‘‘குழந்தாய் பணம் பத்துருபாய் கேட்
டனையே? ஆண்டவன் கொடுத்தான். இருபத்தைந்து ரூபாய்
இந்தா; புத்தகம் வாங்கிக்கொள்; மற்ற பள்ளிச் செலவுகட்கு
வைத்துக்கொள்’’ என்றான்

இப்படி செல்வநாயகி மிகுந்த சிரமப்பட்டுப் படித்துக்
கொண்டிருந்தாள். அந்தப் பள்ளியில் முதல்தரமான மாணவி
யாக விளங்கினாள்.

ஒருநாள் அதிகாலை மன்னர் பெருமானுடைய அரண்மனை
வழியே செல்வநாயகி சென்றுகொண்டிருந்தாள். அரண்மனை
மாடி மீது சாளரத்தின் வழியே மன்னர் தெருவை எட்டிப்
பார்த்துவிட்டுத் திரும்பும்போது சாளரத்தின் மேல் மரத்தில்
மோதி தலையில் அடிபட்டது. சிறிது உதிரம் வந்து
விட்டது. உடனே மன்னவனுக்குக் கோபம் பொங்கியது.
‘‘இன்று எழுந்தவுடனே வீதியை எட்டிப் பார்த்தேன். இப்
பெண்ணின் முகத்தில் விழித்தேன். விழித்ததன் பயன் மண்டை
யில் அடிபட்டது. இப்படி நாள்தோறும் இப் பெண்ணின்
முகத்தில் விழித்தவர்கட்கு இடர் வரும். ஆதலால் இப்
பெண்ணைக் கொண்டுபோய் சிரச்சேதஞ் செய்து விடுங்கள்’’
என்று உத்தரவு செய்தான்.

உடனே ஒரு கொடிய சேவகன் வந்து செல்வநாயகியைப்
பிடித்து இழுத்தான். ‘‘ஐயா! என்னை ஏன் இழுக்கின்றீர்?’’
என்று கேட்டாள் செல்வநாயகி. ‘‘இது மன்னர்பிரான் உத்தரவு.
உன்னைக் கொல்லுமாறு அரசர் கட்டளை’’ என்றான் சேவகன்.